ஸ்ரீ மார்க்கண்டேய புராணம்

ஸாஹித்ய வாங்முகபூஷணம்
ஸ்ரீவத்ஸ. வே. ஸோமதேவசர்மா

அமரகலா விலாஸினீ மலர் 10

உ

ஸ்ரீரஸ்து

ஸ்ரீ மார்க்கண்டேய புராணம்.

ஆசிரியர்
ஸாஹித்ய வாங்முக பூஷணம்
ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவ சர்மா

சாந்தாச்ரமம்
154, தம்பு செட்டி வீதி, சென்னை.
ஆங்கீரஸஹு

காபிரைட்] 1932 [விலை 6 அணா.

அவதாரிகை.

உத்தம புருஷார்த்தமான மோக்ஷத்தை முக்யமாகவும் அதற்கு அநுகுணமாக அகில தர்மங்களையும் கதை மூலமாக வெளியிடும் பண்டைய நூல் புராணமெனப்படும். ஸ்ரீமந் நாராயண மூர்த்தியின் ஞானவதாரமான பகவான் வேத வ்யாஸர் பதினெண் புராணங்களையும் இயற்றி உளார். ப்ராஹ்மம், பாத்மம், வைஷ்ணவம், சைவம், பாகவதம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்நேயம், பவிஷ்யம், ப்ரம்மவைவர்த்தம் ,லைங்கம், வாராஹம், ஸ்காந்தம், வாமநம், கௌர்மம், மாத்ஸ்யம், காருடம், ப்ரஹ்மாண்டம் என அவைகளின் பெயராகும். உப புராணங்களும் பல உள.

இப்பதினெட்டு புராணங்களையும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளின் அநுக்ரஹத்தை முன்னிட்டு சென்னை தம்பு செட்டி வீதியிலுள்ள ஸ்ரீ ஸ்வாமிகள் ஸ்ரீ மடத்தில் சென்ற ப்ரபவ வருஷம் முதல் ப்ரவசநம் செய்து வருகிறேன். ஆங்கு கேட்பவர் மட்டிவில்லாமல் மற்றோரும் அபூர்வமான இப்புராண ரஹஸ்யங்களை அறிந்து ஆநந்திக்க வேண்டும் என எண்ணங் கொண்டோம்.

இச்சமயம் ஏழாவது புராணமான ஸ்ரீ மார்க்கண்டேய புராணத்தைத் தமிழில் சுருக்கமாக வெளியிட உத்தேசித்தோம். இது ஒன்பதாயிரம் ச்லோகங் கொண்டதென்றாலும் ஆறாயிரம் ச்லோகமே அச்சில் காணப்படுகிறது. 134 அத்யாயங்களிதிலிருக்கின்றன. மார்க்கண்டேய புராணத்தில் மார்க்கண்ட சரிதம் அணுவளவேனும் காணப்படாதது விந்தையாயிருக்கும். அவர் க்ரௌஷ்டிஎனும் சிஷ்யனுக்குக் கூறியதாதலின் இப் பெயரிடப்பட்டது.

பதினான்கு மன்வந்தர சரிதமே இதில் விசாலமாக வர்ணிக்கப்படுகிறது. 78 முதல் 90 வரை பதிமூன்று அத்யாயம் ஸ்ரீ தேவி மாஹாத்மியம் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ஸூர்ய வம்சத்தரசர்களது சரிதமும் குவலயாச்வ சரிதமெனும் நவ ரஸம் நிறைந்த சரிதமும் ச்ராத்த தர்மம். ஸதாசாரம் யோகம் ஞானம் வர்ணாச்ரமதர்மம் ஸ்திரீதர்மம் முதலிய அநேக தர்மங்களும் அழகாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றன.

படிக்கப் படிக்கப் பேரின்பத்தை அளிக்கும் அரிய நூலிது. ஏனைய தாத்காலிக நூல்களைப் படித்துப் பலர், விசேஷமாகப் பெண்மக்கள் மனது தர்மத்தில் ஆசைகொள்ளாதிருப்பதை ஆஸ்திக உலகறியும். படிக்க மிக ருசியாயிருப்பதுடன் பல தர்மங்களைப் புகட்டுமின்னால் எல்லோரும் படிப்பதற்காகவே மொழிபெயர்ப்பாக இல்லாமல் ரஸமான பாகத்தைத் தழுவி எளிய நடையில் எழுதப்பட்டது.

பதினெண் புராணங்களையும் இங்ஙனமே வெளியிட அமரகலா விலாஸனீ அவா கொண்டுளது. இச் சபையின் 9 மலர்களை ஆதரித்த ஆஸ்திகர் ஞானயக்ஞமான இவ்வுத்தம கைங்கரியத்தில் ஈடுபடுவரென்பது திண்ணம்.

தாங்களோர் நூலை விலை கொடுத்து வாங்குவதோடு நிற்காமல் இதைப் பூர்த்திசெய்ய நன்கொடை அளித்தோ பலர் வாங்கிப்படிக்கும்படி செய்தோ பேருதவி புரிய வேண்டும். இத்தகைய நூல்இதுவரை வெளிவராததால் லோகோபகாரமான இதில் ஆஸ்திகர் ஊக்கங்காட்டினாலல்லது இப்பெரும் பணியைப் பூர்த்தி செய்வது அஸாத்யம். ஆஸ்திகருள்ளக் கோயிலிலுள்ள ஸர்வேச்வரன் இதை ஆசீர்வதித்துப் பூர்த்தி செய்ய அவரடி பணிகிறோம்.

ஆஸ்திக பாததூளி,
வே. ஸோமதேவ சர்மா.

ஸ்ரீ மார்க்கண்டேய புராணம்.

ஓங் நமோ கணேசாய

ஜைமினி மார்க்கண்டேயரை யடுத்தல்.

தபஸ்வாத்யாய நிரதரான மார்க்கண்டேய மாமுனியை வணங்கி வ்யாஸ சிஷ்யரான ஜைமினி கேட்டார். மஹர்ஷே! நிர்க்குணனான மஹாவிஷ்ணு வாஸுதேவனாய்த் தோன்றக் காரணமென்ன? பாண்டவர்கள் ஐவரும் ஒரே பெண்ணை மணந்தது நியாயமா? தீர்த்த யாத்ரைக்குச் சென்ற பலராமன் ஏன் பிரஹ்மஹத்தி செய்தார்? இளம்பாண்டவர்கள் அகால மரணமடைந்ததேன்? இவைகள் இதிஹாஸோத்தமமான பாரதக் கதையிலிருந்து நன்கு விளங்க வில்லை. ஆதலின் தயைசெய்து இச்சங்கையை விளக்கவேண்டுமெனப் பிரார்த்தித்தார்.

ஜைமினே! இது நமது கர்மகாலமாதலால் விரிவாக உமக்கு இவைகளை எடுத்துரைக்க அவகாசமில்லை. ஆயினும் எவர் உமக்கு உரைப்பாரோ? அவரைச் சொல்கிறேன் கேள். பிங்காக்ஷன், விபோதன், ஸுபுத்ரன், ஸுமுகன் என்ற த்ரோண புதல்வர்கள் சாபத்தினல் பக்ஷிகளாய் இருக்கின்றனர். அவர்கள் ஸகல சாஸ்திரார்த்தங்களையும் கற்றுணர்ந்தவர்கள். தற்சமயமவர்கள் விந்தியமலையில் வீற்றிருக்கின்றனர். அவருகே சென்று ஸம்சயத்தை அகற்றிக் கொள்வாயாக என்றுரைத்தார். இதைக்கேட்ட ஜைமினி, ஸ்வாமிந்! முனி

குமாரர்கள் பறவையாவதற்குக் காரணம் யாதோ? என்று வினவ, மார்க்கண்டேயர் கூறலானார்.

முன்னொரு ஸமயம் தேவேந்திரன் அழகிய அப்ஸர ஸ்திரீகளோடுகூட நந்தனவனத்தில் உலவிவர நாரதமுனி அங்கு சென்றார். தக்கபடி அவரை வரவேற்றுப் பணிந்து இந்திரனும் மற்றோரும் ஆஸனமளித்து வீற்றிருக்கவேண்டினர். அவரும் அவர்களைக் குசலம் விசாரித்து ஆஸனத்திலமரும்படி கூறினர்.

சதமகன், ஸ்வாமின்! தங்களது முன்னிலையில் அப்ஸரஸ்ஸுகள் ஆட ஆஜ்ஞை யளிப்பீராக என்றார். நாரதர் சற்று யோசித்து இவர்களில் சிறந்த ஸங்கீதமும் உயர்ந்த அழகும் உள்ளவள் ஆடட்டும் என்றார். ஊர்வசி, மேனகை, ரம்பை, திலோத்தமை முதலியவர்கள் நானே சிறந்தவள் நானே சிறந்தவள் என சண்டையிட்டனர். இதற்கென் செய்வதென வகையறியாத இந்திரன் நாரதரைப் பார்த்து இவர்களிற் சிறந்தவர் யாரென நீரே கூறுமென்றான். நாரதர் இமயமலையில் தவம் புரியும் துர்வாஸரை மோஹவலையில் சிக்கும்படி செய்பவளே மேலானவள் என்றார். இதைக்கேட்டு அனைவரும் பயந்து என்னால் முடியாதென்று அகன்றனர். வபுஸ் என்ற அப்ஸரஸ், தான் பல ரிஷிகளின் மதியைமயக்கி ஸ்வாதீனப்படுத்தியதாக கர்வங்கொண்டு நான் சென்று வருகிறேனென கிளம்பினள்.

அம்மஹரிஷி தவம் செய்யும் இடத்திற்கு இரண்டு மைலுக்கு அப்பால் தங்கி இனிய ஸங்கீதம்பாட ஆரம்பித்தாள். இவளது குரலோசையைக் கேட்டு தவத்தையிழந்து கண்ணைத் திறந்து தபஸி தனது தவம் கலையக் காரணம் யாதென யோசித்தார். ஜ்ஞானதிருஷ்டியால் விஷயத்தை யறிந்து அருகிலேவந்த அப்ஸரஸ்ஸை நீ பதினாறுண்டு பக்ஷியாகப் பிறப்பாய் எனச் சபித்தார். அவளவர் காலில்விழுந்

குற்றத்தை மன்னிக்கும்படி வேண்ட நான்கு புதல்வர்களைப் பெற்றுப் பாரதப்போரில் பாணத்தால் அடிபட்டு பக்ஷிசரீரத்தைவிட்டு உந்நிலையை அடைவாய் என அனுக்ரஹித்தார்.

முனிகுமாரர்கள் பக்ஷியானார்கள்.

கருடனது வம்சத்தில் ப்ரலோலுபர் என்று ஒரு பக்ஷி இருந்தது. அதற்கு கங்கன், கந்தரன் என இரு குமாரர்கள் இருந்தனர். கங்கன் ஒரு ஸமயம் கைலாயகிரிக்குச் சென்றான். ஆங்கு வித்யுத்ரூபனெனும் ஓர் அஸுரன் தன் மனைவியுடன் வீற்றிருந்தான். அவன் இப்பக்ஷியைக்கண்டு பெண்களோடு புருஷரிருக்கும்இவ்விடத்திற்கு நீ ஏன் வந்தாய்? என்றான். இது எல்லோருக்கும் பொதுவான ஸ்தலமாதலின் நான் ஏன் இங்கு வரலாகாதென்று கங்கன் கூறினான். இதைக்கேட்டு கோபங்கொண்ட அரக்கன் பக்ஷியின் கழுத்தை யறுத்துவிட்டான்.

தனது ஸஹோதரன் கதியை அறிந்த கந்தரன் ஆராத் துயரமடைந்தான். என் அண்ணனைக்கொன்ற அரக்கனைக் கொன்றே திரும்புவேனெனச் சபதம்செய்தான். மதுபானத்தால் மதோந்மத்தனாய் இருக்கும் அந்த ராக்ஷஸனைக் கண்டான். அடங்காக் கோபங்கொண்டு தனது நீண்டுகூறிய அலகுகளால் ராக்ஷஸனது மார்பைப் பிளந்தான். மேனகையின் பெண்ணான அவன் மனைவி பக்ஷீந்திரனது பராக்ரமத்தைக் கண்டு வியந்து பயந்தாள்.

ஐயனே! என்னை மனைவியாகஏற்றருளும். நான் உமக்கேற்ற உருவத்தை எடுப்பேன் என்றாளவள். அங்ஙனமே அவனும் அவளை அங்கீகரித்தான். இவ்விருவர்களுக்கும் ஓர் பெண் குழந்தைப் பிறந்தது. அவளுக்கு தார்க்ஷி எனப் பெயரிட்டனர். இவளே தூர்வாஸரால் சபிக்கப்பட்ட வபுஸ் என்ற அப்ஸரஸ் ஆவாள். மந்தபாலனது புதல்வர்களில் துரோண

னென்பான் இவளை மணந்தான். தார்க்ஷி கர்ப்பமாயிருக்கும் போது ஒருநாள் ஆகாயத்தில் பறந்தாள். இவள் பறந்தவிடம் பாண்டவ கௌரவ யுத்தம் நடைபெறும் குருக்ஷேத்ரமாம். அங்கே கிரீடி, பகதத்தனை நோக்கி எய்த அம்பு, இவள்மேல்பட்டது. உடனே அவள் வயிற்றிலிருந்து நான்கு முட்டைகள் கீழே விழுந்தன. பக்ஷி உடலைவிட்டு வபுஸ் தன்னுருக்கொண்டு தேவலோகஞ் சென்றாள்.

அது ரணகளமாதலின் மாம்ஸமும் ரத்தமும் நிரைந்து பூ மெத்தைபோல் மெத்தென்றிருந்தது. ஆதலின் அம்முட்டை உடையாமல் அங்கே விழுந்தன. அதே ஸமயத்தில் ஓர் யானையின் கழுத்திலிருந்த பெரிய மணி அறுபட்டு விழுந்து அதை மூடிக்கொண்டது. கடவுள் அருளால் அங்கு நான்கு குஞ்சுகள் உண்டாகி கத்திக்கொண்டிருந்தன. இதற்குள் பாரதப்போர் முடிந்து சரதல்பத்தில் சயனித்துள்ள சந்தனு குமாரரிடம் பாண்டவர் தர்மோபதேசம் பெற்றனர். இதைக் கேட்க சமீகர் எனும் முனிவர் சிஷ்யர்களுடன் அங்கு வந்தார். இப்பறவைகளின் சப்தம் அவர் காதில்பட மணியைத் தூக்கி குஞ்சுகளைக் கண்டார். அன்புடன் அவர் அவைகளை யெடுத்து ஆச்ரமத்தில் வளர்த்து வந்தார். ஒருநாள் அவைகள் பூலோகத்தைச் சுற்றிப்பார்த்து மலர்ந்த முகத்துடன் வீற்றிருந்தன. அவைகளைக் கண்டு சமீகர் நீங்கள் ஸாமான்யமான பக்ஷிகளாகத் தோற்றவில்லை. உண்மையைக் கூறுங்கள், நீங்கள் யார் ? எனக் கூறினர்.

பக்ஷிகள் தனது பூர்வஜன்ம விருத்தாந்தத்தைக் கூற ஆரம்பித்தன. விபுஸ்வாந் என்ற ஓர் விப்ரசிரேஷ்டர் இருந்தார். ஸுக்ருஷர், தும்புரு என்று அவருக்கு இரு குமாரர்கள் தோன்றினர்கள். ஸுக்ருஷருடைய புதல்வர்களே நாங்கள் நால்வரும். நாங்கள் தந்தையுடன் தபோவனம் சென்று தர்ப்பை ஸமித்துக்களைச் சேர்த்து வந்தோம். அச்சமயம்

ஆங்கு ஓர் பயங்கரமான பக்ஷிராஜன் எங்கள் கண்முன் தோன்றிற்று. அது பசியால் வாடி மெலிந்த குரலுடன் எங்களைப் பார்த்து, முனிவர்களே! விந்திய சிகரத்திலிருந்து பெருங் காற்றினுல் அடிபட்டுக் கீழே விழுந்தேன். ஏழுநாட்களாக இரையின்றிவாடிய எனக்கு ஏதேனும் பசிக்குப் புசிக்கக் கொடுப்பீரோ? என்றது. எங்கள் தந்தை, பக்ஷிராஜனே! அப்படியே யாகட்டும். உனக்கு என்ன உணவு வேண்டும் என்ருர். மஹரிஷி வாக்தானம் செய்தபின், நரமாம்ஸமே எனக்குத் தேவையென்று பக்ஷிகூறியது. இதைக்கேட்ட மஹரிஷி வயதான பின்பும் ஊனை ஊனுல் வளர்க்கும் ஆசை உமக்கு அகல வில்லையோ? ஆயினும் நான் சொன்ன சொல்லை நிரைவேற்றுவது என் கடன். என்று கூறி புதல்வர்களைப் பார்த்து எவரேனும் இப்பக்ஷிக்கு உடலை யளிப்பீரா? என்ருர்.

நாங்கள் அதை மறுக்க தன் சொல்லைக் கேளாத தனயர்களைப் பார்த்து கோபம்கொண்டு நீங்கள் பக்ஷிகளாவீர்கள் என்று எங்களைச் சபித்தார். உடனே நாங்கள் அவர் காலில் விழுந்து தந்தையே! நமது உடலை நகரமாகக்கொண்ட அரசன் ஜீவன். புத்தி மனஸ் என்ற இரு அமாத்யர்களைக் கொண்டு ஒன்பது கோட்டைவாசல்கள் வழியாக அவன் உலவி வருகிருன். காமம் கோபம் லோபம் மோஹம் என நான்கு சத்ருக்களும் இவரது கிங்கர்களான இந்திரியங்களையும் நகரத்தையும் கொள்ளை கொள்கின்றனர். ஆதலின் அவர்களுக்கு வசமாகிய அரசனும், மோஹவலையில் சிக்கிக் கிடக்கிருன். அப்படியிருக்க யாரே உடலில் ஆசை கொள்ளாதவர்? உயிரைவிட உயர்ந்த பொருள் வேறு ஏதேனும் உண்டோ?

தேஹாபிமானம் கொண்டதற்காக எங்களைப் பக்ஷியாகும்படி சபித்து விட்டீர். எங்களை க்ஷமித்து சாபவிமோசனத்

துக்கு வழி கூறுமென வேண்டினேம். சொன்ன சொல்லை மாற்ற முடியாது; ஆயினும் எனது அருளால் ஸகல ஞானத்தையும் பெற்று விந்திய மலையில் சென்று மனுஷ்யர்களைப் போல் ஸகல நன்மைகளையும் அடைவீரென ஆசீர்வதித்தார்.

பிறகு அப்பக்ஷிக்குச் சொன்னபடியே எங்கள் தந்தை தனது உடலை ஸமர்ப்பணம் செய்தார். இதைக் கண்டு வியந்த தேவேந்திரன் பக்ஷி ரூபத்தை மாற்றி நிஜஸ்வரூபத்தைக் காட்டி முனிவரே! உம்மைச் சோதிக்க வந்தேன். உமது ஸத்யத்தைக் கண்டு வியந்தேன், என்று கூறி மஹர்ஷிக்கு ஞானத்தை யளித்து மறைந்தார். இங்ஙனம் மார்க்கண்டேயர் கூறி அப்பக்ஷிகளிடம் சென்று உமது ஸம்சயத்தை அகற்றிகொள் என்றார். ஜைமினி அவரை வணங்கி விந்திய மலைக்கு வந்தார். ஆங்கு ஓரிடத்தே வேதத்வனியைக் கேட்டு ஓர் குஹையில் நுழைந்து பக்ஷி வடிவமான மஹர்ஷிகளைப் பணிந்தார். அவர்கள் அதிதிக்கு அர்க்கயம் பாத்யம் முதலியவைகளை யளித்து ஆஸனத்திலமர வேண்டினர். ஜைமினியும் பக்ஷிகளை வணங்கி மார்க்கண்டேயரிடம் கூறிய சங்கைகளை நிவர்த்தி செய்யும்படி இவர்களை வேண்டினார்.

ஸந்தேஹ விளக்கம்

பக்ஷிகள் பரமாத்மாவைப் பணிந்து தனது குருவை வணங்கி பிரபஞ்ச ஸ்ருஷ்டியைக்கூறி நிர்க்குணனான பகவான் அவதரித்த காரணத்தை விளக்கினார்கள். தேவேந்திரன் ஒரு ஸமயம் தவஷ்டாவின் புதல்வனைக்கொல்ல அவர் கோபம்கொண்டு தன் சடையிலிருந்து ஓர் மயிரை எடுத்து ஹோமம் செய்தார். அதிலிருந்து இந்திரனைக் கொல்வதற்காக விருத்திராஸுரன் என்பவன் தோன்றினான். இந்திரன் அவனை ஸமாதானம் செய்து பாதி ராஜ்யம் அளிப்ப

தாகக்கூறி வஞ்சனையாகக் கொன்றுவிட்டார். அதனால் இந்திரனை ப்ரஹ்மஹத்தி சூழ்ந்தது. அவனுடலிலிருந்த வர்ச்சஸ் யமனிடமும், பலம் வாயுவினிடமும், அழகு அச்வினிகளிடமும் சென்றது.

இங்ஙனம் இந்திரன் பலத்தை இழந்ததையறிந்து அஸுரர்கள் அவனியில் அரசர்களாகத் தோன்றினர்கள். பாபிகளான இவர்களது சுமையைச் சுமக்கமாட்டாமல் பூதேவி கோரூபம்கொண்டு விஷ்ணுவைச் சரணமடைந்தார். அவர் கிருஷ்ணனாக அவதரித்ததோடு லோகோபகாரமாக இந்திரனைக் குந்தியினிடம் பாண்டவர்களாகப் பிறக்கச் சொன்னர். அவருடைய வர்ச்சஸ் தர்மனாகவும், பலம் பீமனாகவும், இந்திரனது பாதியம்சம் அர்ஜுனனாகவும், அழகு நகுல ஸஹதேவனாகவும், தோன்றிற்று.

நிர்க்குணராயினும் லோக க்ஷேமத்திற்காக பகவான் கிருஷ்ணனாக அவதரித்தார். பாண்டவர் ஐவராயினும் ஒரே இந்திரனது அம்சமாதலின், திரௌபதி ஒரே புருஷனை மணந்தவள் ஆவாள். பலராமர்தான் துர்யோதனாதிகளிடம் அன்பு கொண்டவர். தனது ஸஹோதரனான கிருஷ்ணன் பாண்டவரிடம் அன்பு பூண்டவர். கௌரவரோடு தான் சேர்வதானால் ஸ்ரீகிருஷ்ணனோடு போர் புரிவதாகுமென்றுணர்ந்து பாரதப்போரில் கலவாமல் தீர்த்த யாத்திரைக்குச் சென்றார். நைமிசாரண்யத்தில் புராண கதை நடந்து கொண்டிருக்கும்போது பலராமர் அங்கு சென்றார். எல்லோரும் எழுந்து நின்று ஆஸனமளிக்க ஸூதபுராணிகர் மட்டில் ஆஸனத்தில் அமர்ந்தபடியே இருந்தார். அதனால் கோபம்கொண்ட பலராமர் அவரைக் கொன்றார். உடனே அவருக்கு ப்ரஹ்மலோகம் கிடைத்தது.

இவ்வுண்மையை யறியாத மஹர்ஷிகளையும் மற்றோரையும் திருப்தி செய்துவைக்கவே பனிரண்டாண்டு பலராமரும் ப்ரஹ்ம ஹத்தியகல வ்ரதம் பூண்டார்.

இளம் பாண்டவர் இறக்கக் காரணம்.

த்ரேதாயுகத்தில் ஹரிச்சந்திர மஹாராஜன் மனுநீதி வழுவாமல் அரசு புரிந்து வந்தான். அவன் ஆக்ஷியில் துர்ப்பிக்ஷமோ, வியாதியோ, அகாலமரணமோ கிடையாது. ஓர் ஸமயம் அவ்வரசன் வேட்டையாட வனம் சென்றான். ஆங்கு ஓர் அபயம் அபயம் என்ற தீனத்வனியைக் கேட்டான். எனது ஆளுகையில் யார் அபலைகளை ஹிம்ஸிப்பது? எவன், வஸ்திரத்தில் வன்னியைக் கட்டுகிறான்? இதோ வந்தேன்! வந்தேன்! என்று கூறிக்கொண்டே அரசன் அங்கு சென்றான். அந்த த்வனி விச்வாமித்ரரால் ஸாதிக்கப்படும் வித்யையினிடமிருந்து தோன்றியதாம். விச்வாமித்ரரது வித்யைக்கு விக்னத்தைத் தேட விநாயகர் விரும்பினார். இவ்வரசனுள்ளே புகுந்து கார்யத்தை ஸாதிக்கக் கருதினார். ஆதலால் அரிச்சந்திரனது வாக்கிலிருந்து உக்ரமான இந்த த்வனி கிளம்பியது.

விச்வாமித்ரர் அருகில் வந்து அரசன் தனது குற்றத்தை உணர்ந்து தழை தழைத்த நாவுடன் ஐயனே! அறியாமல் அடியேன் செய்த பிழையை பொருத்தருள்க! ரக்ஷிப்பதும் கொடுப்பதும் க்ஷத்ரிய தர்மமென்பதைத் தாங்கள் அறியீரா? என்று பன்முறை வணங்கி வேண்டினான். விச்வாமித்ரர், க்ஷத்ரியா! யாருக்குக் கொடுக்கவேண்டும்? யாரைக் காக்கவேண்டும்? என்பதைச் சொல் கேட்போம் என்றார். ஹரிச்சந்திரன் மஹர்ஷே! மான்யரான தங்களைப்போன்ற முனிவருக்குக் கொடுக்கவேண்டும். ஆபத்திலடிபட்டோரைக் காக்கவேண்டும் என்றான். நல்லது நீ ராஜதர்மமறிந்தவனுபின் யாகதீக்ஷைபுரியும் எனக்கு தக்ஷிணை யளிப்பாயாக என்றார் முனிவர். வேறொன்றும் சபிக்காது தனத்தைக் கேட்ட தபோதனரைக்கண்டு அரசன் அகமகிழ்ந்து ஆர்ய!

அடியேனுடைய மனைவி மக்களையும் அகண்ட பூமண்டலத்தையும் மற்று மனைத்தையும் தங்களுக்கே தந்தேன் என்றான். மஹர்ஷி, ஸத்குணசில! மிக ஸந்தோஷம். உன் உடல் உன் மனைவி, உன் மகன், உன் தர்மா தர்மம் இவைகளை நீக்கி மற்றதை பேரன்புடன் பெற்று கொண்டேன். ஆயினும் யாக தக்ஷிணையை மட்டிலும் ஒரு மாதத்தில் கொடுத்துவிடு, இப்பொழுதே என் நகரத்தை விட்டு நட என்றார். அங்ஙனமே அரசன் கிளம்ப, உங்களது ஆடை ஆபரணங்களைக் களைந்து என்னிடமளித்து இம்மரவுரியைத் தரித்துக் கொள்ளுங்கள் என்று ரிஷி கூறினார். அரசன் அப்படியே செய்தான். முடிசூட்டிய மன்னன் முனிவரது வாக்கிற்குக் கட்டுப்பட்டு மனைவியுடன் கால் நடையாக வீதியில் செல்வதைக் கண்ட குடிகள் கண்ணீர்விட்டுக் கதறினர். இப்பரிதாப நிலையைக்கண்டும் இளகா மனமுடைய கௌசிகன் தடி கொண்டு மன்னன் மனைவியை வேகமாக நட என்று அடித்தார். அப்பொழுதும் அரசன் பொறுமையுடன் விதியை நினைத்துத் தனது கர்மாவை நொந்து விரைவாக அவளை அழைத்து சென்றான்.

தேவ பூமியான காசிமா நகரம் சென்று வேள்வி தக்ஷிணையை எப்படித் தேடுவோமென்று வேந்தன் சிந்தை கலங்கி நின்றான். உத்தம பத்நியான சந்த்ரமதி, நாத! எல்லா தர்மத்தையும் விட சிறந்தது ஸத்யமாகும். உயிரைப் பரி கொடுத்தாவது ஸத்யத்தைக் காப்பவர் ஸத்யலோகம் செல்வர். புருஷனுக்குப் பெண்களாலாகும் பயன் போகமும் புத்ரனுமாம். ஸத்புத்ரனைப் பெற்ற தாங்கள் கற்பிற்கழிவு இல்லாதபடி என்னை விற்று முனிவர் தனத்தைத் தரலாகாதோ? என்றான். இச்சொல் வஜ்ரம்போல் அரசனது செவியில் விழுந்ததென்றாலும் தர்மம் நிரைந்ததாதலின் அங்ஙனமே செய்ய அரசன் இசைந்தான். ராஜபத்நியை விலக்கு

வாங்குபவருண்டோ என்று நாவு கூசாமல் கேட்டான். வேண்டிய பொருளை அளித்து அவளை வாங்குவதாக ஓர் வேதியன் முன் வந்தான். அதைப்பெற்று அவனளித் தது அற்பதநம். தவத்தில் சிறந்த எனக்கு இது ஈடாமோ? என்றார் விச்வாமித்ரர். யாது செய்வதென்று தெரியாமல் அரசன் திகைத்து நிற்க; குழந்தை ரோஹிதன் அப்பா! பசிக்கிறதே! அம்மா அன்னமளிக்காமல் எங்கேயோ போகிறாளே! என்று அன்னையின் துணியைப் பிடித்திழுத்து அழுதான். அரசன் எதற்கென அழுவான்? மூர்ச்சித்துக் கீழே விழுந்தான். கருணையில்லாத அந்த பிராமணன் குழந்தையைக் காலால் உதைத்துக் கீழே தள்ளி சந்த்ரமதி! உன்னை யான் விலைக்கு வாங்கி விட்டேனல்லவா? எழுந்திரு! என் பின்னே வா? வீட்டைப் பெருக்கு. இப்பிள்ளையை அவனிடம் விட்டுவிடு என்றார்.

சந்த்ரமதி, ஸவாமின்! தங்களுக்கிஷ்டமான தநத்தைக் குழந்தைக்காக கொடுத்துவிட்டு பால்நாற்றம் மாறாப் பாலகனைத் தாயுடன் இருக்கும்படி தயை புரியும் என்றனள். அந்தணரும் அதற்கிசைந்தார். கோபமே உருவாக அமைந்த கௌசிகர், அரசே இன்று மாலைக்குள் நீ தனமளிக்காவிடில் உன்னைச் சபித்து விடுவேனென்றார். வேறு வகையின்றி வேந்தன் தன்னைத்தானே விலை கூறினான். ஓர் சண்டாளன், வேண்டிய தநமளித்து இவரை விலைக்கு வாங்கினான். கௌசிகரது செயலைக்கண்டு கோபிக்காதவரில்லை. மன்னனது ஸத்யத்தைக்கண்டு மகிழாதவரில்லை. சந்தரமதியையும் ரோஹிதனையும் பார்த்து பரிதபிக்காதவரில்லை. கல்லும் கரைந்தது. பாரையும் பிளந்தது. விச்வேதேவரில் ஐவர் இதைப்பார்த்து ஸஹியாமல் இம்முனிவன் எந்த கதியை அடைவனோ? இப்பாபியின் உள்ளம் கல்லோ? வஜ்ரமோ? எனக் கடிந்து பேசினர். இதைக்கேட்டு அடங்காக் கோபங்

கொண்ட விச்வாமித்ரர் விச்வேதேவர்களைப் பார்த்து என்ன சொன்னீர்கள்! கௌசிகனது தவத்தை அறியீரோ? நீங்கள் பூமியில் மானிடராகப் பிறந்து ஸந்ததி இல்லாமல் அற்பாயுளாக இறப்பீர்கள், என சபித்தார். அவர்களே பாண்டவர்களுடைய குமாரர்களாகப் பிறந்து இளமையிலேயே அச்வத்தாமாவால் கொல்லப்பட்டனர்.

ஸத்ய ஹரிச்சந்தரன் சண்டாளனிடம் அடிமைபூண்டு சுடுகாடு சென்று தோட்டி வேலை செய்து வந்தான். வேண்டாமெனினும் வேந்தனுள்ளத்தே தனக்கு அடுக்கடுக்காக நேர்ந்த துன்பங்கள் தோன்றித் தோன்றி அவன் மனதை மிக க்லேசப்படுத்தின. ஒரு நாள் அரசன் உட்கார்ந்தபடியே சற்று உறங்கினன். தான் பல பிறவிகளில் பட்ட துன்பமும் யமயாதனையும் விச்வாமித்திரரது கோபமும், தனது அருமைப் புதல்வனது மரணமும் கனவிலே தோன்றின. திடுக்கிட்டு எழுந்தான். ஐயோ! அருமைக் குழந்தையின் கதியாதோ? என்று கலங்கி கடமையைக் கவனித்து வந்தான். இதனிடையில் அரசன் தங்களை அடிமையிலிருந்து விடுவிப்பரோ?என்று சந்தரமதியும் ரோஹிதனும் நினைத்து வருந்தி வந்தனர். பட்ட காலிலே படுமென்பதுபோல் கடவுள் கௌசிகன் மூலம் செய்தது போதாதென இவர்களை இன்னமும் சோதித்தார். அந்தணருக்குப் பணிவிடை செய்யும் அரச குமாரனை அரவந் தீண்டியது. சந்த்ரமதியின் துயரத்திற்கு அளவுண்டோ? புலம்பினள்! கதறி அழுதாள்! எவரிடம் கூறி துக்கத்தை அகற்றுவள்? கடவுளையே துணையாகக் கொண்டாள். இனி அழுது ஆவதென்ன? என்று அருமைப் புதல்வனைத் தூக்கி சுடுகாடு சென்றாள். தோட்டிக் களிக்க காசின்றிக் கதறினள். என்னைப்போல் துர்ப்பாக்யசாலியான நீ என்ன? அரிச்சந்த்ரன் மனைவியோ? என்று தோட்டி அரிச்சந்த்ரன் கூறினன்.

அப்படியேதான் என அவன் உணர்ந்து ரோஹிதனைக் கண்டு மூர்ச்சை யுற்றான். விழித்தெழுந்து தீயில் பட்ட புழு போல் துடித்தான். இருவரும் தவித்துக் குழந்தையுடன் தீக் குளிப்பதாக தீர்மானித்தனர். தன்னுடல் அடிமை யாதலின் யஜமானனுக்குச் சொல்லாமல் இறப்பதும் தர்ம விரோத மோ ? என்று அஞ்சினர். குழந்தையை இழந்ததால் மதியை யுமிழந்து யஜமானனுக்குத் தக்கபடி வேலை செய்யாமல் இருப்பதைவிட இறப்பதேமேல் என்று எண்ணினர். அக்னி யை வளர்த்தி அதை ப்ரதக்ஷிணம் செய்தனர். உடனே ஹரிஹரப்ரஹ்மாதி தேவர்கள் அவர் எதிரே தோன்றினர். ஸத்யசிலா! நில்! நில்! ஸாஹஸம் செய்யாதே! உனது ஸத் யத்தைச் சோதித்தோம். மானிலத்தில் உனக்கீடு எவரு மில்லை. இதோ உன்னை விலைக்கு வாங்கிய சண்டாளனைப் பார்! இவனே தர்ம தேவதை! எல்லோரும் மகிழ்ந்தோம். இந்த்ரனது அமிர்த வர்ஷத்தால் எழுந்துவரும் உன் குழந் தையைப் பார்! இதோ விமானம் வந்துளது! இதன் மீதேறி ஸ்வர்க்கம் வருக! என்றுரைத்தனர். அரசன் பரமாச்சர்ய மடைந்தான். கனவோ நினைவோ என ஐயமுற்றான். தேவர் களைப் பணிந்துப் போற்றினன். அப்பா! என்ற அமிர்தச் சொல்லுடன் ஓடிவரும் குழந்தையை ஆவலுடன் கட்டித் தழுவினன். முத்தமிட்டு உச்சிமுகர்ந்தான். கற்பாசியான மனைவியுடன் மட்டில்லா மகிழ்ச்சி அடைந்தான்.

தேவர்களைப் பார்த்து என்னிடம் பேரன்புகொண்ட என் நகரவாஸிகளைவிட்டு யான் ஸ்வர்க்கம் வருவதெங்ஙன மென்றான். பௌரவாஸிகளது புண்யபாபம் வெவ்வே றாக இருப்பதால் அவர்களை உன்னுடன் ஸ்வர்க்கமழைத் துச் செல்ல முடியாதென தேவர் கூறினர். அரிச்சந்திரனோ ஆயின், நானும் ஸ்வர்க்கம் செல்லவில்லையென்றான். தேவர்கள் குணசிலா! ஸத்யமே உனது சிறப்பான தர்மமென்றெண்ணி

ளும். நீ குணக்கடல். எல்லா குணமும் உன்னைச் சூழ்ந்து மகிழ்கின்றன. மஹிமை நிரைந்த மஹீபதே! உன் விருப்பம்போலாகுக! என்று கூறி, ரோஹிதாச்வனுக்கு முடிசூட்டினார்கள். சந்திரமதியுடன் ஸத்ய அரிச்சந்த்ரனையும் அவன் நகர ஜனங்களையும் விமானத்திலேற்றி ஸ்வர்க்கத்திற்கு அழைத்துச் சென்றனர்.

விச்வாமித்ர வஸிஷ்ட யுத்தம்.

பனிரண்டாண்டு தீர்த்த யாத்ரைக்குச்சென்ற வஸிஷ்டர் தன்னூருக்குத் திரும்பினார். விச்வாமித்ரர் தன் சிஷ்யனை ஹரிச்சந்த்ரனுக்குச் செய்த தீங்குகளைக் கேட்டார். அடங்காக் கோபங்கொண்டு விச்வாமித்ரரை கொக்காகும்படி சபித்தார். விச்வாமித்ரரும் இயற்கையான கோபத்தினால் வஸிஷ்டரை "ஆடி" என்ற பக்ஷியாகும்படி சபித்தார். இருவரும் பக்ஷிரூபம் கொண்டும் பகைமை யகலாமல் முவ்வாயிரமாண்டு போர் புரிந்தனர். இவர்களது பாரத்தை ஸஹியாமல் ஒருபுரம் பூமி சாய்ந்தது. அதைக் கண்ட தேவர்கள் பிரம்மனிடம் ஓடி முறையிட்டனர். ஜனங்கள் படும் துன்பத்தைக்கண்டு பரிதபித்து பிரம்மா போரை நிறுத்தும்படி இருவரையும் வேண்டினர். இவரது சொல்லுக்கு இருவரும் செவிமடுக்காமல் பயங்கரமான யுத்தத்தை விடாமல் நடத்தி வந்தனர். இதைக்கண்டு பிரம்மா அவ்விருபக்ஷி உருவத்தையும் மாற்றி பூர்வரூபத்தை யளித்தார். இருவரும் தங்களது சண்டையை நினைத்து வெட்கித்து ப்ரம்மனைப் பணிந்து தவத்திற்குச் சென்றனர்.

தந்தைக்கு மைந்தனது உபதேசம்

பிருகுவம்சத்திற் பிறந்த ஓர் பிராமணர் தக்க வயது வந்ததும் தனது தநயனுக்கு உபநயநம் செய்துவைத்தார்.

அப்புதல்வனே இவ்வுலக விஷயத்தைக் கவனியாது உன்மத்தனைப்போல் திரிந்து வந்தான். சிந்தைகொண்ட தந்தை மைந்தனை அழைத்து ஹிதோபதேசம் செய்தார். என் அருமைப் புதல்வனே! ஆறறிவு பெற்ற மானிடப்பிறவி கிடைப்பதரிது. அதிலும் அந்தணனாகப் பிறப்பது மிக அரிது. குருகுலம் சென்று வேதத்தைக் கற்றுவா. நற்குலத்துதித்த மகளை மணந்துகொள். வேள்வியின் வாயிலாகத் தேவர்களைப் பூஜி. ஸத்புத்ரனைப் பெறு. முறையே ரிஷி தேவ பித்ரு கடன்களை அகற்றினவனாவாய் என்றுரைத்தார்.

இதைக்கேட்ட புதல்வன் என் அருமைத் தந்தையே. யான் பல்கோடி பிறவியில் பலரை மணந்தேன். பலருக்குத் தந்தையானேன். எண்ணிறந்த வேள்விகளையும் செய்தேன் இதனால் பிறவிக்கடலைக் கடக்க முடியவில்லையே! ஆதலின் இவைகளைத் துறந்து துறவிவேடம் பூண்டு ஏகாந்த நிலையிலுட்கார்ந்து எங்கும் நிரைந்த பராபர வஸ்துவை ஸாக்ஷாத்கரித்து மோக்ஷமெனும் பெரும் பதவியைப்பெற முயல்வேன் என்றார். இதைக்கேட்ட தந்தை இவ்வளவு விஷயமறிந்திருந்தும் நீ பித்தனைப்போல் இருந்த காரணம் யாதோ! என வினவி பிறப்பிறப்புகள் உண்டாகும் வகையை விரித்துக் கூறு என்றார். முன்னோரைப் பணிந்து புதல்வன் கூறுகிறான். விதியின் வசப்படி இப்பொய்யான உடவில் விடவேண்டிய மூச்சை விட்டு முடிந்தவுடன் ஜீவவடிவமாயுள்ள தேஜஸ் இவ்விடத்தை விட்டுக் கிளம்ப இச்சரீரத்தை உதானன் என்ற வாயுவைக்கொண்டு ஆங்காங்குள்ள ஜீவகலையை இழுக்கிறது. அச்சமயமே சொல்லொணா மரணதுக்கம் தோன்றுகிறது. புண்யம் செய்தவனானால் அதிக மரண யாதனையில்லாமல் உடலைவிட்டு ஜீவன் கிளம்புகிறது. பாபிகளானால் அவனெதிரே கோரரூபமான யமகிங்கார்கள் பயங்கரமான ஆயுதங்களைத் தாங்கி இவனுயிரை இழுத்து ஹிம்ஸிக்கின்றனர்.

இறந்த பனிரண்டாம் தினத்தில் பிண்ட சரீரம் பூர்த்தி யாகிறது. தான தர்மாதிகளைச் செய்தவனுயின் சீதோஷ்ண துக்க மில்லாமல் செல்கிறுன். மற்றவர்படும் துன்பம் சொல்ல முடியாதது. யமலோகம் சென்று தப்ததாம்ரம், தமஸ், ரௌரவம், அதிரௌரவம், மஹாதைலம், அக்னி சிகம், முதலிய பற்பல நரகங்களை அனுபவித்துவிட்டு மறுபடி யும் புண்யமிருந்தால் மனுஷ்ய சரீரம் எடுக்கிறுன். தாயின் வயிற்றில் சிறிய கர்ப்பப்பையில் மலமூத்ரமத்தியில் படும் துன்பம் வர்ணிக்க இயலாதது. இதற்குமுன் ஏழாவது ஜன் மத்தில் யானெரு வைச்யனுயிருந்தேன். தாஹவிடாய்கொண்டு ஜலமருந்தவந்த தேனுக்களை தடிகொண்டு விரட்டினேன். அப்பாபத்தால் ஜ்வாலாமுகம் என்ற நரகத்தில் பெரும் துன்பத்தை யனுபவித்து வந்தேன். அச்சமயம் தற்செயலாக விபச்சித் ஜனகன் என்ற ஓர் அரசன் விமானத்தின் மீதேறி அங்கு வந்தான். அவன்மேல் அடித்த காற்று என்மேல்பட்ட வுடன் என்தாபமகன்று சுகமடைந்தேன். அவ்வரசனைக்கை கூப்பி, புண்ய புருஷ! இங்கு சற்று வீற்றிரும். உமதரு ளால் நானும் ஏனையோரும் பரமஸௌகமடைகிறோம் என் றேன். எங்களது தாபத்தைக்கண்டு பச்சாத்தாபமடைந்த பார்த்திபன் யமதூதனை நோக்கி இவ்வழியாக என்னை அழைத்துச் செல்ல யான் செய்த பாபம் என்ன? என்று கேட்டான்.

அரசே! தங்களுக்கு கைகேயீ, பீவரீ என இரு மனைவி கள் இருந்தனர். கைகேயியினிடம் மோகம் கொண்டீர். பீவரீ ருதுஸ்நானம் செய்து தங்களை எதிர்பார்த்திருந்தாள். ருது சாந்தி செய்வது அக்னியில் செய்யும் ஹோமத்திற்குச் சம மென்பதை நீர் அறியவில்லை. காமத்திலீடுபட்டு இதை கவனி யாதிருந்தீர். இப்பாபமே உம்மை இங்கு அழைத்து வந்தது என்றுன். இதற்குள் இவ்வரசனை ஸ்வர்க்கத்திற்கு அழைத்

துச் செல்ல இந்திரனும் சந்திரனும் ஒருங்கே கூடி வந்தனர். இவ்வரசனே இந் நரகத்திலுள்ளோருக்கு நற்கதியளித்தாலல்லது யான் ஸ்வர்க்கம் செல்லேன் என்றான். இவ்வரசனது புண்யத்தைக்கொண்டு ஆங்குள்ள நரகிலுள்ளோருக்கும் ஸ்வர்க்கம் கிடைத்தது.

பாப பலன்

பரஸ்திரீகளை துரெண்ணத்தோடு பார்ப்பவர் கண்களை நரகத்தில் நீண்ட இரும்பு முகம்கொண்ட பக்ஷிகள்பிடுங்கும். குரு, சாஸ்திரம், துவிஜர் முதலியவர்களை நிந்திப்பவர், கோள் சொல்பவர் இவர்களது நாக்கை யமகிங்கரன் சேதிப்பான். அதிதிகளுக்கு உணவளிக்காமல் தானுண்டு களிப்பவனுக்கு மலஜல ரத்தமே ஆஹாரமாகக் கொடுக்கப்படும். பசு அக்னி, பெரியோர், குரு, விப்ரன் முதலியவர்களைக் காலால் தீண்டியவர்களுக்கு பாதபந்தனம் கிடைக்கும். குரு தேவ நிந்தையைக் கேட்டவன் காதில், காய்ச்சிய இரும்பு ஆணி அடிக்கப்படும். பகலில் ஸ்திரீ புருஷ ஸம்ஸர்க்கம் செய்தவர் காய்ச்சிய இரும்பு முட்களால் நிரைந்த மரத்தோடு சேர்த்து கட்டப்படுவர். தீர்த்தத்தில் ஜலமலம் கழித்தவர், நீசனிடம் தானம் பெற்றவர் கல்லுக்குட்டேரையாகப் பிறப்பர். குருவினிடம் பொய் சொன்னவர் நாயாகவும், பதிதனிடம் தானம் வாங்கியவர் கழுதையாகவும், தான்யத்தைத் திருடியவர் எலியாகவும், ஸஹோதரபத்னியைக் கெடுத்தவர் கோகிலமாகவும், குருஸ்திரீயைக் கெடுத்தவர் பன்றியாகவும், அன்னத்தையும் பாலையும் திருடியவர் பூனையாகவும், எள்ளைத் திருடியவர் மூஞ்சூறு ஆகவும், பருத்தியைத் திருடியவர் கொக்காகவும், வஸ்திரத்தையபஹரித்தவர் முயலாகவும், பட்டைத் திருடியவர் பட்டுப்பூச்சியாகவும் கரிகாய்களைத் திருடியவர் குருவியாகவும், காளைக்குக் காயடித்தவர் நபும்ஸகனாகவும் ஜ்வாலையில்

லாத அக்னியில் ஹோமம் செய்பவர் அஜீர்ண வியாதியுள்ள வராகவும் பிறப்பர் என்று இவ்வளவு தர்மங்களையும் புதல்வன் கூறி வானப்ரஸ்தாச்ரமத்திற் சென்று நற்கதி பெறுவீர் என்ருன். இதைக் கேட்ட தந்தை யோகமார்க்கத்தை விளக்கிச் சொல் என்று வேண்ட யோகாசார்யனுன தத்தாத்ரேய னது சரிதத்தைக்கூற ஆரம்பித்தான்.

கௌசிக சரிதம்.

ப்ரதிஷ்டான மென்ற நகரில் கௌசிகர் என்ற ஒரு பிராமணர் இருந்தார். அவர் ஜன்மாந்தரபாபத்தினுல் அங்க மெலாம் அழுகிச்சொட்டும் பெரிய வியாதியினுல் பீடிக்கப் பட்டு வந்தார் என்ருலும், பதிவிருதாசிகாமணியான அவர் மனைவி ஸமயத்திற்கேற்ற சுச்ரூஷை செய்து வந்தாள். நாற்றத்தைக் கவனியாள். அவர் செய்யும் ஹிம்ஸையைத் தபஸாக எண்ணுவாள். அவர் கூறும் க்ரூரமான சொற்களை ஆசீர் வாதமாகக் கருதுவாள். அவரையே மன்மதனுக நினைத்து இன்பமாகப் பேசுவாள். வியாதியின் கஷ்டத்தால் இவ்வளவையும் அவர் மதியாது தடிகொண்டு அவளை நையப்புடைப் பார். தன் தவறுக்கேற்ற சிக்ஷையென்று எண்ணி முகம் கோணுது மநம் மாருது அவரை அர்ச்சித்து வந்தாள்.

ஒரு நாள் மாலையில் கௌசிகர் மனைவியை அழைத்து இன்று காலை யான் வீதியில் தற்செயலாகக் கண்ட தாசியைக்கூட விரும்புகிறேன். அதற்கு உதவி புரிவாய் என்ருர். அவ்வுத்தமி தனது ஆபரணங்களை விற்று அவ் வேசி வீடு சென்று அவளைப்பணிந்து மன்ருடி தனது கண வனது காமத்தைப் பூர்த்திசெய்ய வேண்டுமென்ருள். இக் கற்பரசியின் சொல்லை மறுக்கமுடியாமல் அப்படியே ஆகட்டு மென்று சொன்னுள் வேசி. அன்றிரவு உசிதமான உண வளித்து கணவனது உடலிலுள்ள துர்நாற்றங்களை அகற்றி

வாஸனைத்தைலம் பூசி புருஷனைத் தோளில் தூக்கி தாஸிவீடு சென்றாள் கௌசிகி. மார்க்க மத்தியில் மாண்டவ்யர் என்ற முனிவர் கழுவிலேற்றப்பட்டிருந்தார். அந்தகாரமாதலின் அதை யறியாமல் அவாருகே இவள் செல்ல கௌசிகர் வியாதியின் பாதை பொறுக்காமல் காலை உதைத்துக்கொண் டார். அது மாண்டவரது தலையில்பட அவர் வலிதாளா மல் தன்னைக்காலால் உதைத்தவன் ஸூர்யன் உதிப்பதற்குள் இறப்பான் என சபித்தார். இதைக்கேட்டு அக்கற்பாசி ஆஹா! என்னருமை நாதனு இறக்க? யான் என்ன செய் வேன்? அவரைவிட்டு ஒருக்ஷணமேனும் யான் ஜீவித்திரேன்! என் மாங்கல்யத்தை இழக்க நான் செய்த குற்றம் யாது? என்று கதறி அழுது இச்சூர்யனே உதிக்காமல் போகட்டும் என்று சாபம் அளித்தாள்.

அநஸூயை சரிதம்

பலநாட்களாகியும் ஸூர்யனுதிக்காமற் போகவே கர் மானுஷ்டானங்கள் நடை பெறாமற் போயின. இங்கிருந்து யாகமூலமாக தேவர்களுக்குச் செல்லும் உணவு இல்லாமற் போகவே தேவர்கள் ஒன்று கூடி ப்ரம்மாவைச் சரணமடைந் தனர். பிரம்மா காரணத்தையறிந்து உஷ்ணம் உஷ்ணத்தி னுலே அகலும். கற்பாசியின் சாபம் கற்பாசியினுல்தான் அகல வேண்டும் என்று கூறி பதிவிருதாசிகாமணியான அத்ரிபத்னி அனஸூயை இருக்குமிடம் வந்தார். இவ்வளவு தேவர்களும் தன் ஆச்ரமத்தை நாடிவந்ததைக்கண்டு பரமாச் சர்யம்கொண்ட பதிவிருதை அவர்களைத் தக்கபடி அர்ச்சித்து வந்த கார்யத்தை வினவினுள். ப்ரம்மதேவர் சொல்லியதைக் கேட்டுதேவர்களுடன் ப்ரதிஷ்டா நகரத்திலுள்ள கௌசிகரது ஆச்ரமத்திற்குச் சென்றாள். கௌசிகி "கற்றோரைக் கற்றோரே காமுறுவர்" என்றபடி கற்பாசியின் பெருமையைக் கற்ப

ரசியே அறிவாளாதலால் தக்கபடி அவளை வரவேற்று பூஜித்தாள்.

பூஜையை ஏற்று அனஸூயை கௌசிகியைக் குசலப்ரச்னம் கேழ்க்கும்வகையில், பதியையே பரமாத்மாவாக எண்ணுகிறுயா ? அவர் என்ன குற்றம் செய்தாலும் அதைப் பொருட்படுத்தாது அவரைப்போற்றி வருகிறுயா ? என்று பலவகையாகப் பதிவிருதையினுடைய தர்மத்தைக்கேட்டாள். கௌசிகி, அனஸூயை வந்த கார்யத்தை வினவ, அவள் தேவர்களது பிரார்த்தனையைத் தெரிவித்து ஸூர்யனை உதிக்கும்படி சாபத்தை அகற்றவேண்டினுள். கௌசிகி தனது கணவன் மரணத்தைப்பற்றி கூற, அஞ்சாதே ! அவரது ஆயுள் வ்ருத்திமாத்திரமல்ல ! ரோகமும் அகன்று திவ்ய சரீரத்தையும் பெறுவார் என வாக்களித்தாள். உடனே கௌசிகி யான் கணவனையே தெய்வமாக நினைப்பது ஸத்யமானல் கதிரவன் உதிக்கட்டு மென்றுள். ஆதித்யனுமுதித்தான். கௌசிகரும் கீழே விழுந்தார். உடனே அனஸூயை எனது முக்காணத்தாலும் பதியையே தெய்வமாக எண்ணிப்பணிவிடை செய்வது ஸத்யமானல் கௌசிகர் திவ்ய சரீரம் பெற்று பிழைத்தெழுந்திருக்கட்டு மென்றுள். உடனே மன்மதனைப்போன்ற சரீரம் பெற்று கௌசிகர் எழுந்தார். ஸதியும்பதியுமாக அனஸூயையையும் அமரரையும் போற்றிப் பணிந்தனர். அனஸூயையினது மஹிமையைக் கண்டு தேவர்கள் மட்டில்லா மகிழ்ச்சிகொண்டு ஓ கற்பரசியே! உனக்கு யாது வரம் வேண்டும் ? எங்களுடைய ஸந்தோஷம் வீணுகப் போகலாகாது. நீ விரும்பும் வரத்தைக் கேள் ! என்றனர். அனஸூயை ஹரிஹரப்ரம்மாதிகளான மும்மூர்த்தியும் எனக்கு மூன்று புதல்வராகத் தோன்ற வேண்டுமென்றுள். அமரர்களும் த்ரிமூர்த்திகளும் அங்ஙனமே ஆகட்டுமென்று அந்தர்த்தானமாயினர்.

தத்தாத்ரேயர்.

அத்ரி ருதுஸ்நாநம் செய்து காமனேயோடு வீற்றிருக்கும் அனுஸூயையைக் கண்டார். அவருடைய தேஜஸ்ஸினுல் பிரம்மாவின் அம்சமாக சந்திரன் தோன்ற அதை திக்குகள் தங்களுக்கு வேண்டுமென பெற்றுக்கொண்டன. ஸத்வகுணம் நிறைந்த மஹாவிஷ்ணுவின் அம்சமாக தத்தாத்ரேயர் தோன்றினர். ஸகல கலைகளிலும் கைதேர்ந்த தத்தாத்ரேயர் உலகப் பற்றற்று அஸங்கனுய் ஆத்மத்யானம் செய்ய ஆசைகொண்டார். இவரது மஹிமையை உணர்ந்த முனிகுமாரரும் ராஜகுமாரரும் இவரைவிட்டுப் பிரிவதில்லை. ஆதலால் தத்தாத்ரேயர் ஜலத்திற்குள் முழுகி தவம் புரிந்தார். அந்த ஜலக்கரையில் தேவ வருஷத்தில் நூறுண்டு முனிகுமாரர்கள் இவரை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். கரையேரிவந்த தத்தர் இவர்களைக் கண்டு தனது மாயையினுல் மதோன்மத்தையான ஓர் மாதரசியைப் படைத்து இருவரும் மதுபானம் செய்து விடனைப்போல் நடநம் செய்தார். இது இங்ஙனமிருக்க :—

கிருதவீர்யன் என்ற அரசன் இறந்தவுடன் அவனது புதல்வனை கார்த்தவீர்யார்ஜுனனுக்கு அவனது அமாத்தியர்கள் அரசளித்து முடிசூட்ட எண்ணினர். அரசகுமாரனே குடிகள் செய்யும் பாபம் அரசனை அண்டுமாதலால் எனது நாட்டு ப்ரஜைகள் களவு, காமம், கொலை முதலிய குற்றம் செய்யும்வரை யான் ராஜ்யத்தை விரும்பேன் என்றான். பலர்சொல்லியும் இவன்பிடிவாதமாக இருந்ததால் புரோஹிதரான கர்க்கர் கார்த்தவீர்யனைப்பார்த்து தத்தாத்ரேயரை ஆராதித்து உனது நாட்டார் இக்குற்றங்களைச் செய்யாதபடி வரம் பெற்றுவா என்று கூறினர். அங்ஙனம் அருள்புரியும் ஆற்றல் அவருக்குண்டோ என அர்ஜுனன் ஐயமுற்றான். அவனது சங்கையை அகற்ற இந்திரன் தத்தரிடம் வரம்

பெற்ற வகையை வர்ணித்தார் கர்க்கர். அர்ஜுனு! முன் ஒரு ஸமயம் தேவர்களுக்கு அஸுரர்களுடன் பயங்கரமான போர் நடைபெற்றது. அச்சமயம் பற்பல ஸாதநங்களிருந் தும் பிரஹஸ்பதியின் உபதேசங்களைப் பெற்றும் தேவர் களால் அஸுரர்களை வெல்ல முடியவில்லை. அச்சமயம் பிரு ஹஸ்பதி தனது ஞாநதிருஷ்டியால் நன்கு யோசித்து இந்தி ரனை அழைத்து தத்தாத்ரேயனைச் சரணமடைந்து அவர் அருளால் ஜயம் பெறுவாய் என்றார்.

தேவஸேனை புடைசூழ தேவேந்திரன் பாரினில் வந்து தத்தரை வணங்கி ஆராதித்துப் போற்றி வந்தான். இங் ஙனம் பலகாலம் சென்றபின் தத்தர் தேவர்களை நோக்கி மதுபானம் செய்பவனும் மாதரோடு திரிபவனுமான என்னை ஏன் உபாஸிக்கிறீர்கள்? என்னால் என்ன பயன் உங்களுக்கு உண்டாகப்போகிறது? என்றுரைத்தார். உண்மையை உணர்ந்த தேவர்கள், ஸ்வாமிந்! அக்னிக்கு அழுக்குண்டோ? குற்ற மற்ற உங்களை குற்றமுள்ளவரெனக் கருதுவோர் பாபி யாவர். நிர்க்குணனாய் பற்றற்றவனாய் எங்குமாய் எல்லாமாய் உள்ள உம்மை தோஷமுள்ளவரென எவரே கூறவல்லார்? என்றார்கள்.

உடனே உண்மையை அறிந்த பக்தர்களான தேவர்களைப் பார்த்து தத்தர், ஆனால் அஸுரர்களை அழைத்து யுத்தம் புரி யுங்கள்! உங்களுக்கு ஜயம்உண்டாகும்படி செய்கிறேன் என்று அருள் புரிந்தார். தத்தர் சொன்ன வார்த்தையைக் கேட்டு பரமஸந்தோஷமடைந்த தேவர்கள் தத்தர் பலத்தைக்கொண்டு தைத்யரைச் சண்டைக் கிழுத்தனர். கோபம்கொண்ட அஸுரர்கள் தேவர்களை நன்கு புடைக்க, அடி பொருக்காமல் தேவர்கள், தத்தாச்ரமத்திற்கு அபயம்! அபயம்! என்று ஓடி வந்தனர். அஸுரர்களும் அவர் பின்னே ஓடிவந்தனர். தத்தாச்ரமத்திலுள்ள அழகிய பெண்மணியைப் பார்த்து

அஸுரர் மதிமயங்கி அவளைத் தூக்கிச் செல்லக் கருதினர். சண்டையை மறந்து தத்தரை மதியாது அவ்வழகிய பெண்ணைத் தூக்கி ஓர் பல்லக்கில் வைத்து தலையால் சுமந்து சென்றனர்.

இதைக் கண்ட தத்தாத்ரேயர் தேவர்களைப் பார்த்து ஸ்திரீ காமனையால் அஸுரர்களுக்கு பலம் அகன்றது, தேஜஸ் குன்றியது. அன்றியும் இவளைத் தலையில் தூக்கிச் சென்றதால் அவளும் அவர்களை உதரித் தள்ளிவிட்டு நம்மிடம் வருவள். பாதத்தில் லக்ஷ்மியை த்யானம் செய்வோமானல் வீட்டையளிப்பள். துடையில் த்யானம் செய்வோருக்கு தனத்தையும், குஹ்யஸ்தானத்தில் த்யானம் செய்வோருக்கு களத்ரத்தையும், மடியில் த்யானம் செய்வோருக்குக் குழந்தையையும், ஹ்ருதயத்தில் த்யானம் செய்வோருக்கு மனோரதத்தையும், கண்டத்தில் த்யானம் செய்வோருக்கு கண்டாபரணங்களையும் அளிப்பாள். தலைமீதில் வைப்போரை த்யஜித்து விடுவள். ஆதலால் அஸுரரை விட்டு லக்ஷ்மி அகலுவதாலும் அவர்களது பலம் குன்றியதாலும் அஸுரர்களை ஸுலபமாக நீங்கள் வெல்லலாம் என்றார். அங்ஙனமே தேவர் அஸுரரை ஜயித்தனர். ஆதலால் நீயும் தத்தாத்ரேயரைப் பணிந்து உனது மனோபீஷ்டத்தை நிறைவேற்றுவாய் என்று கர்க்கர் கூறினர்.

உடனே கார்த்தவீர்யார்ஜுனன் தத்தர் ஆச்ரமம் சென்று பக்தி ச்ரத்தையுடன் அவரைப் பூஜித்து வந்தான். அவன் குருவின் காலைப் பிடிப்பான். சந்தனமரைப்பான். ஸமித்தர்ப்பங்களையும் கந்தமூலங்களையும் கொண்டுவருவான். அவர் எச்சிலை எடுத்து சுத்தி செய்வான். இதுபோல் பக்தியுடன் பார்த்திபன் செய்யும் பணிவிடைகளைக் கண்டு பரமாநந்தமடைந்தார். ஆயினும் பெண்ணுடன் கூடி மதுபானம் செய்யும் என்னையேன் நீ அடுத்தாய்? என்று

தத்தர் கூற, பரம்பொருளான தங்களுக்கு குற்றம் ஏது? என்று கார்த்தவீர்யன் கூறினன். பரம ஸந்தோஷமடைந்த பகவான் மனிதர்க்குக் கிடைக்காத பற்பல வரங்களை அர்ஜுனனுக்குக் கொடுத்தருளினர். பிறர், திருட எண்ணும் போதோ மற்ற பாபத்தைச் செய்யக் கருதும்போதோ வில்லாளியாக அவர் எதிரே தோன்ற வேண்டுமென்றும், வேண்டியபோது ஆயிரம் கைகள் வேண்டுமென்றும் அர்ஜுனன் வேண்டினன். அங்ஙனமே அளித்துப் பட்டாபிஷேகம் செய்துகொள்ளும்படி தத்தர் அவனுக்கு உத்தரவிட்டார். இவனது ராஜ்ய பட்டாபிஷேகத்திற்கு தேவர்களும், யக்ஷர்களும், கந்தர்வர்களும், கின்னரர்களும், நாகர்களும் வந்தனர். கார்த்தவீர்யன் தனது ராஜ்யத்தில் எவரும் எவருக்கும் எவ்வகையான தீங்கும் செய்ய முடியாதாகையால் தன்னைத் தவிர வேறு எவரும் வில்லை ஏந்தலாகாதென்றான். தர்மம் தவறாது ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தான். அவன் கீர்த்தி எங்கும் பரவியது. யஜ்ஞம் தானம், தபஸ் முதலியவைகளாலும் அகண்ட செல்வத்தினாலும், தத்தாத்ரேயரது அருளாலும், ஒப்பற்ற கீர்த்திபெற்ற இவனுக்கு ஈடாக எவனையும் சொல்ல முடியாது.

குவலயாச்வன்.

முன் ஒரு ஸமயம் சத்ருஜித் என்ற ஓர் பார்த்திபன் இருந்தான். அவன் தேவேந்திரனுக்கு ஸமானமானவன். அவனுக்கு ஓர் அருமைப் புதல்வன் உண்டு. அவன் பெயர் ரிதத்வஜனும். அவனுக்கு எண்ணிறந்த ராஜகுமாரர்கள் நண்பர்களாவர். இவனது உயர்ந்த குணத்தையும் சௌர்யத்தையும் கண்டு வியக்காதவரில்லை. நாகலோகத்திலுள்ள அச்வதரன் எனும் நாகராஜனது இரு குமாரர்கள் இவனது ப்ரிய நண்பர்களானர்கள். அன்றன்று அவர்கள் அரசகுமார

ளைக் கண்டு களித்து கூடிக்குலவி விளையாடி மாலை மனைக்குச் செல்வார்கள். ஒருநாள் அச்வதரான் தனது குமாரர்களைக் கண்டு தினந்தோறும் நீங்கள் எங்கு சென்று வருகிறீர்கள் ? உங்களது நண்பர் யாவர்? என்று வினவினர். அப்புதல்வர்கள் எங்களது அருமைநண்பன் ரிதத்வஜனென்னும் ராஜகுமாரன். அவன் அரும் பெரும் குணம் அமையப்பெற்றவன். அழகே உருவாகத் தோன்றியவன். சௌர்யத்தில் சிறந்தவன். மானிடப் பிறவியில் இவனைப்போன்ற உத்தம குணமுடைய மனிதனைக் காண்பதரிது என்றார்கள். ஆயின் அக்குணசீலனுக்கு நீங்கள் அளித்த வெகுமதி யாது ? குணமுள்ளவருக்கு நமது சக்திக்கேற்றபடி ஏதேனு மளிப்பதல்லவோ தர்மம் ! என்று தந்தை கேட்டார். தனயர்கள் கூறினர். அருமைத் தந்தையே! ஸகல பாக்யங்களுக்கும் பிறப்பிடமான அவனிடம் எதுதான் இல்லை. சக்ரவர்த்தித் திருமகனான அவனது சிந்திய செல்வம் ஸ்வர்க்கலோக மெனலாம். நிறைந்த மனமுடைய அவனுக்குக் குறை ஏது ? ஆயினும் ஓர் குறை மாத்ரம் உளதென்று கூறி அவனது சரித்ரத்தைச் சொல்ல ஆரம்பித்தனர்.

ஒருநாள் காலவர் என்ற ரிஷி சத்ருஜித்தின் அரண்மனைக்கு வந்தார். அரசன் தக்கபடி அவரை அர்ச்சித்தவுடன் முனி ஆஸனத்திலமர்ந்து அரசனைப் பார்த்து கூறினர். வேந்தே ! உனது பராக்ரமத்தால் இதுவரை யாதொரு தடையுமின்றி தவம் செய்து வந்தோம். ஸமீபகாலம் தொட்டு ஓர் பயங்கரமான ராக்ஷஸன் பற்பல உருவமெடுத்து தபஸ்விகளைப் பயப்படுத்துகிறான். ஸமாதியைக் கலைக்கிறான். எங்களது தபோமஹிமையால் அவனைக் கொல்லக்கூடுமானாலும், கஷ்டப்பட்டு சேர்த்த தபஸிற்கு நஷ்டம் வரலாகாதென்று இதுவரைப் பொறுத்தோம். இனி ஒரு க்ஷணமேனும் ஸஹிக்க முடியாது. என் செய்வேனென்று யான் சிந்தை கலங்கிய

போது ஆகாயத்திலிருந்து அசிரிரியான வாக்கு ஒன்று தோன்றிற்று. மஹர்ஷே! அஞ்சவேண்டாம்! இதோ உமது பயத்தையகற்றும் குதிரையைத் தந்தேன். இது எங்கும் தங்கு தடையின்றி செல்லும். இது குவலயமெல்லாம் சுற்றுமாதலால் இதற்குக் குவலயாச்வம் எனப் பெயர். இக் குதிரையின் மீதேறத் தகுந்த வீரன் ரிதத்வஜனெனும் ராஜகுமாரனே.

இக்குதிரையைக் கொண்டு அவனிடம் கொடும். அவன் இவ்வஸுரனைக்கொன்று தபஸ்விகளுக்குச் சந்தோஷமளிப்பான் என்றது. ஆதலால் குதிரை இதோ நிற்கிறது. ராஜகுமாரனை அனுப்பி தேவவாக்கை நிறைவேற்றும். மஹர்ஷிகளது இஷ்டத்தைப் பூர்த்திசெய்யும் என்று கூற சத்ருஜித் தனது வீரகுமாரனை அழைத்து ஆசீர்வதித்து தபஸ்வியுடன் தபோவனம் சென்று ஜயலக்ஷ்மியோடு திரும்புவாய் என்று கட்டளையிட்டார். அங்ஙனமே குவலயாச்வத்தின் மீதேறிய ரிதத்வஜன் குவலயாச்வன் எனப் பெயர்பெற்று முனிவரைப் பின் தொடர்ந்தான். தபோவனம் சென்று மஹர்ஷி ஸந்த்யையைச் செய்து ஜபத்திற்கு ஆரம்பித்தார். அவ்வஸுரன் பன்றி உருவம்கொண்டு மஹர்ஷியை ஹிம்ஸிக்க ஆரம்பித்தான். இதைக் கண்ட முனிகுமாரர்கள் ராஜகுமாரனிடம் முறையிட அவன்வில்லைக் கையிலேந்தி பன்றியைப் பின்தொடர்ந்து சென்றான். அது வெகுதூரம் இழுத்துச்சென்று ஓர் பூமியின் சந்தில் நுழைந்து பாதாளம் சென்றது. விரைவாகப் பின்சென்ற வேந்தன் அதன்மீது பாணத்தை எய்துப் பாதாளத்திற்குச் சென்றான்.

அங்கு பன்றியைக் காணாது ஸ்வர்ணவர்ணமான ஓர் நகரத்தைக் கண்டான். அங்கு அழகிய ஓர் அரண்மனை எதிரில் தோன்றியது. அங்கு எவரும் ஸஞ்சரிக்கவில்லை. குதிரையை ஓர் இடத்தில் கட்டிவிட்டு கால் நடையாக அங்குமிங்கும்

அலைந்து திரிந்துப் பார்த்தான். தற்செயலாக மின்னற்கொடிபோல் ஓர் பெண் விரைவாக மாடியின்மீது ஏறுவதைக் கண்டான். பெண்ணே! சற்றுநில்! இந்நகரம் எவருடையது? இதன் பெயர் என்ன ? இங்கு ஜனஸஞ்சாரமில்லாமைக்குக் காரணம் யாது ? நீ யார்? எங்கு வேகமாகச் செல்கிறாய்? என்று கேட்டான். ஒன்றுக்கும் அவள் பதில் கூறாது விரைவாகச் சென்றாள். அரசனும் அவளைத் தொடர்ந்து சென்று ரத்னக் கட்டிலில் சோகத்துடன் உட்கார்ந்திருக்கும் ஓர் கன்யாரத்னத்தைக் கண்டான். இவனைக் கண்டவுடன் அவள் மோக மடைந்தாள். அரசன் அவள் தோழியைப் பார்த்து பெண்ணே! உண்மையைக்கூறு! தன்னந்தனியே நீங்கள் இங்கிருக்கக் காரணம் யாது ? என்னைக் கண்டவுடன் இவள் ஏன் மோஹமடைந்தாள்? என்று வினவினான்.

உடனே அத் தோழி சொல்ல ஆரம்பித்தாள். ஐயா! விச்வாவஸு என்ற கந்தர்வ ராஜனது குமாரி இவள். மதாலஸை என்பது இவள் பெயர். இவள் தன் தோழிப் பெண்களுடன் ஒரு ஸமயம் உத்யாநத்தில் உலவி வந்தாள். வஜ்ரகேது என்ற ராக்ஷஸன் புதல்வனான பாதாளகேது என்பவன், இவளைத் தூக்கிவந்து ஒருவருமறியாமல் இந்நகரத்திலே வைத்திருக்கிறான். வரப்போகிற த்ரயோதசியில் இவளை அவன் மணப்பதாக தீர்மானித்திருக்கிறான். அக்நியில் ஆஹுதிசெய்யத்தக்க மந்த்ரபூதமான ஹவிஸ்ஸை நாய் தின்பது தர்மமோ? குணத்திலோ குலத்திலோ அழகிலோ ஆசாரத்திலோ தனக்கு நேர் மாறான இவ்வஸுரனை மணந்து வாழ்வதைவிட இறப்பதே மேலென மதாலஸை நினைத்தாள்.

நேற்று தற்கொலை செய்துகொள்ள முயன்றாள். பசுக்களின் தாயான தேனு இதைத்தடுத்து பெண்ணே! ஸாஹஸம் செய்யாதே! மனுஷ்ய லோகத்திலிருந்து ஓர் ராஜகுமாரன் இங்கு வந்து அஸுரனைக் கொல்வான். அவனே

உனக்குப் பதியாவான் என்றது. இதைக் கேட்டு நமக்கும் நல்ல காலம் பிறக்குமோ ? என ஏங்கி நிற்கிருள் என் தோழி மதாலஸை. நானோ விந்த்யவானது புதல்வி. என்னைக் குண் டலா என்றழைப்பார்கள். வீரபுஷ்கரமாலி என்று என் கண வன் பெயர். சும்பனெனும் அரக்கன் என் பதியைக் கொன் ருன். தீர்த்தயாத்ரை செய்து மிகுதியான ஜீவன காலத்தைக் கழித்துவருகிறேன். பரிதாபநிலையிலுள்ள இப்பெண்மணிக்கு உதவிபுரிய இங்குவந்தேன். இன்று யாரோ ஒருவன் பன்றி வடிவமுள்ள பாதாளகேதுவைப் பாணத்தாலடித்து கொன் ருன். தேறு அவனையே பதியாகக்கொள் என கூறிற்று. அழ கிற் சிறந்த உம்மைவிட்டு மற்றவரை 'மணக்க மனமில்லாமல் மதாலஸை சோகத்தால் மயங்கி விழுந்தாள் என்று ஸகி கூறினள்.

எங்களது வரலாற்றை விரிவாகக் கூறினேம். இனி தாங் கள் யார் ? என தயை புரிவீரா ? என்ருள். அரசன் தனது விருத்தாந்தத்தை எடுத்துரைத்து பன்றியைக் கொன்றவன் தானே என சொன்னன். இதைக்கேட்டதும் மதாலஸை மநமகிழ்ச்சியுடன் எழுந்தாள். கைகூப்பி கடைக்கண்ணுல் கணவனை நோக்கி வெட்கத்தால் தலைகுனிந்து நின்ருள். அரச குமாரன் எதிர்பாராமல் தனக்கு தைவமளித்த மாதரசியான மதாலஸையைக் கண்டு மகிழ்ந்தான். ஆயினும் தந்தையின் உத்திரவின்றி தானே மணப்பது தர்மமல்லவே என்ருன். உடனே மதாலஸை குலகுருவான தும்புருவை நினைத்தாள். நினைத்த அளவிலே தும்புரு வந்து வேந்தனது ஸந்தேஹத்தை அகற்றி விதிப்படி விவாஹத்தைச் செய்து வைத்தார். தம் பதிகளை நன்கு ஆசீர்வதித்துத் தன் பணிதீர்ந்ததென்று, தாம் பத்யதர்மோபதேசம் செய்து விடைபெற்று குண்டலா தபம் செய்யச் சென்ருள். அந்த அச்வரத்நத்தின்மீது மதாலஸை யை ஏற்றித் தானும் உட்கார்ந்து ராஜகுமாரன் கிளம்பும்பொ

மூது இதோ கொண்டுபோகிறான்! இதோ கொண்டுபோகிறான்! என்ற சப்தம் வானமளாவக் கிளம்பியது. எதிரில் கடலைப் போல் திரள்திரளாக எண்ணிறந்த ராக்ஷஸ ஸேனை பல்வகை பயங்கரமான ஆயுதத்தை ஏந்தி எதிரில் வந்தது. அரசன் தனது கூறிய அம்புகளால் கணப்பொழுதில் அவைகளை அழித்தான். கபிலரது கண் பொரியால் சாம்பலான ஸாகரர் போல் அரக்கரனைவரும் அடியோடு அழிந்தனர்.

குவலயாச்வன் ஜயலக்ஷ்மியுடன் மதாலஸை என்ற லக்ஷ்மியையும் பெற்று பாதாளம் விட்டு பூலோகம் வந்தான். பல நாளாகப் பிரிந்திருந்த அருமைப் புதல்வனைத் தந்தை அன்புடன் வரவேற்றார். தேரிலுள்ள அத்புத வடிவம் வாய்ந்த கன்னியைக் கண்டு குவலயா! இத்திருமகள் யார் ? என்று வினவ ! தந்தையைப் பணிந்து ஐயா ! இவள் தங்கள் மருமகளே என்று நடந்ததை விரிவாகக் கூறினான். கடவுளது கருணையால் தபஸ்விகளது தயையால் புதல்வனது குலத்திற்கும் குணத்திற்கும் அன்பிற்கும் அழகிற்கும் ஏற்ற மனைவி கிடைத்ததைக்கண்டு மன்னன் மகிழ்ந்தான். புதல்வனது வீர்யத்தைக் கண்டு மெச்சினான். பெரியோரிடத்தில் அவன் வைத்த மதிப்பையும் பேரன்பையும் போற்றினான். புத்ர ! இக்குதிரை மீதேறி அன்றன்றும் தரணியைச் சுற்றிவா. ஸாதுக்களைப் பணிந்து என்ன குறை? என விசாரி. அதை அகற்ற உடனே வழிதேடு. உயிரைக் கொடுத்தாவது உத்தமரைப் பூஜி. இதுவே நமக்கு சிறந்த தர்மம். இதனால் நற்கீர்த்தியும் நற்கதியும் உண்டாகுமென சத்ருஜித் குவலயாச்வனுக்கு உபதேசம் செய்தான். அவனும் அன்றுமுதல் அச்வத்தின்மீதேறி பாரைச் சுற்றி முனிவர்களை வணங்கி என்ன கைங்கரியம் புரிய வேண்டுமென்பான்.

ஒரு ஸமயம் யமுனாநதி தீரத்தில் ஒரு முனிவரைக் கண்டான். அவர் கபடமுனி. பாதாளகேதுவின் ஸஹோதர

னவன். தாளகேது என்ற பெயருள்ள அவ்வரக்கன் தன் ஸஹோதரனைக் கொன்ற குவலயாச்வனைக்கொன்று பழிதீர்க்க வேண்டுமென்று விரும்பினுன். நேராகப் போர் புரிந்து அவனைக் கொல்ல முடியாதென்று கண்டு கபடமுனிவேஷம் பூண்டான். தற்செயலாக அங்கு வந்த குவலயாச்வனைக் கண்டு ராஜகுமார! எனக்கோர் ஸஹாயம் செய்வாயா? ஸத்யமாகச் செய்கிறேனென்று கூறினுல் அதைச் சொல்கிறேனென்ருர். இதைக்கேட்ட அரசன் முனிவரே! ஏன் அஞ்சுகிறீர்! உயிரை அளித்தாவது உத்தமர் சொற்படி நட என என் தந்தை உபதேசித்தார். எனது உடலில் உயிருள்ளவரை இதைக் கைவிடேன்! இது ஸத்யம். உமது விருப்பைக் கூறும் என்ருன்.

இதைக் கேட்ட ராக்ஷஸ முனி நான் ஜலத்திற்குள் முழுகி வருண யாகம் செய்யப் போகிறேன், அதற்கு உன் கண்டாபரணத்தைத் தக்ஷிணையாக அளிக்க வேண்டும். எவரும் என் தவத்தைக்கலைக்காமல் நான் எழுந்து வருமளவும் இங்கு காவல் புரிய வேண்டு மென்ருர்.

அங்ஙனமே ஆகட்டுமென்று அரச குமாரன் யமுனு நதிக்கரையில் காத்திருந்தான். அச்சமயம் தாளகேது ஜலத்தில் மூழ்கி மாயையினுல் மன்னனறியாமல் கரையேறி குவலயாச்வனது வீடு சென்ருன். அங்கு மதாலஸையின் காதில் விழும்படி சத்ருஜித்தைப் பார்த்து அரசே! உனது மகனை ஓர் அஸுரன் கொன்ருன். அவனது அரிய அச்வத்தையும் அரக்கனே அபஹரித்துச் சென்ருன். இக்குரூர கார்யத்தைக் கண்ணுல் கண்டவனுதலால் தார்மிஷ்டனுன உனக்கு இதை அறிவிப்பது என் கடமை என்று இங்கு வந்தேன். மிகச் சூரனுன இவனுக்கு இக்கதி நேருமென எவரும் எண்ணியிரார். இராக்ஷஸன் கபடத்தினுல் ஜயித்தானேயல்லாது பராக்ரமத்தைக்கொண்டு அவனை ஜயிக்க முடியாது. அவனது வியோகத்தைப் பொறுக்காது பரிதபிக்கும் உங்களுடைய

துக்கத்தை நீக்கவல்லதென அவனது கண்டாபரணத்தைக் கொண்டு வந்தேன்.

தபஸ்வியான எனக்கு இதனால் ஆகும் பயன் என்ன ? என்று அதைக் கீழே எறிந்தான். இதைக்கேட்ட மதாலஸை இது உண்மையோ ! என் நாதனுக்கா இக்கதி நேர்ந்தது ? பிராணப்ரிய ! என்னை விட்டுத் தாங்கள் செல்லுவது நியாயமோ ? உம்மைவிட்டு ஒரு க்ஷணமும் யான் பிரிந்திரேன்! என நீர் உணர மாட்டீரோ ? இதோ வந்தேன் ! வந்தேன் ! என்று கூறி கண்டாபரணத்தைக் கண்ணில் ஒத்திக்கொண்டு உயிரை விட்டாள். புத்ர சோகம் பொருக்காமல் அரசனும் மனைவியும் அலறினார்கள். விழுந்து புரண்டார்கள். தனக்குத்தானே தேர்ந்தெழுந்த அரசன் ஆஹா ! என்ன அறியாமை? எனது புதல்வன் பூத உடலை இழந்தாலும் புகழுடல் பெற்று பிரகாசிக்கிறானல்லவா ? அந்தணனுக்காக வல்லவோ உயிரை இழந்தான். இதல்லவோ நமது குல தர்மம் ? ஆதலின் வீர ஸ்வர்க்கம் பெற்ற வீரனைநாடி வருந்துவது அழகாமோ ? என்று கூறி அந்தணனை நோக்கி ஐயனே ! அருமைப் புதல்வனது உடலேனும் காணக்கிடைக்குமோ ? என்று வினவ, மஹர்ஷி மன்னனது உடலாதலின் தக்கபடி தபோதனர்கள் அதைத் தஹனம் செய்து விட்டனர் என்றார். அரசன் மதாலஸையினது உடலைத் தக்கபடி ஸம்ஸ்காரம் செய்தார். இதைக் கண்டு கார்யம் முடிந்ததென இக்கபடமுனி யமுனை ஜலத்திலிருந்து கரையேறி ராஜகுமார! யாதொரு விக்னமுமின்றி எனது யஜ்ஞம் பூர்த்தியாய் விட்டது. இனி நீ உன் ஊருக்குச் செல்லலாம் என உத்தரவளித்தார். குவலயாச்வனும் அக்குதிரைமீதேறி தன் நகரத்தை நாடி வந்தான். தன்னைக் கண்டவுடன் ஜனங்கள் பேரானந்தம் பெற்று உடனே துக்கமடைந்ததற்கும் காரணமறியாமல் திகைத்து நின்றான்.

ஊர் பாழாகக் கிடப்பதையும் கண்டு யாருக்கு என்ன ஆபத்தோ? என்று உள்ளம் நடுங்கி அருமைத் தந்தையினது அரண்மனையை நாடிச் சென்றான். இவனைக் கண்டவுடன் அரசன் ஒன்றும் புரியாது தபோதனர் சொன்னது பொய்யோ! தனயன் வருவதுதான் மெய்யோ! இது கனவோ நினைவோ! மாயையோ? இந்திர ஜாலமோ! புதல்வனிறந்தானெனக்கேட்டு உத்தமபதிவிருதையான மதாலஸை உயிரை இழந்தாள். அவளது உடலையும் அக்னியிலிட்டு விட்டோம். அருமைப் புதல்வனோ என்னெதிரிலே காண்கிறான். இஃதென்ன விந்தை? என்று சிந்தை கலங்கி தனயனை அன்புடன் தழுவி நடந்ததைக்கூறு என வினவினான். மன்னனும் மகனும் சேர்ந்து யமுனா நதியில் தவம் செய்வதாகச் சொன்ன தபஸ்வி உண்மையான முனியல்ல. பாதாள கேதுவினது ஸஹோதரன் பழிவாங்கவே இவ்வேலையைச் செய்திருக்க வேண்டும் என்று தீர்மானித்தனர். ஆயினும் உயிரை விட இன்பமான மதாலஸையை இழந்த துன்பம் இருவரையும் வாட்டியது; என்றாலும் குவலயாச்வனது துக்கத்திற்கு அளவேயில்லை. தன் மனைவிக்குச் செய்ய வேண்டிய ஈமக் கடன்களைச் செய்து முடித்தான். மனதிற்கிசைந்த மதாலஸையை யிழந்தபின் மாநிலவாழ்வில் வெறுப்பு கொண்டான். இனி ஒரு க்ஷணமேனும் உயிரை வைத்திருப்பது உசிதமல்ல. பொய்யான என் மரணத்தைக்கேட்டு மனமுறிந்து மதாலஸை மெய்யாக இறந்தாள். ஸத்யமாகவே மதாலஸை இறந்தும் இப்பாபி உயிர் ஏன் விலகவில்லையோ? என் மனம் கல்லோ? வஜ்ரமோ? தானே செல்லாத உயிரை நானே மாய்த்துக் கொள்வேன்! எனத் தீர்மானித்தான். ஆயினும் வயது சென்ற தந்தையை விட்டுச் செல்வதும் ஆத்மஹத்திசெய்துக் கொள்வதும் பெரும் பாபமன்றோ? என்று அஞ்சினான்.

மாதரசியான மதாலஸையை மதித்து மற்ருேர் மனைவியை மனதிலும் கருதாது தந்தைக்குப் பணிவிடை செய்திருந்த காலத்தைக் கழிப்பேன். போகத்தை விரும்பேன். துறவிகோலம் கொள்வேன் என்று தீர்மானித்து அங்ஙனமே அனுஷ்டித்து வருகிருன், என்று இக்கதையை நாக குமாரர்கள் தந்தையிடம் கூறி இதற்கேதேனும் பரிஹாரம் செய்தால் இதுவே நமது மித்ரனுக்கு நாம் செய்யும் பாரிதோஷிகமாம் என்று கூறினர். இதைக் கேட்ட அச்வதரன் புருஷ ப்ரயத்தினல் ஆகாதது ஒன்றுண்டோ? தவத்தினல் தேவர்களை ஸ்வாதீனமாக்கி தனக்கிஷ்டமான கார்யத்தை ஸாதித்துக் கொள்வது தபோதனர்களது முறையன்ருே? மைந்தர்காள்! அஞ்சாதீர்கள். உமது நண்பனை குவலயாச்வனது விருப்பத்தைப் பூர்த்தி செய்யவேண்டிய முயற்சி செய்கிறேன் என்று கூறி, கம்பலன் என்ற தனது ஸஹோதரனேடு தபோவனம் சென்ருன். ஸரஸ்வதீ தேவியை நாடி ஏகாக்ர சித்தமாக த்யானம் செய்தான். மனமுருக கண்ணீர் பெருக தாயே! நீயேகதி. நீயே வாணி என்றும் உமை என்றும் லக்ஷ்மி என்றும் போற்றினன். கலைமகள் எதிரே தோன்றி உனது தவத்திற்கு மகிழ்ந்தேன். யாது வரம்வேண்டும்? என்ருள். அழகாகப்பாடித் துதித்து அரனை ஆராதிக்க ஆவல் கொண்டோம்; நீ எங்களது நாவில் ஸாந்நித்யம் செய்து விரைவில் பரம சிவன் அருள்புரியும்படி அனுக்ரஹிக்க வேண்டுமென்ருன். அங்ஙனமே வரம் பெற்று கைலாஸ நாதனைத் துதித்து அழகாகப்பாடி ஆராதித்தார்கள். செவிக்கினிமையாகக் கருத்து நிறைந்த பாடல்களைப் பாடும் இவர்களிடம் கருணைகொண்டு கைலாஸ நாதன் எதிரில் தோன்றினர். இருவரும் எழுந்து நின்று ப்ரதக்ஷண நமஸ்காரம் செய்து ஆனந்த பாஷ்பம் பெருக மயிர்க்கூச்சல் உதிக்க சிரஸின்மேல் கராஞ்சலியை வைத்துப் போற்றினர். நாகர்காள்! உங்களது பக்

தியைக் கண்டு உள்ளம் மகிழ்ந்தேன். பரோபகாரார்த்தமாக நீ செய்யும் தபஸ் என்னைப் பரவசமாக்கியது. உன் இஷ்டம் கைகூடும். உன் விருப்பத்தை விரிவாகச் சொல் என்றார்.

பக்தவத்ஸல! ஸர்வஜ்ஞான தங்களுக்கு யான் சொல்லித்தான் தெரியவேண்டுமோ? குவலயாச்வனது குணத்தை அறியீரோ? அவன் என் மைந்தனது நண்பனன்றோ? உயர்குணம் வாய்ந்த உத்தமி மதாலஸையை அவன் இழந்து பரிதபிக்கிறானன்றோ? அச்சுந்தராங்கியை எழுப்பி அவனுக் களிக்க வேண்டியது என் கடமையன்றோ? என்றான். அச்வ தர! அங்ஙனமே ஆகுக! ஆயினும் நீ பித்ரு தேவர்களைக்கருதி சிரத்தையுடன் ஓர் சிராத்தம் செய். மத்யம பிண்டத்தைப் புஜி. உனது நடுப்படத்திலிருந்து முன்போலவே பூர்வஜ்ஞானத்துடன் மதாலஸை எழுந்திருப்பாள் என்று கூறி எம்பிரான் மறைய அங்ஙனமே அச்வதரன் செய்து மதாலஸையைக் கண்டு மகிழ்ந்தான். ஆயினும் ஒருவருமறியாமல் தன் மனையிலே மதாலஸையை மறைத்து வைத்துத் தன் புதல்வர்களை நோக்கி உனது நண்பனான குவலயனைப் பாதாளத்திற்கு அழைத்துவா என்று கூறினான்.

உடனே இரு குமாரர்களும் பூலோகம் சென்று குவலயனைக் கண்டு களித்து நண்ப! ஓர் ஸமயம் நம் வீடு வாராயோ! எனது பந்துக்கள் உன்னைக்கண்டு களிக்கவும் உனக்கு விருந்திடவும் விரும்புகின்றனர் என்றார்கள். குவலயன் இதைக்கேட்டு நண்பர்காள்! இவ்வையகத்திலுள்ள பொருள்களெல்லாம் அழியக்கூடியவைகளல்லவா? இதில் நல்லது அல்லது என்னுடையது என எண்ணம் வைப்பது நம்மைத் துன்பக் கடலில் ஆழ்த்துமல்லவா? மதாலஸையை விட உயர்ந்த ரத்னம் உலகில் உண்டோ? அதே அழிந்து விட்டது. அதில் என்னுடையது என்ற எண்ணம் வைத்ததால் யான்படும் துன்பம் நீ அறியாததோ? ஆதலாலல்லவோ "மம"

என்பது பந்தமென்றும், “நிர்மம” என்பது மோக்ஷகாரணம் என்றும் முனிவர் கூறுகின்றனர். எனக்கு ஸந்தோஷமளிக்கும் எப்பொருளை நீ கொடுக்கப் போகிறாய்? வீணான எண்ணங்களை விடு. உனக்கு ஏதேனும் எனக்களித்து பூஜிக்க வேண்டுமென்கிற விருப்பமிருப்பின் இங்குள்ள பொருள்களைக்கொண்டு அதைப் பூர்த்தி செய். நீ எனது நண்பனாகவின் என் நாடு உன் நாடே, என் பொருள் உன் பொருளேயாகும் என்று குவலயாச்வன் கூறினான். நாக குமாரர்கள் ராஜ குமார! நீ கூறியது முற்றிலும் உண்மையே. அதிலும் மாதாசியை இழந்த சோகத்தால் வைராக்யம் பெற்று நீ சொல்லும் சொற்கள் வேதாந்திகளது வாக்கைவிட மிக்க சிறப்பாகவே இருக்கின்றன.

ஆயினும் உலக வழக்கைநாடி உன் நண்பனான உன் தந்தை என் தந்தையன்றோ? அவர் விருப்பைப் பூர்த்தி செய்வது புதல்வரான நம் சடமையன்றோ? ஆதலால் எப்படியாவது பாதாளம் வந்து என் தந்தை சிந்தையை மகித்து மகிழும்படி செய்வாயாக என்று மன்றாடிப் பலமுறைவேண்டினார்கள். குவலயாச்வன் விருப்பமில்லாவிடினும் நண்பர் வார்த்தையைத் தட்டாது தந்தை தாயை வணங்கி உத்திரவு பெற்று நாக குமாரர்களுடன் நாகலோகம் சென்றான். குவலயாச்வனைக் கண்டவுடன் அச்வதானுக்குண்டான ஆனந்தத்திற்களவேயில்லை. மலர்ந்த முகத்துடன், புன்னகையுடன் எழுந்து நின்று, வருக! வருக! என அன்புடன் வரவேற்று மனிதர்க்கு வேண்டிய முறையில் ஸகல ஏற்பாடுகளையும் செய்து உபசரித்தான். அச்வதரன் அளித்த உபசாரங்களால் மன்னன் மன மகிழாவிடினும் அவனது அன்பைக் கண்டு ஸந்தோஷமடைந்தான்.

சில நாட்கள் சென்றபின் ராஜகுமார! உனக்கு உசிதமான எப்பொருளில் ஆசை. உயரிய ரத்னங்களோ? அத்புத

மான ஆடையாபரணங்களோ ? உனக்குக் கிடைக்காததல்ல வென்றாலும் எனது ஸந்தோஷத்திற்காக எதையேனும் ஏற்றுக்கொள்வாய் என்று சொன்னான். அச்வதரானது அரிய சொற்களைக் கேட்டு ஆனந்தம்கொண்ட அரச குமாரன் ஸர்ப்பராஜ! எல்லா ரத்னங்களைவிட உமது சொல் ரத்னமே என்னை ஆனந்தக் கடலில் அமர்த்தியது. இதைவிட யான் விரும்பும் பொருள் வேறொன்றுண்டோ ? என்றான். உமது அருளால் நான் அடையாத பாக்யமில்லை. மன்னரிற் சிறந்த எனது தந்தை ஆயிரமாண்டுகளாக அரசு புரிந்து வருகிறார். சிற்றரசர்கள் சேர்ப்பிக்கும் செல்வத்திற்கு அளவேயில்லை. தந்தையின் அன்பான ஆதரவிலுள்ள யான், வேண்டிய பாக்யத்தை யனுபவித்து எப்பொருளை யார் வேண்டி வந்தாலும் இல்லை யெனாது வாரிவாரித் தருகிறேன். ஆதலின் யான் விரும்பும் செல்வம் ஒன்றுமில்லையெனலாம். இருந்தாலும் வரத்தை மறுப்பது தர்மமன்று. எனக்கு ஏதேனும் நீர் கொடுக்க விருப்பம் கொண்டால் எப்போதும் என் புத்தி தர்மத்திலேயே இருக்கும்படி வரமருளும் என்றான்.

அதைக் கேட்ட அச்வதரன் தர்மசீல! உமது புத்தி இயற்கையாகவே தர்மத்திலுளது. ஆதலின் அது வரமாகாது. அதை யான் அளிக்கவும் இயலாது. ஆதலின் மனுஷ்ய லோகத்திற்குக் கிடைக்காத வரத்தைக் கேள் என்றார். இதைக்கேட்ட அரச குமாரன் நமக்கு துர்லபமாயுள்ளது மதாலஸையைத் தவிர மற்றொன்றுமில்லை. இதை இவரிடம் வரமாகக் கேட்பது வெட்கமானதென்று எண்ணினான். ஆயினும் அடைய முடியாத மதாலஸை இவர் வரத்தால் கிடைக்கலாகாதா ? என்று எண்ணி தானொன்றும் பேசாமல் தனது நண்பர்கள் முகத்தை நோக்கினான். இங்கிதமறிந்த நாக குமாரர்கள், தந்தையே! மதாலஸை தான் மன்னனுக்கு மானிலத்தில் கிட்டாத வரம். அதை அருள்வீராகில் குவல

யாச்வனது ஹிருதயமும் எங்களது மனதும் பேரானந்தத் தைப்பெறும் என்றான். அச்வதரன் அரசனைப் பார்த்து இது உனக்குச் சம்மதமா? என்று கேட்டான். அரச குமாரன் ஆர்ய! அதற்கென்ன ஸந்தேஹம்! அக்குணவதியை மாயையினால் தோற்றுவித்து மறைத்தலும் போதும் என்றார்.

உடனே அச்வதரன் அரண்மனையில் மறைத்து வைத்திருந்த மதாலஸையை அழைத்து வந்தான். அவளைக் கண்டவுடன் அரச குமாரன் இயற்கையான லஜ்ஜையையும்விட்டு அருகிலிருப்பவரையும் மதியாது ஓடி மாதரசே! வருக!வருக! என்று மதாலஸையைத் தழுவச் சென்றான். அவனைப் பார்த்து அச்வதரன் அரசே! அவள் மாயையால் தோன்றியவளன்றோ? அவளைத் தொட்டால் மறைந்து விடுவள் என்றான். அரசன் மதாலஸை மயமாக இருந்த மனதை மாற்ற முடியாமல் அவளைத் தொட முடியாதெனக் கேட்டவுடன் மூர்ச்சித்துக் கீழே விழுந்தான். நாக குமாரர்கள் அரசனை ஆச்வாஸப்படுத்தினர். அவர் களை தெளிந்தெழுந்ததும் அச்வதரன் நடந்தவற்றைத் தெளிவாகக்கூறி பரிஹாஸமாக அவள் மாயையாய் தோன்றியவள் எனக்கூறியதை மன்னிக்கும்படி பிரார்த்தித்தான். குவலயாச்வன் தன்பொருட்டு தனது நண்பரின் தந்தையான அச்வதரன் பற்பல கஷ்டங்களை அனுபவித்ததையும் பரமசிவனை நாடி தவம் புரிந்ததையும் கேட்டு அவரது பரோபகார சிந்தையைக் கொண்டாடினான். இதற்கு எவ்வகையாக கைம்மாறு செய்ய முடியுமென்று வகை தெரியாது பலமுறை அவரை வணங்கி விடை பெற்றுக்கொண்டான். இவனது தந்தை, மனைவியுடன் குவலயாச்வன் வருவதைக்கேட்டு பரமானந்தமடைந்தான். ஊரை அலங்கரித்தான், பெரியதோர் உற்சவமாகக் கொண்டாடினான். புற்றுயிர் பெற்றெழுந்த மதாலஸை மாமி மாமனுடைய பாதாரவிந்தத்தைப் பணிந்து முன்போலவே பர்த்தாவுடன் கூடி வாழ்ந்து வந்தாள்.

பலகாலம் சென்றபின் சத்ருஜித்தின் விதி முடிந்தது. பரலோகம் சென்றான். குவலயாச்வனே பூவலயத்தை ஆளும் சக்ரவர்த்தியானான். ஸகல ஜனங்களையும் தன் மக்களைப்போல் பரிபாலித்து வந்ததால் இவனது ஆக்ஷிக்கு ஈடு உண்டோ என்று எவரும் இவனைப் போற்றினர். எல்லோருடைய மனங்குளிர ஆக்ஷி புரிந்ததால் இவனது ஸுக துக்கங்களைக் குடிகள் தனது இன்ப துன்பங்களாகக் கருதினர். எல்லாச் செல்வமிருந்தும் புத்ரபாக்யமில்லையே யென ப்ரஜைகள் வருந்தினர். அக்குறையுமில்லாது ஆண்டவனருளால் ஒன்றன்பின் ஒன்றாக நான்கு குமாரர்கள் பிறந்தார்கள். முதல் குழந்தை பிறந்தவுடன் அதற்கு குவலயாச்வன் விக்ராந்தன் என நாமகரணம் செய்தான். அதைக்கண்டு மதாலஸை நகைத்தாள். பின்னர் குழந்தை அழும்பொழுது அதை மடியில் இட்டுத் தாலாட்டினாள். அச்சமயம் குழந்தாய்! ஏன் அழுகிறாய். நீ யாரோ? நான் யாரோ? உனக்குமெனக்கும் என்ன ஸம்பந்தம்? நீ யென்பவன் யார்? உடலோ? அல்லவே? உனக்கு பசி, தாகம், தூக்கம், துன்பம் ஏது? தாயென்றும் தனயனென்றும் எண்ணுவது பேதமையன்றோ? நித்யாநந்தனான உனக்கு பிறப்பிறப்புண்டோ? ஆயினும் மாயையினாலன்றோ இப்பஞ்சபூத உடலைப் பெற்றாய். உண்மையை உணர்ந்து தர்மாதர்மத்தை விடு. ஆத்மானுஸந்தானம் செய். என உபதேசித்தாள். இச்சொற்கள் இளம்பிராயத்திலேயே குழந்தையின் சிறுமூளையில் பசுமரத்தாணிபோல் பதிந்தது. ஆதலால் இல்லற வாழ்க்கையை வெறுத்து துறவி வேஷம் பூண்டானவன்.

இரண்டாவது புதல்வனுக்கு அரசன் ஸுபாஹு என்றும் மூன்றாவது புதல்வனுக்கு சத்ருமர்த்தனன் என்றும் அரசன் நாமகரணம் செய்யும்பொழுது முன்போலவே மதாலஸை பரிஹாஸமாகச் சிரித்து தனயர்களுக்குத் தாலாட்

டும் வகையில் வேதாந்த உபதேசம் செய்து அவர்களை யும் குடும்பத்தில் இல்லாமல் துறவியாகச் செய்து விட் டாள். நான்காவது புதல்வன் பிறந்து நாமகரணம் செய்யும் போது வழக்கப்படி மதாலஸை நகைத்தாள். அரசன் அவ ளைப்பார்த்து எதற்காக சிரிக்கிறாய்? நான் மூன்று குழந்தை களுக்கும் நற்பெயரிட்டேன். நீ சிரிக்கும் காரணம் யாதோ? நானிட்ட நாமதேயம் நியாயமில்லை யென்றால் நீயே உசிதமான பெயர் வை என்றான். அங்ஙனமே ஆகட்டுமென்று மதால ஸை அக்குழந்தைக்கு அலர்க்கன் எனப் பெயரிட்டாள். அர்த்தமில்லாப் பெயரிட்ட நீ நன்னாமம் சூட்டிய என்னைக் கண்டு நகைத்த காரணம் யாதென அரசன் கேட்டான். மதா லஸை, ஸ்வாமின்! தாங்கள் சூட்டிய நாமம் எங்ஙனம் அர்த்த முள்ளதாகும்? அசைவற்ற - ஆன்மாவுக்கு விக்ராந்தன் என்ற பெயர் பொருந்துமோ? உடலில்லா ஆன்மாவுக்கு ஸுபாஹு என்ற பெயர் எங்ஙனம் பொருந்தும்? சத்ரு மித்ரனில்லாத பரமாத்மாவிற்கு சத்ருதமனன் எனப் பெய ரிடுவது உசிதமோ? என்றாள். இதைக் கேட்ட குவலயாச் வன் மதாலஸே! நீ கூறுவது விந்தையாக இருக்கிறது. உனது வேதாந்த அறிவு வாழ்க்கையில் பயன்படுமோ? இவைகளை நிந்தித்துவிட்டு அலர்க்கன் எனப் பெயர் வைத் தாயே. அதன் பொருள்தான் என்ன? என்று வினவினான்.

மதாலஸை மன்னர் திலகமே! இம்மானிடப்பிறவி மாயை யினால் தோன்றியதன்றோ? நாமரூபமற்ற நாதனுக்கு நாமம் சூட்டுவது அழகாமோ? இவ்வுலகப்போக்கு வ்யவஹாரத்தில் மட்டும் பயன்படுமேயல்லாது பரமார்த்ததசையில் நிலை நிற்கு மோ? வ்யவஹாரத்திற்கேற்றபடி ஓர் வ்யவஹாரப் பெயர் வைத்தேனேயல்லாது வேறொன்றுமில்லை என்றாள். இதைக் கேட்ட அரசன் மூன்று புதல்வர்களை முனிவரைப் போல் செய்ததுபோதும். இக் குழந்தையையேனும் இல்லறமார்க்

கத்தில் ஈடுபட்டு தேவ ரிஷி பித்ரு பூஜையைச் செய்யும்படி இவ்வழியில் திருப்புவாயாக. நமது குலம் குன்றாது விருத்தியாக வேண்டுமென்றோ? எல்லோரையும் துறவியாக்கிவிடின் அரசை ஆள்பவர் யார்? என்றான்.

மதாலஸை பதியின்மதிக்கு இணங்கி அக் குழந்தையைத் தாலாட்டும்போது இல்லற தர்மத்தைப் போதித்தாள். அருமைக் குழந்தாய்! ஆசார்யனைப் பணிந்து அவனருளால் அகில வித்யைகளையும் பூர்த்திசெய். அவருக்கு ப்ரியமான தக்ஷிணையை அளித்து நமது வீட்டுக்குத் திரும்பு. நமக்கேற்றபடி நற்குலத்துதித்த நற்குணமுள்ள கன்னிகையை மணந்துகொள். தந்தை தாய்ச்சொல் தவறாதே. பிதாவின் விருப்பத்திற்கிணங்கி யுவராஜ்ய பட்டாபிஷேகம் செய்துக்கொள். ஆபத்திலுள்ளோரைக்காப்பது நமது வர்ண தர்மம். மனுநீதி வழுவாது மானிலத்தை ஆள்வது மன்னனுக்கேற்ற தர்மமாகும். பரோபகாரத்தைச் செய். ஏழைகளிடம் இரக்கம்கொள். விஷ்ணுபக்தியே இம்மை மறுமை சுகத்தையளிக்கும் சாதனமாம். காமக்ரோதலோபமத மோஹமாத்ஸர்யமெனும் ஆறு அரிகளை ஜயி. குலோசிதமான பல யாகங்களைச் செய். பந்துக்களை ரக்ஷி. தஞ்சமென்போரை உன் உயிரைக் கொடுத்தாவது காப்பாற்று. பசுவையோ! பிராமணரையோ! ரக்ஷிக்க உன் உயிரை விடுவாயாகில் அதைவிட சிறந்த தர்மம் வேறு இல்லை என பற்பல தர்மங்களை உபதேசித்தாள்.

அலர்க்கனும் உபநயநமானவுடன் தாயைப் பணிந்து இனி யான் செய்ய வேண்டியதென்ன? என்று கேட்டான். அவளும் பிரவிர்த்தி தர்மத்தைப் போதித்து, காமத்தினால் பாண்டு மாண்டான். கோபத்தினால் அநுஹ்ராதன் புதல்வன் இறந்தான். லோபத்தினால் ஐலன் துன்புற்றான். மதத்தினால் வேனன் அழிந்தான். மானத்தினால் அநுபு ஆயுளை இழந்தான். ஸந்தோஷத்தினால் புரஞ்ஜயன் மரணமடைந்தான்.

ஆதலின் இவைகளில் ஏமாருதே. தர்மத்துடன் பிரஜைகளைப் பரிபாலனம் செய்தால் பிரஜைகளின் புண்யத்தில் பங்கு கிடைக்கும். பிராமணனுக்கு யாகம்செய்தல், செய்துவைத்தல், வேதமோதல், ஓதி வைத்தல், தானம் வாங்குதல், கொடுத்தல் என ஆறு தர்மங்களாம். மன்னனுக்கோ யாகம் செய்தல், வேதமோதல், தானம் செய்தல், குற்றமறக் குவலயத்தைக் காத்தல், ஸ்வதர்மமாம். வைச்யனுக்கு தானம், அத்யயனம், யஜ்ஞம், இவை ஸ்வதர்மம். வியாபாரம், பசுவைக்காத்தல், கிருஷி இவை விருத்திக்கேற்ற தர்மம் என்பது போன்ற வர்ண தர்மத்தையும், ப்ரஹ்மசர்யம், கார்ஹஸ்த்யம், வானப்ரஸ்தம், ஸன்யாஸம் என்ற நான்கு ஆச்ரம தர்மங்களையும் நன்கு உபதேசித்தாள். எல்லாவற்றிற்கும் மூலமாயுள்ளது வேதம். அதே காமதேனு. நீ வேண்டிய பயனை அளிக்கும். ஆதலின் அதை மறவாதே. வைச்வதேவமும் அதிதிபூஜையும் செய்து மிகுந்த அன்னத்தைப் புஜிப்பதே தர்மம்.

நண்பனும் உள்ளூரில் உள்ளவனும் அதிதியாக மாட்டான். ஸரியானகாலத்தில் தற்செயலாக வருபவனே அதிதி. அவனது குலகோத்ரத்தை விசாரிக்கலாகாது. அதிதியைப் பூஜை செய்யாவிடின் அவனது பாபம் நம்மிடமும், நமது புண்யம் அவனிடமும் செல்கிறது. ப்ரஹ்மசாரிகளுக்கும் ஸன்யாஸிகளுக்கும் பிக்ஷையிடத் தவருதே. ரோகமுள்ளவரும், நமது பரிவாரமும் புஜித்தபின் க்ரஹஸ்தன் புஜிக்க வேண்டும். ஸந்தியை ஔபாஸனம் முதலிய நித்ய கர்மங்களையும், புத்ரனுக்கு ஜாதகர்மம் முதலிய நைமித்திகங்களையும், அமாவாஸ்யை முதலிய நித்திய நைமித்திக கர்மாக்களையும் கைவிடாதே என்றாள்.

பிராமணரது பாதத்தை அலம்பும்பொழுது பிசாச ஜன்மத்தை யடைந்த பித்ருக்கள் ஸந்தோஷிக்கின்றனர். ச்ராத்தத்திற்குவேண்டிய பதார்த்தங்கள் கிடைத்தபொழு

தும், துஸ்வப்னம் தோன்றியபோதும், ஜன்ம நக்ஷத்திரத்திலும் க்ரஹங்கள் பீடிக்கும்போதும் யோகி வரும்போதும், பித்ருக்களை உத்தேசித்து ச்ராத்தங்கள் செய்யவேண்டும். கர்த்தாவுக்கும் போக்தாவுக்கும் நியமம் தவறினுல் பித்ருக்கள் துன்பமனுபவிக்கின்றனர். ச்ராத்தத்தில் தௌஹித்ரன், குதபம், எள்ளு, வெள்ளி பாத்ரம் இவைகள் சிலாக்கியமானவை. கோபம், வழிநடத்தல், அவசரம் முதலியவை ச்ராத்த தினத்தன்று விடவேண்டும்.

தூரஸ்த்ரீயைப் பார்த்தல், மயிர் புழு முதலியவைகள் உள்ள அன்னம், குரூரமாகப் பேசுதல் தீயில்பட்ட துணி முதலியவைகளை அடியோடு அகற்ற வேண்டும்.

ஸதாசாரம்

ஸாதுக்கள் ஆசரித்துவந்தது ஸதாசாரம் எனப்படும். வேதமுணர்ந்து பக்ஷபாதமின்றி கர்மானுஷ்டானம் புரிவோர் ஸாதுக்களெனப்படுவர். அந்த ஸாதுக்கள் கைப்பற்றிய தர்மார்த்தகாமமென்ற மூன்று புருஷார்த்தங்களை அடைய முயற்சிக்கவேண்டும். முக்யமாக முதல் புருஷார்த்தத்தைக் கவனிக்க வேண்டும். அதற்கனுகுணமாகவே அர்த்தகாமங்களை அனுஸரிக்க வேண்டும். தர்மமாக ஸம்பாதித்த தனத்தில் நான்கிலொன்றை தர்மத்திற்கும் இருபங்கை குடும்பத்திற்கும் மிகுந்ததோர் பாகத்தை மூலதனத்திற்கும் பங்கிட வேண்டும். காலையில் எழுந்தவுடன் கடவுளை த்யானம்செய்து அன்றன்று அனுஷ்டிக்க வேண்டிய கார்யத்தையும் தீர யோசிக்க வேண்டும். நக்ஷத்திரமிருக்கும்போதே காலை ஸந்தியையை முடிக்க வேண்டும். அஸத்துக்களோடு பேசுதல், பொய், கடினமாகப் பேசுதல், துர்ஜனங்களோடு சேருதல், உதயாஸ்தமனங்களில் ஸூர்யனைக் காணுதல் முதலியவைகள் ஸதாசாரத்திற்கு விருத்தமானவை. தலைவாருதல், கண்ணாடி

பார்த்தல் முதலியவைகளைக் காலையில் செய்ய வேண்டும். நேராக உப்பை இலையில் சேர்த்துக்கொள்ளலாகாது. அத்புஷ்ணமான அன்னத்தை ஏற்கலாகாது. எச்சில் கையுடன் பேசலாகாது. பசு, பிராமணன், அக்நி, தன்தலை இவைகளைத் தொடலாகாது. உடைந்த ஆஸனம், சயனம், பாத்ரம் இவைகளை உபயோகிக்கலாகாது. இரண்டு கைகளாலும் சொறியலாகாது. வடக்குமுகமாகப் பகலிலும், இரவில் தக்ஷிணமுகமாகவும், ஜலமலங்களைக் கழிக்க வேண்டும். தேவாலயம் அரசமரம், அந்தணன், பசு, ஸுமங்கலி முதலியவைகளை வலமாகச் செல்ல வேண்டும். மற்றவர் தரித்த பாதுகை, வஸ்திரம், மாலை, பாத்ரம், முதலியவ்வகளை அன்யர் தொடலாகாது. காலால் காலைத் தேய்க்கலாகாது. கோள் சொல்வதும், காலால் ஆஸனத்தைத் தள்ளுவதும் பாபமாம்.

வடக்கிலும் மேற்கிலும் தலை வைத்துப் படுக்கலாகாது. வாஸனை ஜலத்தில் ஸ்நானம் செய்யாதே. மயிரையும், வஸ்திரத்தையும் உதராதே. நுனியில்லாத் துணியையும், வர்ணமுள்ள வஸ்திரத்தையும் தரிக்காதே. காலை மாலைகளில் படுக்காதே. ஸ்நானம் செய்யாமலோ, மனதை வேறிடத்தில் வைத்தோ படுக்கையிலுட்கார்ந்தோ எதையும் புஜிக்காதே. ரிஷி, தேவ, பித்ரு பூஜைகளை ஆரம்பிக்கும்போது ஆசமனம் செய். உஷ்ணம், நுரை, உப்பு முதலிய தோஷமில்லாத ஜலத்தை, ஹிருதயத்தை அடையும்படி இரண்டு கால்களுக்கிடையே கைகளை வைத்து ஆசமனம் செய்.

ருது ஸ்நானம் செய்த தினமும் ஒற்றைப்படையாதவின் ஐந்தாவது தினமும், ஸ்திரீ புருஷ ஸங்கத்திற்கேற்ற தினமல்ல. இரட்டைப்படையான தினத்தில் புத்ரனும், ஒற்றைப்படையான தினத்தில் புத்ரியும், ராத்ரியின் முதல் பாகத்தில் தர்மமில்லாக் குழந்தையும் ஸந்தியா காலத்தில்

நபும்ஸகமும் பிறக்கும். லோபியுடனும், மிகச் சிலவுசெய்ய வனிடமும் சேரலாகாது.

நண்பன், தீக்ஷிதன், அரசன், ஸ்நாதகன், மாமனர், ரித்விக், இவர்களை மதுபர்க்கம் செய்து அர்ச்சிக்கவேண்டும். கன்று ஊட்டும்போது அதை யஜமானனிடம் சொல்லக் கூடாது. இரண்டு கைகளாலும் ஜலத்தைக் குடிக்கலாகாது.

வாயால் அக்னியை ஊதலாகாது. கடன் கொடுப்ப வன், வைத்யன், வேதமறிந்தவன், நதி இவைகளில்லாவிடத் தில் குடியிருக்கலாகாது. உணவில் மயிர் முதலிய அசுசிகள் காணப்பட்டு அவ்வன்னத்தை நீக்க முடியாவிடில் மண், ஜலம், பஸ்ம, ஆஜ்யம் இவற்றிலொன்ருல் சுத்தம் செய்து புஜிக்கலாம். குருணிக்குக்குறைந்த தான்யம் சண்டாளனல் தொடப்பட்டால் அதை அலம்பியே எடுக்கவேண்டும். அதற்கு மேல்பட்டதாயின் ப்ரோக்ஷித்தால் போதும். ஆடு குதிரை இவைகளின் முகம் சுத்தமாகும். பசுவின் முகமும் கன்றின் முகமும் சுத்தமல்ல. வீட்டை விளக்கிக் காலையில் சாணியிட்டு அலங்கரிக்காத பெண்ணின் வம்சம் விருத்தி யாகாது. உரல் உலக்கை முறம் முதலியவைகளைக் காலால் தொடக்கூடாது.

ஹோமம் செய்யாதவன் ஷண்டன். டம்பமாக அநுஷ் டானம் செய்பவன் பூனை. சக்தி இருந்தும் தானம் செய்யா தவன் ஆகுதன். பக்ஷபாதமாகப் பேசுபவன் கோழி. ஆபத் தில்லாத காலத்தில் அன்ய தர்மத்தை அவலம்பித்தவன் பதிதன். வேதம் கற்காதவன் நக்நன். ஆசையை உண்டு பண்ணி ஏமாற்றுபவனும் சரணுகதனைக் கைவிட்டவனும் சண்டாளன். ஸாதுக்களால் விலக்கப்பட்டவன்குண்டாசீ. இவர்களது அன்னத்தைப் புஜித்தால் பாபம் உண்டாகும். இங்ஙனம் மதாலஸை உபதேசிக்க அலர்க்கனெனும் அவன் புதல்வன் அங்ஙனமே அகில தர்மங்களையும் அநுஷ்டித்து

வந்தான். இவனிடம் ராஜ்யத்தைக் கொடுத்து குடிகளை அவன் அன்புடன் ஆளுவதையும் அவனுக்கு ஓர் குழந்தை பிறந்ததையும் பார்த்து குவலயாச்வன் மதாலஸையுடன் தபோவநம் சென்றான்.

போகும்பொழுது மதாலஸை மகனைப் பார்த்து அலர்க்க! யான் சொன்ன தர்மங்களை மறக்காதே. உனக்கு அகற்றமுடியாத ஆபத்து வருங்காலத்தில் இம்மோதிரத்தை இழுத்து உள்ளே பார்! தக்க உபதேசம் அதில் வரைந்திருக்கும். அதைப் பின்பற்று என்றுகூறி ஓர் அழகிய மோதிரத்தைக் கொடுத்துவிட்டுப் பர்த்தாவுடன் வநம் சென்றாள்.

பல்லாண்டுகள் சென்றும் அலர்க்கனுக்கு போகத்தில் வெறுப்புண்டாகவில்லை. தர்மம் தவறாது தரணியை ஆண்டு வந்தான். இவனது ஸஹோதரனான ஸுபாஹு என்பவன் இவனுக்கு வைராக்யத்தை உண்டுபண்ணி மோக்ஷமார்க்கத்திலீடுபடும்படி செய்யவேண்டு மென்றெண்ணினான். ராஜ்யம் முதலிய இம்மைச் சுகங்களில் பல துன்பங்களுண்டு. ஆதலால் அதைவிட்டுப் பேரானந்தத்தை அடை என்று நேரில் உபதேசமாகக் கூறினால் விரைவில் அவன் இதை ஏற்கமாட்டான். அநுபவத்தில் ராஜ்யம் துக்கம் எனக்காட்டவேண்டு மென்று கருதினான் ஸுபாஹு. உடனே காசி ராஜனைச் சரணமடைந்து மூத்தவனாதலால் என்னிடம் ராஜ்யத்தை விட்டு இளையவனான நீ, நான் சொன்னபடி நடக்கவேண்டும். இல்லையேல் போரிடவேண்டுமென அலர்க்கனுக்கு தூதனுப்பினான். இது நியாயமே; ஆனால் எனது ஸஹோதரன் என்னை ராஜ்யத்தைக்கொடு என்று கேட்கட்டும்; நான் கொடுக்கிறேனென்றான். ஸுபாஹுவோ, யான் க்ஷத்ரியனாதலால் கொடு என்று எவரையும் எதையும் கேட்கமாட்டேனென்றான்.

ஸுபாஹுவின் சொற்படி காசி ராஜன் படையெடுத்து வந்து அவர்கள் ராஜ்யத்தினருகே தங்கினான். கொஞ்சங்

கொஞ்சமாக சிற்றரசர்களது ராஜ்யத்தைக் கைப்பற்றினன். அவர்களைக் காக்க அலர்க்கன் எண்ணிறந்த ஸேனையையும் தநத்தையும் மற்ற ஸாதனங்களையும் அனுப்பி வந்தான். காசி ராஜன் கனவேகமாக சிற்றரசர்களை வசப்படுத்திக்கொண்டு அலர்க்கன் கோட்டையை முற்றுகைபோட்டான். ஸேனையு மழிந்து தனமும் குறைந்து போகவே அரசன் தனக்கு வந்த துன்பத்தை எண்ணி வருந்தினன். ஆபத் காலத்தில் பாரென அன்னை அளித்த அங்குளீயகம் அவன் நினைவுக்கு வந்தது. உடனே ஸ்நானம் செய்து இஷ்ட தேவர்களைப் பூஜித்து, அக் கணையாழியைத் தேய்த்தான். அதில் "ஸங்கத்தை விடு; அதைவிட முடியாவிடில் ஸாதுஸங்கத்தைக் கைக்கொள். காமத்தைக் களையமுடியாவிடில் மோக்ஷத்தில் காமத்தைவை" என்ற அரிய உபதேசம் அங்கு வரையப்பட்டிருந்தது. உடனே அலர்க்கன் ராஜ்ய ஆசையைவிட்டு ஸத்ஸங்கத்தைத் தேடினன். மஹாவிஷ்ணுவின் அவதாரமான தத்தாத்ரேய ரைச் சரணமடைந்தான். பணிந்துப்போற்றும் பார்த்திப னைப் பார்த்து, நீ யார் என அவர் வினவினர்.

ஐயனே! யான் பஞ்சபூதங்களல்ல. மனோவ்யாபாரங் களல்ல. மூவ்வகை துக்கங்களையும் அனுபவிப்பவனல்ல. நித்யனுய், நிர்மலனுய், நிராமயமாய், நிரஞ்ஜனனுய் நிற்கும் பரமாத்மா. பகவந்! அஜ்ஞானத்தாலன்றோ உடலை நானென நினைத்துத் துன்பம் தோன்றுகிறது. பந்தத்தை யளிக்கும் நான், என்னுடையது என்ற எண்ணம் தடிக்கிறது. நான் என்பதை விட்டவனன்றோ நன்மை பெறுவான். நம் வீட் டில் வளர்த்த பக்ஷியை ஓர் பூனை புசித்தால் எவ்வளவு துக்கம் உண்டாகுமோ அவ்வளவு துக்கம் பூனை எலியைத் தின்னும் போது உண்டாவதில்லை. ஆதலின், அஹங்காரத்தை யகற்றி மெய்ப்பொருளைக் காட்டி மோக்ஷாமிருதத்தை ஊட்டு மென்றான். இதைக்கேட்ட தாத்தாத்ரேயர் அலர்க்கா!

நீயல்லவோ பிறருக்கு உபதேசிக்கத்தக்கவன். உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உள்ள பொருளை உள்ளபடியே உண்மையாக உரைத்தாய். உனக்கு எங்ஙனம் இந்த ஞானம் உதித்தது என்று கேட்டார். மதாலஸையினது உபதேசத்தையும் மோதிரத்தின் வழியாக ஸத்ஸங்கத்தை நாடென அவள் கூறியதும் தங்கள் ஸன்னிதான விசேஷத்தினாலும் இவ்வறிவைப் பெற்றேன். மனமொடுங்கி மெய்யறிவு பெற்றுபேரானந்தத்தை யனுபவிக்கும்படி அநுக்ரஹம் புரியுமென்றான்.

யோக கலை.

அரசே! ஜ்ஞானமெனும் கத்தியைக்கொண்டு மோஹமெனும் மரத்தைவெட்டி மோக்ஷமெனும் பழத்தைப் பெறுவாயாக என்றார். குரோ! அழகாகச் சொல்லவும் கற்றிருக்கிறேன்; நன்றாக காதாரக் கேட்கிறேன். ஆனால், மனம் நிலைத்து ஒரு நிமிஷமேனும் பிரம்மத்தில் லயமாகவில்லையே. அதற்குரிய மார்க்கத்தை அருளவேண்டும் என்று பக்தன் பிரார்த்திக்க, ஆசார்யன் அருளினார். அஸங்கம் என்ற பற்றில்லாமையால் விஷய போகங்களில் வைராக்யமுண்டாகும். பிராணாயாமத்தால் இந்திரிய தோஷமகலும். அக்னி ஸ்வர்ணத்தின் தோஷத்தையகற்றுவதுபோல் மனதின்தோஷத்தை நீக்கவல்லது பிராணாயாமமே. பனிரண்டு மாத்திரை காலம் பிராணனை யடக்குவது லகுவாம். இருபத்தினான்கு மாத்திரை காலம் அடக்குவது மத்யமமெனப்படும். முப்பத்தாறு மாத்திரை யடக்குவது உத்தமமாம். லகுவை அப்யஸித்தால் வியர்வை தோன்றும். தீர்க்ககால அப்யாஸத்தால் அதை ஜயிக்கவேண்டும். மத்யமாப்யாஸத்தால் நடுக்கத்தையும் உத்தமத்தினால் விஷாதத்தையும் ஜயிக்கவேண்டும். யோகம், ஸ்வாதீனம் செய்யப்பட்ட ஸிம்மம்போல் நம்மிடமிருந்து நமது சத்ருக்களையே கொல்லும். இந்த யோகாப்

யாஸத்தில் த்வஸ்தி, பிராப்தி, ஸம்வித், பிரஸாதம் என நால் வகையுண்டு. மனதிலுள்ள மலங்கள் நாசமாகி நிர்மலமாயிருத்தல் த்வஸ்தி எனப்படும். இஹபாரஸௌகத்தில் ஆசையில்லாமல் இருத்தல் பிராப்தி யெனப்படும். முக்காலமும் கிரஹ நக்ஷத்திரங்களும் தேவர்களும் பிரத்யக்ஷமாவது ஸம்வித் எனப்படும். ஒன்றிலும் பற்றில்லாமல் அலையற்ற தடாகம்போல் வெளுத்து நிற்கும் நிலை பிரஸாதமெனப்படும்.

பனிரண்டு பிராணயாமம் ஓர் தாரணையாம். இரு தாரணைகளே யோகமெனப்படுவது. அந்த யோகத்திலுள்ளோன் வேறு எதையும் விரும்பான். மனதை தரிப்பது தாரணையாம். இந்திரியங்களைத் திருப்புவது ப்ரத்யாஹாரம். நாபி, ஹிருதயம், மார்பு, கழுத்து, முகம், நாஸிகை, கண், புருவத்தினிடை, தலை என்ற பத்து இடங்களில் வாயுவோடு மனதை நிறுத்துவது ஓர்வகை அப்யாஸமாகும். யோகிக்கு ஆகாசமும் அணுவும்கூட ப்ரத்யக்ஷமாகும். சத்தமுள்ள இடம், தீ, ஜலம், குட்டிச்சுவர், தெரு, குப்பை, ச்மசானம், நதீ, கிணறு, புற்று, எரும்புள்ள இடம் இதுபோன்ற ஸ்தானங்கள் யோகாப்யாஸத்திற்கேற்ற இடமல்ல. ஸித்தி பெற்றவன் அசஞ்சலனாகவும், ரோகமற்றவனாகவும், அக்ரூரனாகவும், வாஸனையுள்ளவனுக்வும், ஜலமலம் குறைந்தவனாகவும், காந்தியுள்ளவனாகவும், தெளிவும், அழகிய ஸ்வாமுமுள்ளவனாகவும் இருப்பான். யோகத்திற்கு விரோதமாக யாகம், அதிதிபூஜை, தானம் முதலிய ப்ரவிருத்தி மார்க்கங்கள் தோன்றும். உண்மையான யோகிக்கு வேத சாஸ்த்ரார்த்தங்கள் தானே தோன்றும், அந்நிலை பிரதிபை எனப்படும். எங்குமுள்ள சப்தம் அர்த்தத்துடன் இவன் காதில் படும். அது ச்ராவண நிலையாம். எட்டு தேவ்ஜாதி விசேஷங்களையும் தர்சிக்கும் நிலை தேவமாம். ஸகல ஆசாரத்தையும் விட்டதால் ஒரு வித ஆச்ரயமும் இல்லாமல் தனியாக மனம் சுற்

றும் நிலை பிரம்மம் எனப்படும். சுழல்போல் மனம் சுழலும் நிலை ஆவர்த்தமெனப்படும். இவ்வைந்தும் அணிமா, லகிமா, மஹிமா, கரிமா, பிராப்தி, ப்ராகாம்யம், ஈசித்வம், என அஷ்டமா சித்திகளும் யோகபலமான ஞானத்தைக் கெடுக்கும் விக்னங்களாம்.

உண்மையான யோகி கௌரவத்தை விஷமாகவும் அகௌரவத்தை அமிருதமாகவும் எண்ணுவான். யோகிகள் மாத்திரமல்லாது எல்லோருமே, கண்பார்த்தவிடத்தில் காலை வைக்கவேண்டும். வஸ்திரத்தினால் வடிக்கட்டிய ஜலத்தையே குடிக்கவேண்டும். ஸத்ய வசனத்தையே சொல்லவேண்டும். புத்தியில் சுத்தமானதை நினைக்கவேண்டும். தன் நிஜ உருவத்தைக் காட்டாமல் பித்தனைப்போல் திரியவேண்டும். கஞ்சி, மோர், பால், கந்தமூலம், பழம் முதலியவைகளையே உட்கொள்ளவேண்டும். களவாமை, காமமில்லாமை, தியாகம், லோபமின்மை, அஹிம்ஸை இவ்வைந்தும் யோகி கொள்ளத்தக்க வ்ரதங்களாம். கோபமின்மை, குருபணிவிடை, அல்பாஹாரம், இவைகளே நியமங்களாம். வேதத்தை விட யஜ்ஞம் சிறந்தது. யஜ்ஞத்தைவிட ஞானமும் ஞானத்தைவிட த்யானமும் சிறந்ததாம். துருவன், சுக்ரன் முதலியவைகள் கண்ணில் படாவிடில் ஓராண்டில் இறப்பான். கிரணமில்லாமல் ஸூர்ய பிம்பம் கண்ணில் பட்டால் பதினோரு மாஸத்திலும், ஸ்வப்னத்தில் வாந்தி, ஜலமலம் இவைகளில் ஸ்வர்ணத்தைக் கண்டால் பத்து மாஸத்திலும், ப்ரேதபிசாச கந்தர்வ நகரங்களை ஸ்வப்நத்தில் கண்டாலும் மரங்கள் ஸ்வர்ணமாகக் காணப்பட்டாலும் ஒன்பது மாஸத்தில் மரணமுண்டாகும். திடீரென்று பெருத்தவன் இளைத்தாலும், இளைத்தவன் பெருத்தாலும் எட்டுமாதத்திலும், புழுதியிலும், சேறிலும் காலடி பாதி தெரிந்து பாதி மறைந்தால் ஏழு மாதத்திலும் தன் தலையில் காக்கைக் கழுகு உட்கார்ந்தால் ஆறு

மாதத்திலும் காக்கைக் கூட்டமும் புறுதிக் கூட்டமும், தலை யில் விழுந்தால் ஐந்து மாதத்திலும், தன் நிழல் வேருகக் காணப்பட்டால், நான்கு மாதத்திலும், மேகமில்லாவிடத்தில் மின்னல் காணப்பட்டாலும், இரவில் இந்திர தனுஸ் காணப் பட்டாலும் மூன்று மாதத்திலும், கண்ணுடி ஜலம் முதலிய வைகளில் தலையில்லாமல் நிழல் தெரிந்தால் ஒருமாதத்திலும், சரீரத்தில் ப்ரேத வாஸனையுண்டானுல், பதினைந்து நாளிலும், ஸ்நானபானம் செய்தபிறகு ஹிருதயம் கால் நாக்கு முதலி யவை உலர்ந்தால் பத்து நாளிலும், காதை மூடியபொழுது உள்ளிருந்து சப்தம் கேளாதபொழுது ஸமீபத்திலும் மரண முண்டாகும்.

இங்ஙனம் தத்தாத்ரேயரால் உபதேசிக்கப்பட்ட அலர்க் கன் குருவைப்பணிந்து, ஸ்வாமிந்! ஸுபாஹுவும் காசிராஜ னும் என்னுடன் போருக்கு வந்ததும், என்னுட்டைக் கைப் பற்றியதும் எனதுநன்மைக்கே என்று நினைக்கிறேன். இல்லை யேல்,நானெங்கே தங்களைச் சரணமடையப்போகிறேன்.இவ்வ ரிய உபதேசந்தான் பெறக்கிடைக்குமோ? என்று குருவைப் பணிந்து அவர் ஆக்ஞையைப் பெற்று நாட்டுக்குத் திரும்பி ஞன். காசிராஜனும் ஸுபாஹுவும் இருப்பிடம் வந்து அவர் களைப் பணிந்து மனமகிழ்ச்சியுடன், "நீங்களே இம்மண்ணுல கை ஆளுங்கள். நான் ஒன்றையும் வேண்டேன்" என்று அலர்க்கன் கூற, அவர்கள் "இதுவோ க்ஷத்திரிய தர் மம்? போர்புரிந்து பகைவனை வென்று பார் ஆளுவதன்ருே பார்த்திவலக்ஷணம்!" என்றனர். அலர்க்கன் ஆசார்யனரு ளால், இந்த ராஜ்யத்தைவிட சிறந்த ஆத்ம ஸாம்ராஜ்யத்தை ஆளப்போகிறேன்,என்ருன்.ஸுபாஹு காசிராஜனை வணங்கி "யான் வந்த கார்யம் முடிந்து விட்டது; உமக்கு வந்தனம். அலர்க்கா! என் இஷ்டம் கூடி வந்தது, இருவரும் விடை யளியுங்கள்" என்று கூற, வந்த வேலை யாதென காசிராஜன் கேட்டான்.

மதாலஸை எனும் என் தாய் இளமையிலேயே ஞானப் பாலை எனக்கு ஊட்டினுள். யானும் மற்றிரு ஸகோதரர்களும் மாதாவின் சொற்படி துறவிகோலம் கொண்டு மோக்ஷமார்க் கத்தில் இறங்கினேம். இளையவன் மட்டிலும் இல்லறத்தில் ஈடுபட்டு மோகவலையில் சிக்கினுன். அவனை விடுவிக்கவே இங் ஙனம் செய்தேன்! என்றுரைத்தான். இதைக்கேட்ட காசி ராஜன் துறவறத்தைக்குறித்து விரித்துரைக்கும்படி வேண் டினுன். அங்ஙனமே அவன் கூறிய உபதேசத்தைப் பெற்று ஊருக்குச் சென்றுர். அலர்க்கனும் முதல் புதல்வனுக்குப் பட்டாபிஷேகம் செய்து ஸ்வபாஹுவுடன் வனம் சென்று வேதாந்த விசாரத்தில் ஈடுபட்டான் என்ற இக்கதைகளைப் புதல்வன் தந்தைக்குக்கூற, இருவர்களும் வானப்ரஸ்தாச்ர மத்திலிருந்து க்ரம ஸன்யாஸம் பெற்று மோக்ஷஸாம்ராஜ்ய மடைந்தனர். இவ்வறிய கதைகளைக் கூறின பக்ஷிகளைப் பணிந்து, ஜைமினி, உலகம் உண்டான வகையைக் கூறும்படி வேண்டினுர்.

ஜகத்ஸ்ருஷ்டி

பக்ஷிவடிவமான நான்கு ரிஷிகுமாரர்களும் தனது குரு வான மார்க்கண்டேயரைப் பணிந்து அவர் கௌஷ்டிகி என்ற பிராமணனுக்குக் கூறினபடி உலக உற்பத்தியைச் சொல்ல ஆரம்பித்தார்கள். இவ்வுலகம் இன்று நேற்று புதிதாகத் தோன்றியதல்ல. அனுதியாய் தோன்றிமறைந்து மறுபடியும் தோன்றும் இயற்கையுள்ளது. மஹாப்ரளயமெனும் பெரும் பிரளயத்தில் மெழுகில் தங்கப்பொடி ஒட்டுவதுபோல் பர மாத்மாவிடம் ஸகல ஜீவராசிகளும், தத்தம் புண்ய பாப வாஸனைகளுடன் லயமாகின்றன. அங்ஙனம் பல காலம் செல்ல, விதையினுள் முளைதோன்றுவது போல் பிராணி களது கர்மா பரிபக்வமானவுடன் பரமான்மாவுக்கு ப்ரஜை

களைப் படைக்க வேண்டுமென்ற எண்ணம் உண்டாகின்றது. இவ்வண்ணமே, மாயை என்றும் பிருகிருதி என்றும் அவ்யக்தமென்றும், பிரதானம் என்றும், பற்பல ஸமயத்தினரால் பல பெயர்கொண்டு அழைக்கப்படுகிறது. இது இருந்தும் இல்லாதது போல் இல்லாமலிருந்தும் இருப்பது போல் தோன்றுவதால் அநிர்வசனீயமென்றும் சொல்வார்கள்.

பிரக்ருதியிலிருந்து மஹத், அதிலிருந்து அஹங்காரம், அஹங்காரத்திலிருந்து பஞ்சதன்மாத்திரைகள் முதலியன தோன்றின. மஹா விஷ்ணுவினுடைய நொந்திக் கமலத்திலிருந்து தோன்றிய தாமரையில் சதுர்முகப்ரஹ்மன் பிறந்தான். அவரெதிரே ஒன்றும் தோன்றவில்லையாதலால் அவர் என்ன செய்வதெனத் தெரியாமல் விழித்திருக்கும்போது "தப, தப" என்ற சப்தம் அவர் காதில்விழ அவர் யோசிக்கலானார். உடனே ஸகல வேதங்களும் இதிஹாஸ புராணங்களும், அவர் முன்னேதோன்ற அவர் அவ்வேத சப்தங்களைக் கொண்டே முன் கல்பத்திலிருந்தபடி ஸகல ஜகத்தையும் படைக்க ஆரம்பித்தார். கலைமுதலாக கல்பம் ஈராக உள்ள கால பேதங்களையும்,மஹத், தந்மாத்திரை, வைகாரிகை, முக்யம், திர்யக், ஊர்த்துவம், அர்வாக், அநுக்ரஹம் என்ற ஒன்பது வகையான ஸ்ருஷ்டியையும் செய்து முடித்தார். இதில் ஐந்து ப்ராகிருதமென்றும் நான்கு வைக்ருதமென்றும், கூறப்படும். தேவர், அஸுரர், பித்ரு, மநுஷ்யர், என்ற நால் வகையான ஸ்ருஷ்டியையும் செய்ய ஜலத்தில் தன் சக்தியைச் சேர்த்தார். பித்ருக்களைப் படைத்தவுடன் அவர்களைக் கண்டு ப்ரியமுண்டாகாமல், அழகிய சரீரமுடையவர்களும் இனிய சாரீரமுடையவர்களுமான தேவகந்தர்வர்களைப் படைத்தார். பிரம்மாவினது கேசம் பரவிநிற்க, அதிலிருந்து ஸர்ப்பங்கள் தோன்றின. ஹீனமான மயிர்களிலிருந்து அஹிகளென்னும் ஸர்ப்பங்கள் தோன்றின. பசுவை த்யானம் செய்யும்போது

கந்தர்வர்கள் உதித்தனர். பின்னர் பசு ஜாதிகள் பிறந்தன. காயத்ரீ முதலிய சந்தஸ்ஸையும் யஜ்ஞத்தையும் படைத்தார். முகத்திலிருந்து ஸத்வகுணமுள்ள ப்ராம்மண தம்பதிகளேயும், மார்பிலிருந்து ரஜோகுணமுள்ள க்ஷத்ரிய தம்பதிகளேயும், தொடையிலிருந்து ரஜஸ்ஸும் தமஸ்ஸும் கலந்த வைச்யர்களேயும், பாதத்திலிருந்து தமோகுணம் நிறைந்த சூத்ரர்களேயும் படைத்தார். இங்ஙனம் பிரம்மா காலையில் எழுந்தவுடன் உலகப்படைப்பும் இரவில் உலகம் ஒடுங்குவதும் தொன்று தொட்டு நடந்துவரும் முறையாம். யுகந்தோறும் மனிதர்களுக்கு வயதும் தர்மமும் மாறுபடும். கிருதயுகத்தில் நானூறும், த்ரேதையில் முன்னூறும், துவாபரையில் இருநூறும் கலியில் நூறுமாக ஆயுள் பிரமாணம் நிர்ணயிக்கப்பட்டுளது.

அதர்ம ஸ்ருஷ்டி

சிரத்தை காமனேயும், ஸ்ரீ தர்ப்பனேயும், (கொழுப்பு) த்ருதி (தைர்யம்) நியமத்தையும், துஷ்டி ஸந்தோஷத்தையும், படைத்தது. அதர்மன் ஹிம்ஸையை மனேவியாகக் கொண்டான். ம்ருத்யு அலக்ஷ்மியை மணந்தான். இந்த தம்பதிக்கு பதினன்கு துஷ்டப் புதல்வர்கள் தோன்றி மனிதர்களது, தசேந்திரியங்களிலும் தங்கி ஸமயம் பார்த்து மானிடர்களேக் கொல்கின்றனர். இவர்களில் துஸ்ஸஹன் என்பவன் மிகக் கொடியவன். ஸகல உலகையும் பக்ஷிக்க அவன் ஆரம்பித்த போது சதுர்முகப்பிரம்மன், அவனது அஹங்காரத்தை அடக்கினர். துஸ்ஸஹன் அவரைப்பணிந்து எனக்கேற்ற உணவும் இருக்க இடமும் அளிக்கவேண்டுமெனப் பிரார்த்தித்தான். ப்ரம்மா, ஸ்வதர்மத்தை அனுஷ்டிக்காத மனிதன் உனக்கு இருப்பிடமாகும். எச்சில், புழு, மயிர், நாயின் பார்வை முதலியவைகளால் அசுத்தமான அன்னமே உனக்கு உணவாகும். உடைந்த பாத்திரத்திலுள்ள அன்னமும்,

உடைந்த ஆஸனத்திலுட்கார்ந்து புஜிப்பவன் அன்னமும், தூரஸ்த்ரியால் பார்க்கப்பட்ட அன்னமும், சிரத்தையில்லாமலோ ஹோமம் செய்யாமலோ கோபத்துடனே வியாதியுடனே தானம் செய்த அன்னமும் உன்னைச் சார்ந்ததாகும் என்றார்.

அன்றியும் கர்ப்பஸ்திரீ ஸங்கமம், சாஸ்திர நிந்தை, பங்திபேதம், பூஜை வைச்வதேவமில்லாத பாகம், சண்டையுள்ள விடு, காரணமில்லாத உபவாஸம், ப்ரஹ்மசர்யமில்லா அத்யயநம், யோக்யதையில்லாதவன் செய்த யாகம், இவைகள் துஷ்டனான உனக்கு வாஸ ஸ்தலமாகும். வைச்வதேவம் செய்து பலியிடுவோர் வீடும், சஞ்சல புத்தியில்லாதவனும், ஜிதேந்திரியனும், ஸந்தோஷமுள்ள தம்பதிகளும் வெட்கம் முதலிய பாதிவ்ரத்யகுணம் நிறைந்த பதிவருநதையிருக்குமிடமும், நீ போகத்தக்கதல்ல. காலை மாலைகளில் வாசற்படியை அலங்கரித்து பூஜிப்போரில்லத்தைக் கண்ணெடுத்தும் பார்க்காதே. தூங்கி யெழுந்தவுடன் சூர்யன், தீபம், லக்ஷ்மி, சந்தனம், வீணை, மது, நெய், தாம்ரபாத்ரம் முதலியவைகளைத் தர்சிப்பவர் மனைக்குச் செல்லாதே. ஐந்து புருஷன், மூன்று ஸ்திரீ, மூன்று பசுக்கள் சேர்ந்து எந்த வீட்டிலிருக்கின்றனவோ அவ்வீடும், ஓராடு, ஐந்து எருமை, ஆறு குதிரை, ஏழு யானை உள்ளவீடும், முறத்தின் காற்று, குடத்தின் ஜலத்தால் ஸ்நானம்செய்தல், வஸ்த்ரஜலம், நகம்பட்ட ஜலம், இவை நீ வஸிப்பதற்கேற்ற இடமாகும் என்று ப்ரஹ்மா கூறினர்.

இந்த துஸ்ஸஹனுக்கு நிர்மார்ஷ்டி என்றோர் மனைவி உண்டு. அவளுக்கு ருது காலத்தில் சண்டாள தர்சனத்தால் எட்டு பிள்ளைகளும், எட்டு பெண்களும் உண்டானார்கள். தந்தாக்ருஷ்டி என்பவன் முதல் புதல்வன். அவன் மனிதர்கள் பல்லில் வஸித்து குழந்தைகளைப் பீடிக்கிறான். வெள்

லைக்கடுகை, ராக்ஷஸர்களைக் கொல்லும் மந்திரத்தால் ஜபித்து இரைத்தால் அவனது பீடை அகலும். உக்தி என்பவன் வாக்கில் தங்கி நின்று சிசுக்களை ஹிம்ஸை செய்கிறான். நற்சொற்களாலும் பகவந் நாம ஸங்கீர்த்தனத்தாலும் அவனை அகற்றலாம். பரிவர்த்தகன் என்பவன் கர்ப்பத்தையும் குழந்தையையும் மாற்றி விடுகிறான். வெள்ளைக் கடுகால் வெல்லத்தக்கவன் அவன். அங்கத்ருக் என்பவன் வாயுவைப் போல் சரீரத்தைப் பிடிப்பான். தர்ப்பைகளால் அவனை வெல்லலாம். சகுனி என்பவன் பக்ஷிகளிடம் தங்கி நமது கார்யத்தைக் கெடுப்பான். ஆரம்பித்த கார்யத்தை விடுவதே அதற்கு சாந்தியாம். கண்டப்ராந்தரதி என்பவன் கழுத்திலிருந்து ஹிம்ஸிப்பான். பிராமணர்களது வாக்காலும், தேவஸ்தோத்ரத்தாலும், கோமூத்ரத்தாலும், அதைச் சாந்தி செய்யலாம். கர்ப்பஹா என்பவன் கர்ப்பத்தைக் கெடுப்பவன். சிவ, ராம, கிருஷ்ணஎன்ற மந்திரங்களை எழுதுவதாலும் நல்ல புஷ்பத்தைத் தரிப்பதாலும், சௌசத்தினாலும் அவனை வெல்லலாம். ஸஸ்யஹா என்பவன் எட்டாவது புதல்வன். பயிர் பச்சைகளை அழிப்பவன். பழைய பாதரக்ஷையைப் பயிரினருகே தொங்கவிடுவதால் அவனை வெல்லலாம்.

நியோஜிகை என்கிற பெண் பரபுருஷரிடத்திலோ பரஸ்திரிகளிடத்திலோ ஆசையை உண்டுபண்ணுவாள். நற்சாஸ்திர உபதேசத்தினால் அவளை வெல்லலாம். விரோதினீ என்பவள் குடும்பத்தில் ஒருவர்க்கொருவர் விரோதத்தை உண்டு பண்ணுகிறவள். பொறுமையாலும் சாஸ்திராசார ஸேவையாலும் இவளை ஜயிக்கலாம். ஸ்வயம்ஹாரகரி என்பவள் அன்னம் முதலியவைகளைக் கெடுப்பவள். ஹோமத்தினால் இவள் பீடை அகலும். ப்ராஹ்மிணீ என்பவள் சித்தத்தைச் சஞ்சலப்படுத்துகிறவள். பூஸூக்த ஜபத்தாலும் வெள்ளைக் கடுகாலும் இவளை அடக்கலாம். ருதுஹாரிகா என்பவள்

ருது மூலமாக பெண்களைக் கெடுப்பவள். நதீஸ்நாநத்தினால் இதை அகற்றலாம். ஸ்மிருதிஹா என்பவள் நினைவை அகற்றுகிறவள். ஏகாந்த இடத்தில் வீற்றிருந்து இதை வெல்லலாம். பீஜஹாரிணி என்பவள் பீஜத்திலிருந்து புருஷர்களைக் கெடுப்பவள். சுத்தான்னத்தினாலும் நதீஸ்நாநத்தினாலும் அதைப் போக்கலாம். த்வேஷிணீ என்பவள் எல்லோருக்கும் துவேஷமுண்டாகும்படியான கார்யத்தைச் செய்யத் தூண்டுகிறவள். மது க்ஷீரஹோமத்தால் அதையும் அகற்றலாம். இங்ஙனம் துஸ்ஸஹனது ஸந்ததியான பதினாறுபேரும் உலகிற்குப் பல வகையான ஹிம்ஸையைச் செய்கிறவர்கள். யமன், கழுகின் உருவையும், காலன் காக்கையின் உருவையும், நிருருதிகோட்டான் உருவையும், வியாதி பெருங்கழுகின் உருவையும் எடுத்ததால், இவைகள் உட்கார்ந்த வீட்டில்,வஸிக்கலாகாது.

பொது தர்மம்

கர்ப்பமுடைய பெண் ஆறுமாதத்திற்குமேல் மாம்ஸ ஆஹாரத்தைப் புஜிக்கலாகாது. இரவில் மரத்தின் நிழலையும் ச்மசானத்தின் சமீபத்தையும் அணுகலாகாது. அணுகினால் கர்ப்பம் அழியும். கரண்டியால் அக்னியை எடுக்குமிடத்தில் சண்டையுண்டாகும். கோள் சொல்லுமிடத்தில் லக்ஷ்மி வஸிப்பதில்லை. கால் அலம்பாமல் சமையலறைக்குச்சென்ற பொழுது மூதேவி பின் தொடருகிறாள். தூபமில்லாத ப்ரஸவகிரஹத்தில் குழந்தைக்கு ஆபத்துண்டாகும். ஸ்நாநம் செய்யாமல் புஜிப்போருக்கு ரோகமுண்டாகும்.

கல்பத்தின் ஆதியில் சதுர்முகன் தன்னைப்போல் ஒரு தேவன் தோன்றவேண்டுமென்று மனதில் கருதினான். உடனே அவனது மடியில் மிக அழகிய ஓர் குழந்தைத் தோன்றி அழுதது. ஏன் அழுகிறாய் என்று பிரமன் கேட்க, நீர் விரும்பியபடி தோன்றியஎனக்கு பெயரில்லாவிடில் பெருமைஉண்டோ?

ஆதலின் எனக்கு தக்கதோர் நாமஞ்சூட்ட வேண்டுமென்றது. வாணிபதி, நீ ரோதனம் செய்தமையால் "ருத்ரன்" என்றே, அர்த்தம் பொருந்திய நாமத்தைச் சூட்டினேம் என்றார். மறு படியும் அக்குழந்தை எழுமுறை அழ, முன்போலவே பவன், சர்வன், ஈசானன், பசுபதி, பீமன், உக்ரன், மஹான் என்று எழு நாமகரணஞ் சூட்டினர். அன்றியும் பஞ்சபூதம், சந்திர சூர்யர், தீக்ஷிதன் என எட்டு ஆலயங்களைக் காட்டி எண் மூர்த்தியாகத் தோன்றிய இவர்களை எட்டு மனைவிகளுடன் இங்கே வஸிக்கும்படி பிரார்த்தித்தார்.

ஸ்வாயம்புவமநு.

தானே தோன்றியதால் ஸ்வயம்பூ என பிரம்மன் பெயர் பெற்றான். அவரது அருளால் தோன்றிய 'பிரயவ்ரதர்' என்பவரே ஸ்வாயம்புவ மன்வந்தரத்திற்குக் காரணமானவர். இவருக்கு ஆக்னீத்ரர், மேதாதிதி, வபுஷ்மான், ஜ்யோதிஷ்மான், த்யுதிமான், பவ்யன், ஸவனன், என எழு தநயர்கள் தோன்றினர். முறையே அவர்களுக்கு ஜம்பு, ப்லக்ஷ, சால்மலி, குச, க்ரௌஞ்ச, சாக, புஷ்கர என்ற எழுத்வீபங்களையும் பகுத்துக்கொடுத்தார். அங்கு பாரதவர்ஷம், கிம்புருஷ வர்ஷம் மேரு வர்ஷம், ரம்யக வர்ஷம், ஹரி வர்ஷம், ஹிரண்மயவர்ஷம், என்ற வர்ஷங்களைப் படைத்து அங்குள்ள மலை நதி அரண்யம் முதலியவைகளையும் பிரம்மா ஸ்ருஷ்டித்தார்.

ஸ்வாரோசிஷமநு

வருணை நதிக்கரையில் ஓர் அந்தணர் வஸித்து வந்தார். அவர் மிக சாந்தர்; தவத்திற் சிறந்தவர். ஒரு நாள் அவரில்லத்தை நாடி ஓர் அதிதி வந்தார். அவரைத் தக்கபடி அர்ச்சித்து ஆஸனத்தில் அமர்த்தினர். அதிதி பூஜையைப்பெற்ற விருந்தினர் கிருஹஸ்தனது தர்மத்தை வழுவாது அனுஷ்டிக்

கும் அவ்வந்தணோத்தமனை நோக்கி, ஆர்ய! அடியேனால் ஆகத் தகுந்த கார்யம் தங்களுக்கு ஏதேனுமுளதோ? என வினவி னார். பிரம்மன் இப்பூவாலயத்தைச் சுற்றி ஆங்காங்குள்ள விசேஷங்களைக்காண வேண்டுமென்பது எனது அவா. தாங் கள் தேசஸஞ்சாரம் செய்தவர்போல் காணப்படுகிறீர். இவ் விளமையில் எங்ஙனம் பலவிடங்களிற் சென்று திரும்ப முடி யும்? எந்த உபாயத்தினால் தாங்கள் இக்கார்யத்தைச் சாதித் தீர்களோ? இதை அடியேனுக்கு அருள் புரியவேண்டு மென்றார். தர்ம சிந்தைகொண்ட விருந்தினர், மந்திர மஹி மையால் யான் பூமியைச் சுற்றிவந்தேன். அம்மந்திரத்தை உமக்கு உபதேசிக்கிறேன். உனது உள்ளங்காலில் ஓர் அஞ் சனத்தைப் பூசுகிறேன். இவ்விரண்டினாலும் விரைவில் நீ உலகெலாம் சுற்றி உனது ஊருக்குத் திரும்புவாய் என்று கூறி அங்ஙனமே செய்தார்.

வருணா நதிக்கரையில் வஸிக்கும் பூஸுரன் பூலோகத் தைப்ரதக்ஷணம் செய்யக் கருதி மிகவிரைவாக ஹிமாலயம் சென்றான். ஆங்குள்ள அழகைக் கண்டு வியந்து இரண்டு மூன்று நாள் இங்கு தங்கி பின்னர் மற்ற இடங்களுக்குச் செல்லலாமென எண்ணினார். கந்தர்வர்களது கானமும், அப்ஸரஸ்ஸுகளின் அழகும் இவருள்ளத்தைக் கொள்ளை கொண்டது. ஆதலின் பனியின்மீது அவர் காலை வைக்க அங்குள்ள அஞ்ஜனம் கரைந்ததை அவர் கவனிக்கவில்லை. ஆங்கு வரூதினி எனும் அப்ஸரஸ் இவ்வந்தணோத்தமனது அழகைக்கண்டு மோஹித்தாள். தான் அவனருகிற்சென்று, தன்னை அவர் ஏற்கும்படி வேண்டுவது அழகல்ல என்று எண்ணி, அத்புதமான தனது அழகைக்கண்டு அவரே மோஹித்துத் தன்னை வேண்டும்படி செய்வதே உசிதமெனக் கருதினாள். உருண்டு திரண்டு ஒன்றாக உருவெடுத்து வந்த அழகேபோல் அவரெதிரில் அவள் தோன்றினாள். மாதரசே!

நீ யார்? யான் ஓர் அந்தணன். பூலோகத்தைச் சுற்றிவர யான் கிளம்பினேன். இங்கு எனது பாதத்திலுள்ள லித் தாஞ்சனம் பனியால் கரைந்தது. வீடு செல்ல வகையறி யாது விழிக்கிறேன். எனது நித்ய நைமித்திக கர்மங்கள் பாழாகின்றன. இன்று மாலைக்குள் இல்லமேகும் வகையைக் கூறுவாயாக என்றார். இதைக்கேட்டு வருதினி, ஸுந்தரா! நீர் இங்கு தங்கி மானிடப் பிறவிக்குக் கிட்டாத மாபெரும் சுகம் பெறுவாயாக. என்னை மணந்திடில் உமக்குக்கிட்டாத சுகம் வேறு ஏதேனுமுளதோ? என்றாள்.

பெண்மணி! நீ கூறுவது விந்தை! அந்தணனாகப் பிறந்த என்னுடல் இம்மைச் சுகத்தைப்பெறவோ தோன் றிற்று? இம்மையில் மிக க்லேசமனுபவித்து மறுமையில் பேரின்பம் பெறுவதற்கல்லவா பெறற்கரிய இவ்வுடலைப் பெற்றேன். எனது நித்ய நைமித்யக் கர்மங்கள் கொடுக்க இயலாத சுகத்தை நீ கொடுக்க முடியுமோ? ஆதலின் பரஸ்திரீ யான உன்னைக் கண்ணெடுத்துப் பாரேன்! பரோபகார சிந் தைகொண்டு யான் வீட்டை அடையும் வகை கூறுயோ? என்றார். இதைக்கேட்டு மஹர்ஷே! ஸ்வர்க்கத்திலும் கிடைக் கத்தகாத என்னைத்தானேவந்தவளென்று ஏற்கமறுக்கிறீரா? பெண்பாவம் பொல்லாது; உம்மையே நினைத்து மன்மததா பம் தாங்காது மரண மடையப் போகிறேன். ஒரு பெண்ணுயிரைக்காப்பதும் ஒருவரதுவிருப்பைப் பூர்த்திசெய் வதும் பெரும் தர்மமன்றோ? என்று பன்முறை அவள் அவ் வந்தணரை நிர்ப்பந்தம் செய்தாள். அப்புருஷோத்தமன் தன்னையும் அறியாது தன் மனம் அவளிடம் செல்லுமோ? என்று அஞ்சினர். கார்ஹபத்யமெனும் அக்னியை வேண்டி, என்னுள்ளத்தே இருந்து பரஸ்திரீகளிடமும் பரத்ரவ்யத்தினி டமும் என் மனம் ஆசையில்லாமற் செய்ய வேண்டுமென்று த்யானம் செய்தார். அக்னி பகவான் அவர் உள்ளத்தே

தோன்றி அவரை ஸூர்யமண்டலம்போல் பிரகாசமுள்ளவராகச் செய்தார். ஆதலின் வரூதினி அவர் அருகே வரமுடியவில்லை. அவர் அதிவேகமாக தன் இருப்பிடம் வந்து விதிப்படி அக்னி, தேவ, பித்ரு, ரிஷி பூஜைகளைத் தவறாது செய்து வந்தார்.

அக்கட்டழகியோ, அவரை நினைந்து நினைந்து உருகினாள். சுருங்கச் சொல்லின் அவளி[illegible] அவள் [illegible] அவளுக்கு பெரும் சுமையாகத் தோன்றியது. எவ்வகையில் அவரை அடையலாமென சிந்தை கொண்டு ஏகாந்தத்திலமர்ந்து இருந்தாள். ஆங்கு கலியெனும் கந்தர்வன் இவளது ரூபலாவண்யத்தைக் கண்டு மயங்கி தன்னை மணக்கும்படி அவளைப் பலமுறை வேண்டினான். அவள் தன் மனதிற்கேற்ற மணாளனை முன்னமே வரித்தபடியால் வேறெவரையும் கண்ணெடுத்தும் காணேனென்றாள். அந்த கந்தர்வன் இவளிடம் அடங்காக் காமங்கொண்டு அவளை அடைய யாது வழி? என யோசித்தான். முடிவில் அவ்வந்தணன் உருவைத்தாங்கி அவள் எதிரே தோன்றினான். அவள் எனது பாக்யமேவந்ததென எழுந்து ஓடி அவரடி பணிந்து ஐயனே!, உம்மை நினைத்து உருகி என் உடல்படும் துன்பத்தை நீர் அறியீரா ? இப்பொழுதேனும் மனமுவந்து மனைவியாக என்னை ஏற்பீரா ? என்று பிரார்த்தித்தாள். அதைக்கேட்ட கபடமுனி பெண்ணே! எனது கர்மத்திற்கு ஹானிவருமோ என்று உன்னை வெறுத்தேன். யான் சொன்னபடி நீ நடப்பதானால் இப்போதே உன் விருப்பம் பூர்த்தியாகும் என்றார். நாத! எவ்வகையிலேனும் உம்மை அடைவதே எனது எண்ணம்! நீர் கூறும் எத்தகைய ஆணையும் தலைமேற்தாங்கித் துப்பரிவுடன் செய்வேன். இது முற்றிலும் ஸத்யம் என்றாள்.

கபட ரிஷி, ப்ரியே! இது உண்மையாயின் சிற்றின்பத்தில் ஈடுபடும் என்னை நீ கண்ணெடுத்துக் காணலாகாது

என்றார். அதற்கிசைந்த வருதினி அவரைத் தழுவி தனது மனோரதம் பூர்த்தியானதென மகிழ்ந்தாள். இவ்வனம் இருவரும் கூடிக்குலவ அவளுக்கோர் கரு தோன்றியது. அவளது நினைவு அந்தணனிடமே சென்றதாலும், விதை கந்தர்வனது ஆதலாலும் அக் கரு மிக ப்ரகாசமாக விளங்கியது. இதைக்கண்டு கந்தர்வன் இனி இங்கிருந்தால் ஏதேனும்தீங்கு நேருமோ என்று தனது வஞ்சனை வெளியாவதற்குள் அவளிடம் விடைபெற்று வெளியிற் சென்றான். தேஜோராசி போல் விளங்கும் அக்கர்ப்பம் பத்துமாதமும் தாயின் குக்ஷியில் வளர்ந்து வெளிவந்ததும் அருகிலுள்ளோர் அதன் உருவுக்கேற்றபடி ஸ்வாரோசிஸ் என்று பெயரிட்டார்கள். இக்குழந்தை அன்புடன் அன்னையால் வளர்க்கப்பட்டு ஸகல கலைகளிலும் தேர்ச்சி பெற்றான்.

இவன் ஒருஸமயம் மந்தா மலைச்சாரலில் "அபயம் அபயமென" அலரும் ஓர் அபலையின் குரலைக்கேட்டு அங்கு ஓடினான். அஞ்சேல்! அஞ்சேல்! என அரசன் அவளருகே செல்ல, இவனைக்கண்டு வணங்கி தாங்கள் யாரென விசாரித்து அவள் அறிந்தாள். அவளை நோக்கி, நீ யார்? உன்னைப் பயமுறுத்தியவன் யாவன்? என ஸ்வாரோசிஸ் வினவ, இந்தீவா வித்யாதரன் என்பவளது புத்ரி யான். மனோரமை யென என்னை அழைப்பார்கள். விபாவரீ கலாவதி எனும் இரு தோழிகளுடன் யான் கைலாஸம் சென்றேன். இடையே தவத்தால் இளைத்து மெலிந்த சரீரமுள்ள ஓர் முனிவரைக் கண்டேன். அழகிற் சிறந்த யான் அந்தமில்லா அந்தணரைக் கண்டு எள்ளி நகைத்தேன். இதைக்கண்டு கோபங்கொண்ட முனிவர், பெண்ணே! உன்னை ஓர் பயங்கர உருவமுள்ள ராக்ஷஸன் ஹிம்ஸிக்கக் கடவன் என்று சபித்தார். அவரைப் பார்த்து எனது ஸகிகள், முனிவரே! பொறுமையன்றோ ரிஷிகளது பூஷணம். கோபத்திற்கிடமளித்தோர் தபஸ்வியாகத்

தக்கவரோ? என்று உரைத்தனர். இவர்களிடமும் அடங்காக் கோபங்கொண்ட அத்தபோதனர், நீங்கள் குஷ்டரோகத்திற் ளாவீர்கள் என இருவரையும் சபித்தார். அவ்விருஸகிகளும் நோய்வாய்ப்பட்டுத்தவிக்க யானே ராக்ஷஸனது வாயில் அகப் பட்டுச் சொல்லொணுத் துன்பமனுபவிக்கிறேன். நானறிந்த அஸ்திரசஸ்திர மந்திரங்களை உமக்கு ஓதுகிறேன். அவனை வென்று அடியாளை ரக்ஷியும் என்று மநோரமை வேண்டினுள். இதனிடையில் வானையளாவும் பேரிடிபோன்ற சப்தத்துடன் அவ்வரக்கனேடிவந்து அவளைப் பக்ஷிக்க ஆரம்பித்தான். அரசன் கூரிய அம்பை அவன்மேல் விட, அவன் ராக்ஷஸ உடலைவிட்டு திவ்ய சரீரம்பெற்று இவரைப் பணிந்துப்போற் றினுன். ஐயனே! உமது அருளால் என் சாபமகன்றது என்ருன். உமக்கு எவரிடமிருந்து எதற்காக சாபம் கிடைத்த தென்று அரசர் வினவ, இந்தீவராக்ஷன் என்ற கந்தர்வன் யான். இப்பெண் எனது மகளே ஆவள். ப்ரம்மமித்ரனென்ற மஹர்ஷி ஆயுர்வேதத்தின் கரை கண்டவர். அவரை அணுகி எனக்கு அவ்வித்யையைக் கற்பிக்கும்படி வேண்டினேன். அவர் முடியாதென மறுத்தார். மற்ற சிஷ்யர்களுக்கு அவர் அவ்வேதத்தைக் கற்பிக்கும்போது யான் மறைந்திருந்து ஆறு மாத காலத்திற்குள் அகில வித்யையையும் கற்றுணர்ந்தேன். அக்கல்வி பூர்த்தியானபொழுது அவரை யான் ஏமாற்றினே னென இறுமாந்து எள்ளி நகைத்தேன். இதைக்கண்டு கோபங்கொண்ட முனி ராக்ஷஸனுவாய் என என்னைச் சபித் தார்.

அவரது திருவடியிற் பணிந்து அடியேனது குற்றத்தை மன்னித்தருள் புரியவேண்டினேன். இயற்கையில் சாந்தமான அத்தபோதனர் எனது சொல் வீணுகாது! சிறிதுகால மரக் கனுயிருந்து உனது மகளையே புஜிக்க ஆரம்பிப்பாய். அச்சம யம் ஓர் அரசன் வந்து உன்னை அம்பால் அடிப்பான். பின்

னர் உனது நிஜரூபத்தைப் பெறுவாய் என்று அருள் புரிந்தார். உனது பேருதவியால் என் மகளும் ஆபத்திலிருந்து விடுபட்டாள். நானும் சாபமகன்று சுத்தனானேன். ஆதலால் பரோபகாரியான உனக்கு இப் பெண்ணையும் ஆயுர்வேதத்தையும் அளிப்பது என் கடமை யாகும் என்று அங்ஙனமே அவைகளை அளித்தான். ஸ்வாரோசிஸ் மனைவியுடன் அழகிய அரண்யங்களில் ஸஞ்சரித்து விபாவரீ என்ற இவளது தோழியைக் கண்டார். தன் மனைவிக்குப் பரிந்து பேசி மஹர்ஷியால் சபிக்கப்பட்டு குஷ்டநோயால் அவள் தவிப்பதைப் பார்த்து அவர் வருந்தினார். தான் பெற்ற ஆயுர்வேத மஹிமையால் அந்நோயை அகற்றி முன்போலவே அவள் அழகிய சரீரம் பெறும்படி செய்தார். விபாவரி அந்நோயை அகற்றித் தனக்குப் பேருதவி செய்த தார்மிகனுக்குத் தன்னுடலையே தானம் செய்தாள். மந்தார வித்யாதரனது பெண்ணான என்னையும் ஏற்று என் தோழியுடன் கூடியிருக்கும்படி அருள் புரியவேண்டு மென்றாள். அங்ஙனமே ஸ்வாரோசிஸ் அவளையும் ஏற்று இரு மனைவிகளுடன் பூஸஞ்சாரம் செய்தார். தற்செயலாக மனைவியின் மற்றொரு தோழியான கலாவதியைக் கண்டார். அவளும் மஹர்ஷியின் சாபத்தினால் பெரு வ்யாதிக்குப்பாத்ரமாகி தவித்தாளன்றோ? அவளது நோயையும் இவர் அகற்றினார். கலாவதி தன்னையும் மணக்கும்படி வேண்ட, நீ யார்? என்று வினவினார்.

பாரன் என்ற பிரம்மசாரி புஞ்ஜிகஸ்தலை என்ற அப்ஸரஸ்ஸைக் கண்டு ஆசைகொண்டார். இருவரும் சேர்ந்து என்னைப் பெற்றனர். என்னை அரண்யத்தில்விட்டு அன்னை செல்ல, சந்திரகலையை ஊட்டி தந்தை என்னை வளர்த்தார். ஆதலின் என்னைக் கலாவதி என்பார்கள். எனது ஸௌந்தர்யத்தைக் கண்டு வியக்காதவரில்லை. ஓர் அரக்கன் என் தந்தையருகே வந்து தனக்கு என்னைத் தரும்படி

வேண்டினான். அவர் முடியாதென மறுக்கவே கோபம் கொண்ட கொடிய ராக்ஷஸன், எவருமறியாது இரவில் என் தந்தையைக் கொன்று சென்றான். தந்தையைப் பிரிந்த யான் தரணியில் வஸிக்க விருப்பமில்லாமல் என்னுயிரை மாய்த்துக்கொள்ள ஆரம்பித்தேன். அத்தருணம் அம்பிகை என்னைத்தடுத்து ஸ்வாரோசிஸ் உன்னை மணப்பான் என்று கூறி மறைந்தாள். ஆதலின் ஏனையோருடன் என்னையும் ஏற்றருள் வீராக என்றுரைத்தாள்.

அப்படியே அவர் இவளையும் ஏற்று மூவருடன் ஆங்காங்கு சென்று ரமித்துக்கொண்டிருந்தார். ஒரு ஸமயம் தடாகத்தில் இவர்கள் ஜலக்ரீடை செய்யும்போது ஆங்குள்ள ஓர் ஹம்ஸீ, ஹம்ஸனைப் பார்த்து, நாத! ஒரு புருஷன் ஒரே மனைவியை மணந்து ரமிப்பதன்றோ நியாயம்? இவ்வரசனைப் போல் பல மனைவிகளில்லாமல் நீர் என் ஒருவளிடமே அன்பு பூண்டதால் நாம் இருவருமே பாக்யசாலி என்று உரைத்தது. இதைக்கேட்ட ஸ்வாரோசிஸ் தலைகுனிந்து வெட்கத்துடன் வேரிடம் சென்றான். ஆங்கு ஓர் மான், நான் வெட்கமற்ற ஸ்வாரோசிஸ் அல்ல. பல மனைவிகளை யான் ஏற்கமாட்டேன். ஒரே மனைவியான உன்னைவிட வேறெதுவும் எனக்கு விருப்பமானதல்ல என்று தன் மனைவியுடன் கூறிற்று. ஸகல ப்ராணிகளது பேச்சையுமறிந்த ஸ்வாரோசிஸ்ஸுக்கு இம்மானினது சொல் மனதை யறுத்தது என்றாலும் தர்ம விரோதமின்றி காமஸுகத்தை அனுபவித்து வந்தான்.

சிறிதுகாலம் சென்றபின் மனோரமை விஜயனையும், விபாபரீ மேருநந்தனையும், கலாவதி பிரபாவனையும் பெற்றெடுத்தாள். தந்தை மூன்று மைந்தர்களுக்கும் தனித்தனியாக மூன்று திக்கிலும் மூன்று ராஜ்யத்தை அளித்து தான் ஒரு ஸமயம் வேட்டையாட வனம் சென்றான். அங்கு ஓர் பன்றியை அடிக்கும்போது மான் ஒன்று விரைவாக ஓடிவந்து

அரசே! துன்பக்கடலில் அமிழ்ந்த என்னை முதலில் கொல்லும் என்றது. அரசன் மானைப் பார்த்து உனக்கு என்ன துன்பம்? என்று வினவ! எனது புருஷன் என்னைக் கண்ணெடுத்தும்காணுது மற்ற மனைவிகளோடு கூடிக்குலவுகிறான். குலமகளுக்கு இதைவிடத் துன்பம் வேறுளதோ? என்றது.

அரசன் உன் கணவன் யாவன்? என்று கேட்க, நீயே! என்று மானுரைக்க, விந்தைகொண்ட வேந்தன் மிருகத்தை மனிதன் மணப்பதுண்டா? என்ருன். மான், நீர் என்னை ஆலிங்கனம் செய்து பின் உண்மையை அறிவீர் என்றது. அரசன் அங்ஙனமே செய்ய, மானுடல் மறைந்து மாதாசி தோன்றினுள். அவள் ஐயனே யான் வனதேவதை. உம்மை மணந்து ஓர் புதல்வனைப் பெறவேண்டுமென்பது தேவர்களது விருப்பம் என்று கூறினுள். அங்ஙனமே அரசன் அவளை ஏற்று த்யுதிமான் எனும் புதல்வனைப் பெற்ருன். இங்ஙனம் ஸ்வாரோசிஸ் மனைவிகளுடனும் மக்களுடனும் கூடிக்குலவ ஓர் ஹம்ஸி கணவனைப் பார்த்து, ஸ்வாரோசிஷனைப்போல் மக்களைப் பெற்றும் போகத்தில் உமக்கு ஏன் இன்னும் ஆசை அகலவில்லை? என்றது. இதைக்கேட்டு வெட்கம்கொண்ட அரசன் தனயனிடம் ராஜ்யத்தை ஒப்படைத்து தான் தவம் புரிய வனம் சென்ருன். இவர்களது காலமே ஸ்வாரோசிஷ மன்வந்தரம் எனப்படும்.

ஔத்தம மந்வந்தரம்.

உத்தானபாதனது புதல்வன் உத்தமன் என்பவன். அவன் நற்குண நற்செய்கைகள் உள்ளவன். ஆயினும் பஹுளை என்னும் மனைவியுடன் பேரவா கொண்டவன். அவளில்லாது எக்காரியத்தையும் செய்யத் துணியான். இவனது நடத்தையால் அவள் இவனிடம் அதிக கௌரவம் வைக்காமல் அலக்ஷியம் செய்து வந்தாள். ஒரு ஸமயம் பலர் கூடியுள்ள

ஸபையில் அரசன் அன்புடன் மனைவியை அழைத்து மதுவை யளித்து அருந்து என்றான். அவள் அலக்ஷியமாக அதை மறுத்துவிட்டாள். கோபம்கொண்ட அரசன் அவளை மனித ஸஞ்சாரமில்லாத ஆரண்யத்தில் கொண்டுவிட்டு விட்டான். பலகாலம் சென்றபின் அவ்வரசனின் அரண்மனையை யடுத்து, அந்தணனொருவன், அரசே! என் மனைவியை இரவில் எவரோ எடுத்துச் சென்றனர்.. அவள் இருப்பிடத்தைத் தேடி என்னிடமளிப்பது உமது கடமையாகும் என்றான். இதைக் கேட்ட பூபதி, பிராம்மண! உமது மனைவியை யான் கண்டறியேன். அவள் எத்தகையவளெனக் கூறினால் அவளைத்தேடிப் பிடிப்பது ஸுலபமாகும் என்றான்.

அந்தணன் அரசனைப் பார்த்து, அவள் கடூரமான கண்ணுடையவள். ஒருகை நீளமாகவும் ஒருகை குட்டையாகவுமிருக்கும். முகம் சிறுத்தும் உடல் பெருத்துமிருப்பாள் என்றார். ஸ்வாமிந்! ஸுந்தரவடிவமான நீர் அந்தமில்லா அம்மாதைவிட்டு வேறொரு ஸுந்தரியை மணக்கலாகாதோ என்று வேந்தன் வினவினன். மஹாராஜ! போகத்தை மோக்ஷமாகக் கருதியவருக்கு உமது சொல் ருசியாகும். தர்மத்தில் நாட்டமுள்ள தபோதனர் இங்ஙனம் செய்யலாகுமோ? குணமற்றவளாயினும் அன்னியரோடு சேர நேர்ந்தால் குலமழியுமன்றோ? வர்ணஸங்கரம் உண்டாகுமல்லவா? ஆதலால் வேறொன்றும் கூறாது என் மனைவியைத் தேடித்தாரும் என்றான்.

அரசன் அங்ஙனமே ரதத்தின் மீதேறி குவலயமெலாம் சுற்றி அத்தகைய மாதைக்காணாது ஓர் தபோவனம் சென்றான். ஆங்குள்ள முனிவரது சிஷ்யன் அரசனுக்கு நல்வரவு கூறி, ஆசார்யனிடம் அழைத்துச் சென்று அர்க்ய பாத்யங்களைக் கொண்டுவந்து; குரோ! இவன் இதற்கு ஏற்றவனாயின் அர்க்யத்தை அளிக்கிறேன் என்றான். ஆசார்யன் சற்று

ஆலோசித்துப் பார்த்து அர்க்யமளிக்காது அரசனைக் குசலம் விசாரித்தார். தனக்களிக்க ஆரம்பித்த அர்க்யத்தைக் கொடாமல் நிறுத்திய காரணம் யாதென வேந்தன் வினவ, முக்காலமுணர்ந்த முனிவர், நீ பத்னியை த்யாகம் செய்தவனாதலின் அர்க்யம் கொடாது நிறுத்தினேன் என்றார். அரசன், அந்தணனது மனைவி எங்கு சென்றனள் என ஞானதிருஷ்டியால் கண்டு கூறும்படி வேண்டினான். அத்ரி எனும் ராக்ஷஸனது புதல்வனான பலாகன் என்ற அஸுரன் அவளை மற்றோர் வனத்தில் வைத்திருக்கிறானென்று முனிவர் கூற, அவ்வரசன் அங்கு சென்று அந்தணஸ்திரீயைக் கண்டு அவள்தான், தான் தேடியவளென அறிந்தான். அவ்வரக்கன் எங்கிருக்கிறான் என அவள் மூலமாக அறிந்து அவனருகே சென்றான். அவ்வஸுரனும் அரசனை வரவேற்று அர்க்யபாத்யமளித்ததைக் கண்டு வியந்து வேந்தன், நீ எக்காரணம்பற்றி பூஸுரனது மனைவியைக் கொண்டுவந்தாய்? என்று வினவினான். அவன், அரசே! அப்ஸரஸ்ஸுகளைவிட அதிரூபலாவண்ய மமைந்த எனது மனைவிகளிருக்க அந்தமிலா அந்தணமாதை போகத்திற்காகக் கொண்டு வந்தேனில்லை. நான் நரமாம்ஸம் புஜிப்பவனுமல்லன்.

ஆனால் கல்வியிற் சிறந்த அவ்வந்தணோத்தமன் செல்லும் யாகங்களில் குற்றமற அவன் வேள்வியை நடத்தி வைப்பதால் எனக்கு மட்டுமேயல்லாது எனது இனத்தைச்சார்ந்த அஸுரர்களுக்கே அங்கு அம்சமில்லாமல் போகிறது. ஆதலால் மனைவியில்லாமல் இவர் செய்யும் தர்மம் பூர்ணங்கம் பெற்றதாகாதென அறிந்து அப்படி செய்ய அவளைத் தூக்கி வந்தேன். பத்னியில்லா இவர் செய்யும் தர்மமும், இவருக்களிக்கும் தானமும் பயன்படாதாதலால் அங்கு சென்று அஸுரர்கள் ஆனந்திக்கின்றனர் என்றான்.

அன்றியும், அரசனே! உமது விருப்பப்படி இவளை

யான் அவள் பதியினிடம் அனுப்பக்கூடுமானாலும் எனக்கேற்ற ஆகாரமளிப்பது தங்கள் கடமையன்றோ என்றான். அதைக்கேட்ட அரசன் இவளிடமுள்ள துராசாரத்தை எற்று இவளை அவர் புருஷனிடம் கொண்டுவிடு என்றார். அங்ஙனமே அரக்கன் செய்ய, அம்மாது துராசாரத்தைவிட்டதால் நற்புத்திகொண்டு நான் முற்பிறவியில் எப்புருஷனை மனைவியுடன் சேராமல் செய்தேனோ? அதன் பயனை இப்பொழுது யான் அனுபவித்தேன் என்றாள். இவளைக் கண்டு அவள் புருஷன் பேரானந்தமடைந்து பேருதவிபுரிந்த பார்த்திபனைப் போற்றினான். அரசன் எந்த மஹரிஷியினது உபதேசத்தால் இப்பெண்மணியைப் புருஷனோடு சேர்த்தானோ? அம்முனிவராச்ரமம் சென்று அவரைப் பணிந்தான்.

அரசே! நீ வந்த கார்யத்தை யான் உணர்வேன். உமது பத்னி, கபோதனென்ற நாகராஜனால் பாதாளம் கொண்டு செல்லப்பட்டாள். அவனது மனைவியான மனோரமையும், பெண்ணான நாந்தையும் அவளது கற்பைக்காக்க ஏகாந்தமான இடத்தில் அவளை மறைத்துவைத்தனர். நாகன் அவளைத் தனக்கு அளிக்கும்படி பலமுறை வேண்டியும் நாந்தை பிடிவாதமாக அவளை அனுப்ப மறுத்தாள். ஆதலின் கோபம் கொண்ட தந்தை, பெண்ணை ஊமையாகும்படி சபித்தான் என்று மஹர்ஷி கூற, அரசன் அவரைப் பணிந்து மஹர்ஷே! முக்கரணங்களாலும்எவருக்கும் எவ்வகைத் தீங்கையும் செய்யாத எனக்கு மனைவி ப்ரதிகூலமாகத் தோன்றியதேன்?என்று வினவினர். மஹர்ஷி, ஜ்ஞானதிருஷ்டியால் இதை அறிந்து உனது விவாஹ காலத்தில் கிரஹங்கள் ஸரியாக இல்லாததால் இங்ஙனம் நேர்ந்ததெனக் கூறினார். இதைக் கேட்ட அரசன் தனது விதியை நொந்து தன் நகரமடைந்து இழந்த பத்னியைப் பெற்ற பூஸுரரைத் தர்சித்தான். அவ்வேதியனும் பேருபகாரம் புரிந்த மன்னனுக்கு ப்ரத்யுபகாரம் செய்வதே

சிறந்த தர்மமென்றெண்ணினன். அரசன் ப்ரதிகூலமான பத்னியை இழந்ததையும், அவள் இருப்பிடத்தையும் அறிந்து இவ்விருவரும் அனுகூலமாக வாழ யாதுவழியென வேதியர் சிந்தித்தார்.

இருவருக்கும் ப்ரீதி உண்டாகும்படியாக மைத்ரீஎனும் இஷ்டியை எழுமுறை செய்துவைத்து, ராஜந்! இனி உமது பத்னி அநுகூலமாயிருப்பள். ஆதலால் அவளை அழைத்து வாரும் என்றார். அரசன் தனது பழைய நண்பனான ராக்ஷஸனை நினைத்தான். அவ்வரக்கனும் அரசனடிபணிந்து அடியேனுக்கு யாது ஆணை? என வினவினன். பாதாளத்தில் நாக புதல்வியான நாந்தையினிடமுள்ள நமது மனைவியை அழைத்துவா! என அரசன் கூற அவனும் அரைக்ஷணத்தில் அங்ஙனமே செய்தான். ராஜபத்னி, இஷ்டி மஹிமையால் இஷ்டமுடன் கணவனைப் பணிந்து, தனது கற்பைக்காத்து தந்தையின் சாபத்திற்கு ஆளான நாந்தையினது சாபத்தை யகற்ற வழி தேடும்படி கணவனை வேண்டினள். இதைக்கேட்ட அந்த பிராமணோத்தமர் தன் மனைவியைத் தேடித்தந்த வேந்தனது மனைவியின் விருப்பிற்கிணங்கி ஸரஸ்வதியைக் குறித்து ஓர் இஷ்டிசெய்தார். கலைமகளின் அருளால் நாந்தை நாவு பெற்று மானிலம் வந்து மன்னன் மனைவியைப் போற்றினள். அரசனும், அவன் மனைவியும் நாக கன்னிகையைப் போற்றிப் பணிந்தார்கள். நாந்தை, வேந்தே! வேண்டிய வரத்தைப் பெற்றுக்கொள்வாயாக! என்று கூற மன்னன், மன்வந்தர கர்த்தாவான மகனை வேண்டினன். அவள் அங்ஙனமே அருள் புரிந்து செல்ல சுபதினத்திலோர் ஆண் குழந்தை தோன்றியது. ஔத்தமன் என்ற அக்குழந்தையால் மூன்றாவது மன்வந்தரம் தோன்றிற்று.

தாமஸ மந்வந்தரம்.

ஸ்வாராஷ்ட்ரனென்ற அரசன் சூர்யனை உபாஸித்து நீண்ட ஆயுளைப் பெற்றான். அவனது மனைவிகள் அற்பாயுளாக இறப்பதால் நூற்றுக்கணக்கான மனைவிகளை மணந்தான். மனைவிகளும், மந்திரிகளும், மற்ற பரிவாரங்களும், தன்னெதிரில் இறக்க, மன்னன் மாளாத்துயர்கொண்டு வருந்தினான். விமர்த்தன் எனும் அரசன் இதே தக்க ஸமயமெனக் கருதி சோகமுள்ள இவனது ராஜ்யத்தைப் பிடுங்கிக் கொண்டான். ஸ்வாராஷ்ட்ரனும், முனிவேடம் கொண்டு தபோவனம் சென்றான். மனைவிகளையும், நாட்டையும் இழந்ததால் அவனுக்கு வைராக்யமுண்டாயிற்று. ஆதலின், பஞ்சாக்னி மத்தியிலும், ஜலத்திலும் நின்று தவம் புரிந்தான். ஒரு ஸமயம் பெருத்த மழையால் ப்ரவாஹம் பெருகி பார்த்திபனை அடித்துச் சென்றது. எங்கும் கரைதட்டாமல் பிரவாஹம் இழுத்துச் செல்ல இருண்ட ஓரிடத்தே நின்ற அரசனது கைக்கு ஓர் மான் வால் அகப்பட்டது. அதைப் பிடித்துக்கொண்டே இன்னும் இருண்ட இடத்தில் வெகுதூரம் சென்றான்.

சற்று ப்ரவாஹம் தணிய அரசன் மானின் பின்புறத்தைத்தொட மான் அரசனைப் பார்த்து, அரசே! மனிதரான நீர் மிருகமான என்னை இச்சிப்பது தர்மமோ ? அன்றியும் லோலனுன என் குழந்தை இடமளிக்காதிருக்க நீர் எங்ஙனமென்னைக் கூடுவது? என்றது. இதைக்கேட்டு வியந்த அரசன் பெண்ணைப்போல் பேசும் நீ யார் ? லோலன் என்பவன் தான் யார் ? என்று வினவ, அம்மான் கூறியது. நரேந்திர! நான் உமது உத்பலாவதி எனும் முதல் மனைவி. யான் எனது இளமையில் பெண்மானேடுக் கூடிக் குலவும் ஓர் ஆண்மானை அடித்தேன். கோபம்கொண்ட அது, பெண்

னே! ஸுதபன் என்று பெயருள்ள முனிவன் யான். பெண் மானினது பேரழகைக் கண்டு மானுருவம் தாங்கி இத்துடன் ரமிக்கிறேன். காரணமின்றி அடித்த உன்னைச் சபித்துவிடுவேன் என்று கூற, ஐயனே! அறியாமல் அடியாள் செய்த குற்றத்தைப் பெரியோர் பொருக்கவேண்டுமென்று ப்ரார்த்தித்தேன். அவரோ? என்னை நீ மணப்பதானால் உன்னைச் சபிக்காமல் விடுவேன் என்றார். அதைக் கேட்டு, மான் அல்லவே நான் தங்களை மணக்க, என்று கூறினேன். கோபங்கொண்ட அவர் மானாகவே நீ ஆவாய் என்று என்னைச் சபித்தார். மறுபடியும் அவரடிபணிந்து க்ஷமிக்கும்படி வேண்ட, உனது கணவனை நீ தொடும்பொழுது உனக்கு கர்ப்பமும், முன்பிறவியின் ஞானமும் முன்னுடலும் உண்டாகும். அன்றியும் அக்குழந்தை அவன் தந்தையின் சத்ருவை ஜயித்து ராஜ்யத்தை ஆள்வான் என ஆசிர்வதித்தார். உமது அருளால் அக்குழந்தையும் தோன்ற பூர்வஜன்ம ஞானமும், முன் சரீரமும் எனக்குக் கிடைத்ததென்று அவள் கூறினாள். இருட்டில் பிறந்த இக்குழந்தைக்கு மஹர்ஷிகள் தாமஸன் எனப் பெயர் வைத்தார்கள். தந்தையைப் போல் அவனும், ஸூர்யனை உபாஸித்து அவரிடமிருந்து அஸ்த்ரசஸ்திரங்களைப் பெற்றான். தக்க வயதுவந்தவுடன் தந்தையின் சத்ருவை வென்று தாணியை ஆண்டு வந்தான். அவனே தாமஸ மன்வந்தரத்திற்குக் காரணமானவன்.

ரைவத மந்வந்தரம்

ரிதவாக் என்ற மாமுனி புத்ரபாக்யமின்றி சிறிதுகாலம் வருந்தினார். ஈசனருளால் அவருக்கு ஓர் குழந்தை பிறந்தது. அந்த துக்க மகன்றாலும், மற்றோர் துக்கத்திற்கு அவர் ஆளானார். அவருடலில் பெரு வ்யாதிதோன்றி பெரும் துன்பத்தை விளைவித்தது. பட்டகாலிலே படும் என்றபடி அதோடு

நிற்காமல் அபூர்வமாகத் தோன்றிய புதல்வனும் அவருக்கு அதிக துக்கத்தை விளைவித்தான். அவரது ஆசாரத்திற்கும் அனுஷ்டானத்திற்கும் நேர்விரோதமாக அவர் புதல்வன் பிறர் மனைவியைக் கெடுப்பது முதலிய பற்பல பாபச் செயல்களைச் செய்து வந்தான். நோய்படுத்தும் துன்பத்தைவிட புதல்வனாலுண்டாகும் துன்பம் பொறுக்கமுடியாமலிருந்தது. பொல்லாப்பிள்ளையைவிட இல்லாததே மேலென எண்ணினார். தற்செயலாக அங்கு வந்த கர்காசார்யரை அர்ச்சித்து எனக்கு இத்தகைய புதல்வன் தோன்றக் காரணம் யாதென வினவினார். கர்க்கர் இது பெற்றவர் குற்றமல்ல, மற்றவர் குற்றமுமல்ல. இக்குழந்தை ஜனிக்கும்போது ரேவதியின் நான்காம் பாதமாதலின் இத்தகைய துராசாரமுள்ளவனாக இவன் இருக்கிறான் என்றார். இதைக்கேட்ட ரிதவாக் அருமையாய்ப் பெற்ற பிள்ளையை நாசம்செய்த நீ, கீழே விழக்கடவாய் என ரேவதியைச் சபித்தார். அவள் கீழேவிழும்போது அவளது ஒளியிலிருந்து ஓரழகிய கன்னிகைத் தோன்றினாள். ப்ரமுசி என்ற முனிவர் அக்குழவியை எடுத்து ரேவதி என்று நாமம் சூட்டி வளர்த்து வந்தார். அவளது யௌவனபிராயத்தில் அவள் அழகைக் கண்டு முனிவர் அவளுக்கேற்ற பதியைத் தேட அவனியெலாம் அலைந்து திரிந்தார். எங்கும் இவளுக்கு ஏற்ற பதி கிடைக்காததால் அக்னிசாலைக்குச் சென்று அவரை வணங்கி ரேவதிக்கு ஏற்ற பதி யார்? என்று வினவினார்.

க்ரமசீலனுக்குக் காளிந்தியினிடம் உதித்த துர்க்கமன் என்பான் உன் கன்னிகையின் பதி ஆவான் என்று அக்னி கூறினார். இதனிடையில் துர்க்கமஹாராஜன் ப்ரமுசியின் ஆச்ரமம் வந்து முனிவரைக் காணாது ரேவதியைப் பார்த்து, ப்ரியே! முனிவரெங்கே? என்றான். இதைக் கேட்டுக் கொண்டே வந்த முனிவர் அரசனை அர்ச்சித்து, உனது

ராஜ்யமும் உன் மனைவியும் குசலமா ? என்று விசாரித்தார். எனது பல மனைவிகளில் எவளைத் தாங்கள் விசாரிக்கிறீர் ? என்முன் அரசன். எவளை நீர் சற்று முன் பிரியே! என அழைத்தீரோ ? அம்மனைவியையே வினவினேன் என்றார் ப்ரமுசி.

உடனே துர்க்கமன், மஹர்ஷே! மனதில் ஒன்றும் எண்ணாது ப்ரியே! என்றது குற்றமாமோ? என்றான். அக்னி பகவானது ஆணையைக்கூறி அவளுக்கு நீயே பதி என விதிப்படி விவாஹத்தைச் செய்து வைக்க ரிஷி ஆரம்பித்தார். ரேவதியோ தனக்கு ரேவதீ நக்ஷத்திரத்திலேயே விவாஹம் செய்யவேண்டுமென பிதாவை ப்ரார்த்தித்தாள். ப்ரமுசி, பெண்ணே! ரிதவாக்கின் சாபத்தினால் கீழே தள்ளப்பட்ட அந்நக்ஷத்திரம் சிலாக்யமான தல்ல என்றார். ரேவதி, உமது தபோமஹிமையால் என் தாயான அவள் என் தன்னிலையைப் பெறலாகா தென்றாள். அங்ஙனமே ப்ரமுசி தன் தவ வலிமையால் ரேவதியை முன்போல் அவள் இருப்பிடத்தில் அமைக்க பிறகு இருவருக்கும் ரேவதியிலேயே மணம் முடிந்தது. ரேவதியும் துர்க்கமனும் முனிவரைப்பணியும்போது தம்பதிகளை அவர் ஆசீர்வதித்து உங்களுக்கு யாது வரம் வேண்டு மென்றார். மன்வந்தர கர்த்தாவான புதல்வன் வேண்டுமென்று அவர்கள் பிரார்த்திக்க, அங்ஙனமே, ரேவதியின் புதல்வனான ரைவதனைக்கொண்டு ரைவத மந்வந்தரம் உண்டாயிற்று.

சாக்ஷுஷ மந்வந்தரம்

அநமித்ரனென்ற அரசனது மனைவி பத்ரா என்பவள். இவள் தனது குழந்தையை மடியில் வைத்து லாலனை செய்யும்போது பூர்வஜன்ம விருத்தாந்தத்தை அறிந்த அக்குழவி, கலுக்கென சிரித்தது. கோபம்கொண்ட அன்னை என்னைக் கண்டு நகைக்கும் காரணம் என்ன ? என்று வினவினாள். அக்

குழவி அன்னையே! பிறந்து ஏழு எட்டு நாட்களாகவில்லை. என்னிடம் அபிமானங்கொண்டு அன்புடன் நீ என்னைத் தாலாட்டுகிறாய்! அருகில் மறைந்து நிற்கும் மார்ஜாரி, ஜாத ஹாரிணி என்ற இரு பூதங்கள் என்னைக்கொண்டு செல்லக் காத்திருக்கின்றன. அதை யறியாத நீ லாலனை செய்கிறாயே! என்று எண்ணி நகைத்தேன் என்றது. இதைக்கேட்டு ஒன் றும் தோன்றாத தாய் ஸூதிகா க்ருஹத்தைவிட்டுச் சென் றாள். ஜாதஹாரிணி அக்குழந்தையைத் தூக்கி விக்ராந்தன் எனும் அரசனுடைய அந்தப்புரத்தில் விட்டு ஆங்குள்ள ஹை மினியின் குழந்தையை ஓர் அந்தணன் வீட்டில் கொண்டு விட்டு, ஆங்குள்ள குழந்தையைக் கொன்று தின்றது. விக்ரா ந்தன் என்ற வேந்தன் தனது மைந்தனுக்கு ஆனந்தன் எனப் பெயரிட்டான். குழந்தை வளர்ந்து வயது வந்தவுடன் உபந யநமும் செய்துவைத்தான். அச்சமயத்தில் குரு, ஆனந்தனை, அவன் தாயை நமஸ்கரித்துவரும்படி சொன்னார். ஆனந்தனோ குரோ! யான், பெற்ற தாயைப் பணிவதா? வளர்த்த தாயை வணங்குவதா? என்று வினவ, குரு விந்தைகொண்டு விஷ யத்தைக் கூற் என்றார். அநமித்ரனுக்கு பத்ரையினிடம் தோன்றிய என்னை ஜாதஹாரிணி இங்கு கொண்டுவிட்டு இங்கு உண்டான குழந்தையை போதனெனும் பிராமணன் வீட்டில் வைத்து அவர் குழந்தையைத் தின்று சென்றது. இவ்வீட்டுக் குழந்தை போதனது மனைவியால் வளர்க்கப் பட்டு பிராமணருக்குரிய ஸமஸ்காரத்தைப்பெற்றிருக்கிறான். ஆதலின் அவனை அழைத்து வைத்துக்கொள்ளுங்கள். நான் தவம் செய்யச் செல்கிறேன் என்றான்.

அங்ஙனமே விக்ராந்த ராஜன், விசாலா என்ற கிராமத் திலுள்ள போதனெனும் பூசுரன் வீட்டிலிருந்து சைத்ர னெனும் தன் குழந்தையை அழைத்து வந்து விதிப்படி யௌவராஜ்ய பட்டாபிஷேகம் செய்தான். புதல்வனை யிழந்த

போதருக்குத் தக்கபடி பூஜை செய்து விக்ராந்தன் தனது அரண்மனையில் அவளை வைத்துப் போஷித்து வந்தான். ஆநந்தன், ப்ரஹ்மாநந்தத்தைப் பெற தபோவனம் சென்று மனதை அடக்கி ஏகாந்தமாக வீற்றிருந்து பல்லாண்டு தவம்புரிந்தான். சதுர்முகப் ப்ரம்மன் அவன் எதிரில் தோன்றி யாது வரம் வேண்டுமென்றார். மாயையைக்கடந்து பேரானந்தம் பெறுவதே எனது நோக்கமென்று ஆனந்தன் கூற,ப்ரஹ்மா கிருதயுகத்தில் நீ முத்திபெறுவாய். ப்ரவிர்த்தி மார்க்கத்தில் புகுந்து புதல்வர்களைப் பெற்று ஓர் மந்வந்தரத்திற்குக் காரணமாய் இருப்பாய். ஞானசக்ஷுஸ்ஸைப்பெற்று தவத்திலிருந்து திரும்பினமையால் சாக்ஷுஷன் என உனது பெயர் விளங்கும் என்று கூறி மறைந்தார். அங்ஙனமே சாக்ஷுஷன் உக்ரராஜனது ஸுதையான விதர்ப்பையை மணந்து பல புதல்வர்களைப் பெற்று சாக்ஷுஷ மந்வந்தரத்திற்குக் காரணமானான்.

வைவஸ்வத மந்வந்தரம்

உலகிற்கு ஒளியை அளிக்கும் ஸூர்யன் விச்வகர்மனுடைய புதல்வியான ஸம்ஜ்ஞையை மணந்து மனு எனும் ஒரு குழந்தையைப் பெற்றான். இவரே இந்த வைவஸ்வதமந்வந்தரத்திற்குக் காரணமானவர். ஸவிதா, தன் பத்னியான ஸம்ஜ்ஞையைப் பார்த்து நான் உன்னை ஆவலோடு நோக்கும்போது நீ கண்ணை மூடிக்கொள்வதால் (நேத்ர ஸம்யமம் செய்வதால்) மக்களை ஸம்யமனம் செய்யும் யமனைப் புதல்வனாகப் பெறுவாய் என்று சபித்தார். இரண்டாம் முறையும் கண்ணைச் சஞ்சலமாக்கி என்னைப் பார்ப்பதால் ஓடும் நதியைப் பெண்ணாகப் பெறுவாய் என்று சாபமளிக்க, அவளுக்கு யமனும் யமுனையும் பிறந்தனர். ஸம்ஜ்ஞாதேவி ஸூர்யனது தாபத்தைத்தாளாது தனது நிழலை அழைத்துப் பெண்

ணுக்கி, நீ இங்கு என்னைப்போல் இரு என்றாள். என்னை ஒருவர் கோபிக்கும்போதோ சாபமளிக்கும்பொழுதோ உண்மையைச் சொல்லிவிடுவேன் என்று கூறி சாயாதேவி ஸம்ஜ்ஞையைப்போல் ஸூர்யனிடம் வாழ்ந்து வந்தாள்.

ஸம்ஜ்ஞாதேவி தனது தந்தை வீடு செல்ல அவர், எத்தகையவனாலும் பதியே ஸதிக்குத் தைவமன்றோ? அவனை விட்டு அரைக்ஷணமேனும் நீ பிறிந்திருப்பது தர்மமல்ல! என்று கடிந்து பேசினார். இதைக்கேட்ட ஸம்ஜ்ஞா தேவி பெண் குதிரை யுருவந்தாங்கி 'உத்தரகுரு' என்ற தேசஞ் சென்று தன் கணவனது தாபங்குறைய தவம் புரிந்தாள். இதனிடையில் சாயா தேவி ஒரு புதல்வனையும் ஒரு புதல்வியையும் பெற்றாள். தனது மக்களோடு ஸம்ஜ்ஞையின் குழந்தைகளையும் தாயைப்போல் போஷித்து வந்தாள். என்றாலும் தன்னுடையதென்ற மமதை அவளை விட்டகலாததால் தம் மக்களை ஊட்டிவளர்த்ததுபோல், மூத்தவள் மக்களைப் பாராட்டாது பக்ஷபாதஞ் செய்தாள். முதல் புதல்வனான 'மனு' இதைப் பொருட்படுத்தவில்லை. இளையோனான யமன் இதைக் கண்டு பொறாது தாயோ நீ!என் தாயாயின் இங்ஙனம் பக்ஷபாதம் செய்வாயோ! என்று கூறி கோபங்கொண்டு அவளை உதைக்கக் காலைத் தூக்கினான். இதைக் கண்டு கோபங் கொண்ட சாயை பேயாயினுந் தாயன்றோ! தாயைக் காலாலுதைக்குந் தநயனுண்டோ! நீ நீட்டிய கால் நிலத்தில் வைக்க முடியாது அழுகிவிழும்! என்று சபித்தாள். இச் சண்டையை யறிந்த ஸூர்யன் சாயையை நோக்கி, நீ யார்? உண்மையைக்கூற்! இல்லையேல் உன்னைச் சபித்துச் சாம்பராக்குவேன்' என்றார். பயங்கொண்ட சாயை நடந்தவற்றை விரிவாகக் கூறினாள்.

விவஸ்வான் விச்வகர்மனது வீடு சென்று, அவனது நல்லெண்ணத்தைக் கண்டு மகிழ்ந்து தனது உக்ரகிரணங்

களைச் சாணைபிடிக்க ஸம்மதித்தான். இவனது உதாரகுணத்தைக்கண்டு தேவர்கள் போற்றினர். த்வஷ்டாவுமிவரைச் சாணைப்பிடிக்க, இவரிடமிருந்து சிந்திய கிரணங்களைக் கொண்டு சிவனது சூலத்தையும், விஷ்ணுவினது சக்கிரத்தையும், குபேரனது விமானத்தையும், மற்றுமுள்ள தேவர்களது ஆயுதங்களையும் செய்தார். பிறகு பாஸ்கரர் தனது மனைவி யிருப்பிடம் சென்று தானும் அச்வ வேடம் பூண்டு அச்வினி தேவர் எனும் தேவ வைத்தியர்களைப் பெற்றார். இச்சூரியனது முதல் புதல்வனான வைவஸ்வதமனுவே இவ் வேழாவது மன்வந்தரத்திற்குக் காரணமானவர். இவரது இரண்டாம் புதல்வரான ஸாவர்ணி என்பவரே எட்டாவது மன்வந்தரத்திற்கு, மன்வந்தர கர்த்தாவாக ஆவார்.

தேவீ மாகாத்மியம்

ஸ்வாரோசிஷ மனுவின் வம்சத்திற் பிறந்த சைத்ரனெனும் சக்ரவர்த்தி மிகப்ரஸித்தமானவர். அவரது ஸந்ததியில் 'ஸுரதன்' என்றோர் அரசன் தோன்றினான். அவன் மனுநீதி வழுவாது மாநிலத்தை ஆண்டுவர, இவனது சத்துருக்கள் திடீரென்று தோன்றி இவனைப் போருக்கழைத்தனர். இவன் யுத்தத்திற்கு ஸன்னத்தமாயிராததால் புறங்காட்டி யோட நேர்ந்தது. தன்னாட்டை நாடி வரும்பொழுது ஆங்குள்ள செல்வமும் அமாத்தியன் முதலிய அவனது பரிவாரங்களால் அபஹரிக்கப்பட்டதைக் கண்டான். தான் ஏறிவந்த பரியுடன் தபோவனஞ் சென்றான். அங்கோர் அழகிய ஆச்ரமத்தைக் கண்டான். 'ஸுமேதஸ்' என்ற மாமுனிவரால் வரவேற்கப்பட்டு, சில நாள் அவருடன் தங்கினான். ஒரு நாள் வாடியவதனத்துடன் அங்கு வரும் ஸமாதி எனும் வைசியனைக் கண்டான். 'உனது துன்பத்திற்குக் காரணம் யாதென' அரசன் வினவ, பொன்னாசைகொண்ட தன் மனைவிமக்கள்

பேராசையால், தன்னிடமுள்ள தனத்தைப் பிடுங்கிக்கொண்டு தன்னந்தனியே தன்னைவிரட்டி அடித்ததாகக்கூறி, அவர்கள் க்ஷேமமா யிருக்கிறார்களோ என்று நினைத்து வருந்துகிறேன் என்றான்! உன்னைவிரட்டிய பாபிகளான அவர்களிடம் நீ கொண்ட அன்பு கருணையினால் தோன்றியதோ?' அல்லது மோஹத்தினாலுதித்ததோ? என்று அரசன் வினவினான். இதனிடையே 'ஸுமேதஸ்' எனும் தபஸ்வி அங்கு வர, இருவரும் அவரடிபணிந்து, 'எங்களிருவருக்கு மட்டுமல்ல! உலகிற்கே தோன்றிய மோஹம் எங்கிருந்து பிறந்தது? எத்தகையது? எதனால் அழியத்தக்கதென, விரித்துக் கூறுங்களென்று வேண்டினார்கள். மஹர்ஷி, மாயாதேவியை மனதால் பணிந்து, இவ்விருவர்களுக்கும் மாயையின் மஹிமையைக் கூற ஆரம்பித்தார்:—

ஸ்ரீமந்நாராயண மூர்த்தியினுடைய மாயை, இன்று நேற்று தோன்றியதல்ல. கற்றறிந்த பண்டிதர்களையும் மதி மயங்கும்படி செய்யும் மாயை அனாதியாயுளது. ஆயினும் துஷ்டர்களைச் சிக்ஷிக்க அந்தந்த காலத்திற்கேற்ற உருவமேந்தி அவனியில் தோன்றுவாள். அவளே யோக நித்ரை என்று மழைக்கப்படுவாள். ஒரு ஸமயம், உலகைப் படைக்கக்கருதி பாற்கடலில் பன்னகசயனத்தில் பள்ளிகொண்ட பரமன் தனது நாபிக்கமலத்திலிருந்து சதுர்முகனைத்தோற்றி வைத்தான். இந்நாராயணனது காதுக்குரும்பியிலிருந்து மது கைடபன் என, இரு ராக்ஷஸர்கள் தோன்றி, பிரம்மனைப் புஜிக்க ஆரம்பித்தனர். இவ்வரக்கர்களது பயங்கரமான உருவையும் செயலையுங் கண்டு, நடுங்கிய சதுர்முகன், பரமனைத் துதித்துச் சரணமடைந்தார். அவர் யோக நித்திரையிலீடு பட்டிருந்ததால், அம் மாயாதேவி அவரை யெழுப்ப எண்ணங்கொண்டு அவரது கண், வாய், நாஸிகை, ஹ்ருதயம், மார்பு முதலிய இடங்களைவிட்டு அவள் வெளிக்

கிளம்பினுள். சக்திவடிவமான மாயா தேவி, வெளிச் சென்றவுடன் நித்ரை தெளிந்தெழுந்த நித்தியன் இவ் வரக்கர்களது துஷ்ட செயலைக் கண்டார். உடனே சங்கு சக்ர கதாபாணியாக அவர்களுடன் ஐயாயிரமாண்டு போர் புரிந்தார். எவரும் ஜய அபஜயம் பெறவில்லை. வைகுண்ட நாதனது வீர்யத்தைக் கண்டு மெச்சிய மது கைடபர்கள், உமது வீர்யத்தைக் கண்டு ஸந்தோஷமடைந்தோம்! உமக்கு வேண்டிய வரத்தைக் கேளும் என்றூர்கள்.

மாதவர், என் கையால் நீங்கள் இறக்கவேண்டும். இதே எனது வரமென்றூர். மாயாவியான மாதவன், தங்களை வஞ்சித்ததைக் கண்ட ராக்ஷஸர்கள், அளித்த வரத்தை இல்லையென்று கூறுமல் அவரை வஞ்சிக்க எண்ணினுர்கள். ஹரியைப்பார்த்து வரந்தந்ததுண்மை; ஜலமில்லாத பூமியில் எங்களைக் கொல்லும்; என்றூர்கள். மஹாவிஷ்ணு ஜலமயமான இவ்வுலகில் இனி பிரும்மனுல் பூமி படைக்கப்படவேண்டும். இவர்களைக் கொல்லாதுவிட்டால் பிரும்மன் அழிந்து விடுவான், என்று எண்ணி தனது மாயா சக்தியினுல் தன் துடையை விசால பூமியாக்கி ஆங்கு இவர்களைக் கொன்றூர்.

மஹிஷாஸுர மர்த்தனம்.

இம் மாயாசக்தி எவராலும் வெல்ல முடியாத மஹிஷனைக்கொன்ற வகையைச் கூறுகிறேன்! கேள்! என்று ஸுமேதஸ் ஸுரத, ஸமாதிகளுக்குச் சொன்னூர்.

மஹிஷாஸுரன் தனது தபோ வலிமையால் எண்ணிறந்த. வரங்களைப்பெற்று இறுமாந்து தேவர்களை ஹிம்ஸித்து வந்தான். ஸுரர்களைப் புறங்காட்டி யோடும்படி செய்து, இந்திரனது பதவியையும், அஷ்டதிக் பாலகர்களது ஸ்தானத்தையும் அபஹரித்து மூவ்வுலகிலும் ராக்ஷஸ ஆக்ஷியை நிலை நிறுத்தினுன். இவனது கொடுமையைப் பொறுத

தேவர்கள் பிரம்மாவை முன்னிட்டு ஹரிஹரர்களைச் சரண மடைந்தனர். உடனே கோபங்கொண்ட இம்மூர்த்திகளது முகங்களிலிருந்தும் ஏனைய தேவர்களுடைய வதனங்களிலிருந்தும் தோன்றிய கோபக்கனல் ஒன்றாகச் சேர்ந்து ஓர் பெண்ணுருவாக அமைந்தது. அவளது ஒவ்வொரு அவயவத்திலும் தனது அம்சத்தால் தேவர்கள் அமர்ந்து தனது ஆயுதங்களையுந் தந்தனர். இதை ஏற்று தேவி உலகெலாம் நடுங்கும்படி ஓரட்டஹாஸம் செய்தாள். இதைக்கேட்டு திடுக்கிட்டு பலர், ப்ரக்ஞையற்று கீழே விழுந்தனர். மஹிஷாஸுரனும், நமக்கு ஸமமாக கர்ஜிக்கும் த்வனி எங்கிருந்து உண்டானதென்று அறிந்து, அங்கு தனது ஸேனாதிபதியான சிக்ஷுரனை அனுப்பினான். அவன் அபரிமிதமான அஸுர ஸேனையுடன், மஹாஹனு, உக்ரதர்சனன், பிடாலன், காலன்முதலிய வீரர்களுடனும் போர்கோலங்கொண்டு ரணகளஞ் சென்றான்.

ஆங்கு தேவி அனாயாஸமாக அஸுரப்படைகளைச் சூலாயுதத்தால் கொன்று குவித்தாள். இதைக்கண்டு அடங்காக் கோபங்கொண்ட சிக்ஷுரன், லக்ஷக்கணக்கான பாணங்களை வர்ஷித்து தேவியைச் சரவர்ஷத்தினால் மறைத்தான். அரைக்ஷணத்தில் தேவி ஸூர்யனைக்கண்ட பனியைப்போல் அச்சரங்களை உதறித் தள்ளி ஸேனாதிபதியின் குதிரையைக் கொன்று தேரை முறித்து ஸாரதியையும் நாசம் செய்தாள். அடங்காக் கோபம்கொண்டு சிக்ஷுரன் தேவியின் வாஹனமான ஸிம்மத்தை அடித்துத் தேவியின் இடது கையைக் கத்தியால் வெட்டவந்தான். அக்கத்தி தூள்தூளாக முறிந்ததே தவிர தேவியின் சரீரத்தில் கடுகளவேனும் காயம் தோன்றவில்லை. சூலத்தைக் கையிலேந்தி வேகமாய் எதிர்த்துவரும் சிக்ஷுரனை தேவி, சூலம்கொண்டு அவன் சூலத்தை முறித்து அவனையும் கொன்றாள். சாமரன் எனும் மற்றொரு அஸுர வீரன் சக்தி ஆயுதத்தை அம்பிகையை நோக்கிவிட தனது

ஹுங்காரத்தால் அவள் அதை அழித்தாள். தேவியின் வாஹனமான ஸிம்மம் விரைந்து சென்று ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து சாமரனைக்கொன்றது.

பாஷ்கலன், தாம்ரன், அந்தகன், உக்ராஸ்யன், உக்ர வீர்யன், மஹாஹநு, பிடாலாஸ்யன் முதலிய வீரர்கள் தீயினிடம் வரும் வெட்டுக்கிளிகள் போல் தேவியினிடம் சென்று போர்புரிந்து இறந்தனர். தனது ஸேனையும் ஸேனாதிபதியும் மாண்டதைக் கண்டு மட்டில்லாக் கோபம் கொண்ட மஹிஷாஸுரன் தனது கொம்புகளாலும், கால்களாலும், வாலாலும் தேவியின் ஸேனையை அழித்தான். அம்பிகை மிருக வடிவனான அவ்வஸுரனைப் பாசம்கொண்டு கட்டினாள். உடனே அவன் ஸிம்மவேடம்பூண்டு போர்புரிந்தான். தேவி சூலத்தால் ஸிம்மத்தைத்தாக்க, அவன் வில்லேந்திப் புருஷனாகத் தோன்றினான். மற்றோர் அம்பினால் அம்பிகை அவனையடிக்க யானை உருவெடுத்து நீண்ட துதிக்கையால் தேவியின் ஸிம்மத்தைப் பிடித்து இழுத்தான். வாள்கொண்டு அவள் அக்கையை அறுக்க, மறுபடியும் அவன் மஹிஷ வடிவத்துடன் யுத்தம் செய்தான். தேவி வீரபானம் அருந்தி பயங்கரமாக அட்டஹாஸம் செய்தாள். பின்னங்கால்களால் தேவியை உதைக்க மஹிஷன் வரும்போது அவன் கால்களைக் கரத்தால் பிடித்திழுத்துக் கத்தியால் அவன் கழுத்தை வெட்டினாள். இக்கொடிய அரக்கனது மரணத்தைக்கண்டு மகிழ்ச்சி கொண்ட தேவர்கள் மஹிஷாஸுர மர்த்தினியை மந்தார புஷ்பம் கொண்டு மலர்மாரிப்பொழிந்துப் போற்றினர். ஸகல தேவர்களும் ஒன்றுகூடி தேவியைத் துதிசெய்ய ப்ரஸன்னையானபகவதி உங்களுக்கு யாது வரம் வேண்டுமென்றாள். அவ்வப்போது தோன்றும் அரக்கர்களை அழித்து அபயம் அளிக்க வேண்டுமென்று அமரர் பிரார்த்திக்க, அங்ஙனமே ஆகட்டுமென்று, அம்பிகை அந்தர்த்தானமானாள்.

தூம்ரலோசன வதம்.

முன் ஒரு ஸமயம் சும்ப நிசும்பர் என்ற அரக்கர்கள் தவம் செய்து வரம்பெற்று, ஸகலதேவர்களையும் வென்றனர். இந்திரனை ஜயித்து அவன் அதிகாரத்தையும், சந்திர ஸூர்யர்களது ஸ்தானத்தையும் பிடுங்கித் தாங்களே அவர்களது வேலையைச் செய்துவந்தனர். அன்றியும் அமரர்களையும், அவர்களைச் சார்ந்தவர்களையும் துன்புறுத்தி வந்தனர். இக் கஷ்டத்தைச் சகிக்கமுடியாத தேவர்கள் தேவியைத் தவிர வேறு ஒருவரும் சரணமில்லையென்று ஒன்றுகூடி அம்பிகையைத் துதித்தனர். கங்காஸ்நாநம் செய்யச் சென்ற பார்வதி தேவி இதைக்கேட்டு உங்களது இஷ்டத்தைப் பூர்த்திசெய்யும் சக்தி இதோவருகிறாள்என்று தன் உடலிலிருந்து ஓர்தேவியை எடுத்துக்கொடுத்தாள். அவளே கௌசிகி என்றும் காளிகை என்றும் அழைக்கப்படுவாள். கௌரி, தன் சக்தி வெளியில் சென்றதால் கிருஷ்ணவர்ணமானாள். அழகிய உரு கொண்ட இக்காளிகையைக் கண்டு சண்டமுண்டனெனும் கிங்கரர்கள் சும்ப நிசும்பரிடம் சென்று இவள் அழகை வர்ணித்தார்கள். உலகிற்கே ஒளியாய், ரதிக்கும் அழகளிப்பவளாய், ஸர்வாவயவ ஸுந்தரியாயுள்ள காளிகையின் குணத்தையும் அழகையும் பலத்தையும் கேட்டு இவ்விரு அஸுரர்களும் அவளிடம் காமனை கொண்டார்கள்.

ஸுக்ரீவனெனும் தூதனை அனுப்பி உலகில் உத்தமர்களான எங்களில் ஒருவனுக்கு உயர்ந்த அழகுவாய்ந்த நீயே தக்கமனைவியாவாய். நீ வேண்டிய பொருள் எல்லாம் உனக்களிப்போம், எவருமனுபவிக்காத ஸுகத்தை உனக்குக் கொடுப்போம். இருவரில் ஒருவரை மணந்துகொள் என சும்பநிசும்பர்கள் வேண்டினார்கள். இதைக் கேட்ட தேவி நகைத்து எவன் என்னைப்போரில் வெல்கிறானோ அவனையே

மணப்பேன். இது எனது ப்ரதிஜ்ஞை. ஆதலின் அவ்விருவர்களையும் விரைவில் போருக்குவரச்சொல் என்றாள். இதைக் கேட்டு கோபங்கொண்ட தூதன் பெண்ணே! உலகில் ஒப்பற்ற வீரரான இவர்களைக் கண்டு தேவரும் மூவரும் பயந்து நடுங்கி ஓடினரென்றால் நீ அவர்களோடு போர்புரிய சக்தியுள்ளவளோ? உலகில் உத்தம ஸுகத்தைப் பெற்று பிழைக்க விருப்பமிருந்தால் அவர்களில் ஒருவரை மணந்து கொள் என்றான். தேவி அவனைப் பார்த்து தூதரான நீ நான் சொன்னதை அங்கு சொல்ல வேண்டுமே யல்லாது என்னுடன் எதிர்த்துப் பேசுவது அழகல்ல. சொன்னதைச் செய்! இல்லையேல் உனது நாயகனுடன் உன்னையும் யமபுரிக்கனுப்புவேன் என்றாள். இதைக்கேட்டு பயந்து ஓடிய தூதன் நடந்தவற்றை அவர்களிடம் அறிவித்தான்.

இதை அறிந்த சும்ப நிசும்பர்கள் தூம்ரலோசனன்என்பவனை யழைத்து எப்படியாவது அவளைக் கொல்லாமல் பிடித்துவா என்று ஆஜ்ஞையிட்டார்கள். அவனும் அறுபதினாயிரம் ஸேனையுடன் கூடி ஹிமாலயம் சென்று தேவியைப்பார்த்து எங்கள் ஊருக்கு வந்து அஸுரரிருவரில் ஒருவரை மணந்தால் ஸுகம் பெறுவாய். இல்லையேல் பலாத்காரமாக உன்னைத் தூக்கிச் செல்வேன் என்றான். தேவி நீ பலாத்காரமாகத் தூக்கிச் சென்றால் யான் என்ன செய்ய முடியும்? என்று பரிஹாஸமாகக் கூற, தூம்ரலோசனன் அவளருகே தூக்க வந்தான். ஹுங்காரத்தினால் அம்பிகை அவனை பஸ்ம மாக்கினாள். மிகுந்த ஸேனைகளைச் சரவர்ஷத்தால் நாசம் செய்தாள். இதையறிந்த அரக்கர்கள் சண்டமுண்டரென்ற இரு ஸேனாதிபதிகளை யனுப்பினார்கள். அவர்களும் எண்ணிறந்த ஸேனையுடன் போருக்குவர தேவியினது ஸிம்மம் அச்சேனையை அழித்தது. கோபம்கொண்ட சண்டன் கதையைக் கையிலேந்தி தேவியைத் தாக்க விரைவாக

ஓடிவந்தான். அம்பிகையும் கைவாள் கொண்டு அவன் சிரத்தை யறுத்தாள். முண்டனும் சண்டகோபங்கொண்டு தேவியிடம் ஓடிவர அவன் தலையையும் வெட்டி இரு சிரங்களையும் கையிலேந்தி பார்வதியினிடமளித்து சும்ப நிசும்பர்களையும் வதம் செய்வதாக வாக்களித்தாள். இதைக் கண்டு ஸந்தோஷங்கொண்ட கௌரி சண்டனைக் கொன்றமையால் சண்டிகையென உனக்கு நாமமளித்தோம் என்று கூறி அவளது வீர்யத்தைக் கண்டு ஸந்தோஷமடைந்து ஆசிர்வதித்தாள். மற்றதேவர்களும் சண்டிகையைக் கண்டு துதித்துப் போற்றினர்.

சும்பன் எண்ணிறந்த சேனைகளோடு தேவியுடன் போர் புரிய ஸித்தமாகக் கிளம்பினன். இதையறிந்து ஸகல தேவர்களும் தத்தம் உடலிலுள்ள சக்தியைக் கிளப்பி தேவிக்கு ஸஹாயமாக அனுப்பினர்கள். ப்ரஹ்மாணீ, மாஹேச்வரீ, கௌமாரீ, வைஷ்ணவீ, வாராஹீ, நாரஸிஹ்மீ, இந்திராணீ, முதலிய ஸகல சக்தி தேவிகளும் தத்தமக்குரிய வாஹனங்கள் மீதேறி அஸுரனேடு யுத்தம் செய்ய ஸன்னத்தமாக வந்தனர். இதனிடையில் ஸ்ரீதேவி சும்ப நிசும்பனிடம் ஓர் தூதியையனுப்பி நீங்கள் தேவராஜ்யத்தைவிட்டு என்னைச் சரணமடைந்து பாதாளலோகத்திற்குச் செல்லுங்கள். இல்லையேல் யுத்தத்திற்கு வாருங்கள் என்று சொல்லியனுப்பினள். அந்த சக்திக்கு அன்றுமுதல் சிவதூதி எனப் பெயர் விளங்கியது. மாத்ருகணங்கள் பலபயங்கரமான ஆயுதங்களைக் கையிலேந்தி ராக்ஷஸ ஸேனையை சின்னபின்னமாகச் சிதைத்தனர். இதைக்கண்டு ரக்தபிந்து என்ற அஸுரன் விரைவாக ஓடிவந்து சக்திகளை அடிக்க ஆரம்பித்தான். இந்திராணி கோபங்கொண்டு வஜ்ராயுதத்தால் அவனைத்தாக்க அவனது உடலிலிருந்து எவ்வளவு ரக்தபிந்துக்கள் பூமியில் சிந்தினவோ அவ்வளவு இவனைப்போன்ற இராக்ஷஸர்கள் கிளம்பிப்

போருக்கு வந்தனர். இதைக்கண்டு ஸகல மாத்ருகணங்களும் வீராவேசத்துடன் அவர்களைக்கொல்ல அவரவர் ரத்தம் சிந்திய விடத்திலிருந்தும் கோடிக்கணக்கான ரத்தபிந்து ராக்ஷஸர்கள் தோன்றி உலகெலாம் பறவி நின்றனர்.

இதைக்கண்டு கோபம் கொண்ட சாமுண்டி காளியையழைத்து யான் கொன்றுகுவிக்கும் ராக்ஷஸர்களுடைய ரக்த பிந்து கீழே சிந்தாமல் குடித்துவிடு என்று கட்டளையிட்டாள். அங்ஙனமே காளி, அவன் ரக்தத்தைப்பருக, ரக்தமற்ற ரக்த பிந்துவைத் தேவி சாமுண்டி அனுயாஸமாகக் கொன்றாள். ஸகல தேவர்களும் பூமாரி பொழிந்து தேவியைப் போற்றினர்கள்.

சும்ப நிசும்ப வதம்

தனது சேனை மாண்டதைக்கேட்டு மட்டில்லா கோபத்துடன் நிசும்பன் அளவற்ற அரக்கர்படையை அழைத்து வந்து கதைகொண்டு தேவியின் ஸிம்மத்தைத் தாக்கினன். தேவி, அவனது கேடயம் கத்தி முதலியவைகளைப் பொடியாக்கினள். அவன் அனுப்பின சக்தியையும் நடுவழியிலேயே நாசம் செய்தாள். சூலம் ஏந்தி வீராவேசம் கொண்டு வரும் அவனைப் பாணவர்ஷத்தால் மூர்ச்சித்துக் கீழேவிழும்படி அடித்தாள். இதைக்கண்டு கடுங்கோபங்கொண்டு சும்பன் ஓடிவர தேவியின் ஸிம்மம் ப்ரளயகால இடிபோன்ற ஓர் கர்ஜனை செய்தது. தேவி கௌசிகியும், வானிலேறி இரண்டு கரங்களாலும் பூமியை ஓங்கி ஓர் அறை அறைந்தாள். இதைக் கண்டு நடுங்கிப் பல அரக்கர்கள் மாண்டனர். சும்பன் உலகெலாம் பற்றி எரிக்கும் ஓர் சக்தியை அனுப்ப,தேவி தனது சரவர்ஷத்தால் அதைப் பஸ்மமாக்கினள் இதனிடையில் நிசும்பனும் மூர்ச்சை தெளிந்து எழுந்து பாண விருஷ்டியால் தேவியைத் தாக்கினன்.

கௌசிகியின் சரவர்ஷம் அவைகளைப் பொடி பொடியாக்கவே அஸுரன் கதையை எறிந்தான். அக் கதையை முறித்து சூலத்தினால் நிசும்பனது மார்பில் தேவி தாக்க அவன் அடிபட்டுக் கீழே விழுந்தான். அவன் உடலிலிருந்து மற்றோர் பயங்கரமான அரக்கன் உதித்து அம்பிகையோடு சண்டைக்குவர, அவள் கத்தியால் அவன் சிரஸைச் சேதித்தாள். பிறகு மாத்ருகணங்களுக்கும் ராக்ஷஸஸேனைக்கும் கடும்போர் நிகழ்ந்தது. சும்பன் ஓடிவந்து தேவியைப் பார்த்து பல சக்திகளைக்கொண்டு நீ ஜயம் பெறுகிறாய் என்று கூற தேவி, நானே இத்தனை வடிவமாகத் தோன்றியவள் என்று கூறி ஸகல மாத்ருகணங்களையும் தனக்குள்ளே லயமாக்கிக் கொண்டாள். சும்பனும் தேவியும் அஸ்த்ரப்ரத்யஸ்த்ரங்களை விட்டு மிக பயங்கரமாக யுத்தம் செய்தனர். தேவியின் சரவர்ஷத்தால் சும்பனது வில் முறிய சக்தியைக் கையிலேந்தி அவன் ஓடிவந்தான். அம்பிகை அதையும் அழித்து கட்கபாணியாய் அருகில் ஓடிவந்த அவன் கத்தியைக் கத்தியினால் முறித்தாள். இருவரும் ஆயுதமின்றி சிறிதுநேரம் முஷ்டியுத்தம் செய்தனர். சும்பன் ஆகாயத்தில் நின்று அடிக்க ஆரம்பிக்கவே தேவியும் அங்கு சென்று அவனைக் கீழேதள்ளி சூலத்தினால் அவன் மார்பைப் பிளந்தாள். அடியற்ற மரம் போல் அஸுரராஜன் கீழேவிழுந்து இறக்க ஸகல தேவர்களும் அம்பிகையைப் போற்றி குஸுமவர்ஷம் வர்ஷித்து ஆடிப்பாடி அம்பிகையைக் கொண்டாடினார்கள்.

பிறகு ஸகல தேவர்களும் ஒன்றுகூடி தேவியினது அபாரசக்தியைக் கண்டு மகிழ்ந்து அம்பிகையை மற்றுமொரு முறைப்போற்றிப் பணிந்தனர். ப்ரஸன்னையான பகவதி, யாது வரம் வேண்டுமென வினவ, தேவர்கள் மூவுலகும் ராக்ஷஸ பாதையின்றி இருக்கவேண்டுமென்று பிரார்த்தினர். தேவி அங்ஙனமே ஆகட்டுமென்று கூறி இவ்விரு அஸுரர்

களும் மற்றுமோர் முறை மாநிலத்தில் தோன்றப் போகின்றனர். யசோதையினது கர்ப்பத்தில் யான் தோன்றி விந்தியாசல நிவாஸினி என்ற பெயர்கொண்டு அவர்களைக் கொல்வேன். அன்றியும் ரக்ததந்திகா, சதாக்ஷி, சாகம்பரீ, துர்க்கா, பீமா, ப்ராமரா, முதலிய நாமம்கொண்டு அவ்வக் காலத்தில் தோன்றும் துர்க்கமன் அருணன் முதலிய அரக்கர்களைக் கொன்று ரிஷிகளையும் தேவர்களையும் காப்பாற்றுவேன். லோகோபகாரமாகவே அவ்வப்போது பல நாமம்கொண்டு பாரினில் தோன்றுவேன் என்று கூறி பராதேவதை மறைந்தாள்.

இக்கதையை ஸுமேதஸ் என்ற மாமுனி ஸுரதனுக்கும் ஸமாதிக்கும் கூற அம்பிகையை அர்ச்சிக்கும் வகையை அவரிடமிருந்து அவ்விருவரும் உபதேசம்பெற்று, தேவியை தர்சிக்க ஓர் நதீதீரம் சென்று ஏகாக்ரமனத்தினராய் தேவீ ஸூக்தத்தை ஜபித்து வந்தனர். அதிநியமத்துடன் மூன்று ஆண்டு இவர்கள் முனைந்து தவம்புரிய தேவி இவர் எதிரில் எழுந்தருளி யாது வரம் வேண்டுமென்றாள். ஸுரதன் ஸ்வாராஜ்யத்துடன் நற்பிறவியையும் ஸமாதி ஜ்ஞானத்தையும் வேண்ட, தேவி அரசனை மன்வந்தர கர்த்தாவாகவும் இருக்கும்படி ஆசிர்வதித்து இருவரும் கேட்ட வரத்தையளித்து மறைந்தாள்.

ரௌச்ய மன்வந்தரம்

ருசி என்ற மஹர்ஷி நைஷ்டிக ப்ரம்மசாரியாய் பலநாள் தவம்புரிந்து வந்தார். அவரது மனம் இல்லறத்தை விட்டு துறவறத்தை நாடியது. அவரைக்கண்டு அவர் பித்ருக்கள் நீ ஸந்ததியற்று எங்களுக்குத் தர்ப்பணமும் பிண்டமும் அளிப்பவர் இல்லாதபடி செய்வதால் நாங்கள் தலை கிழாகத் தாணியில் விழும்படி நேர்கிறதென்று கூறி ருசிக்கு விவா

ஹத்தில் ருசி உண்டாகும்படி இனிய உபதேசம் செய்தனர். த்ருட சித்தான ருசி, ஸம்ஸாரத்தினல் வரும் துன்பத்தைக் கூறி பந்தத்தை அகற்றி பரமனையடையவே பாடுபட முயற்சிப் பதாகக்கூறினர். பித்ருக்கள் பலனைக் கருதாது நித்யநைமித் திக கர்மாக்களை யனுஷ்டித்து வந்தால் பவபந்தத்தை யறுக் கும் ஞானம் பிறக்கும் என்றனர். ஆயினும் வயதானவனும், ஏழையுமான என்னைத் தேடி எவன் பெண்ணைக்கொடுப்பன்? என்று ருசிகூற எங்ஙனமேனும் ஸத்ஸந்ததி பெற்று எங்க ளைக் கரையேற்றுவாய் என பித்ருக்கள் கூறினர்கள். இம் மஹர்ஷி எங்குமலைந்து திரிந்து பெண்ணைப்பெருமல் சிந்தை கொண்டு ப்ரம்மாவை நாடி தவம்புரிந்தார். சதுர்முகன் எதிரில் தோன்றி பித்ருக்களின் நன்மையை நாடும் நீ, பித்ரு தேவர்களையே ஆராதனம் செய். அவர்கள் அருளால் கன்னி கையைப் பெறுவாய் என்று கூறி மறைந்தார்.

அங்ஙனமே ருசி பித்ருக்களை ஆராதித்துத் தர்ப்பணம் செய்து அவர்களை அழகிய ஸ்தோத்ரங்களால் துதித்தார். ஜ்யோதிர்வடிவமாக பித்ருக்கள் அவர் எதிரே தோன்ற அவர் களைப் பணிந்து துதித்துத் தக்க மனைவியை யளிக்கவேண்டு மென்று வரம் கேட்டார். பித்ருக்கள் அதிவிரைவில் அழ கிய மனைவியைப் பெறுவாய். அவளிடம் தோன்றும் புதல் வன் மன்வந்தர கர்த்தாவாக இருப்பான் என்று கூறினர். அன்றியும் இவ்வழகிய ஸ்துதிகளை ச்ராத்தகாலத்தில் படித் தால் த்ரவ்யலோபம் ச்ரத்தாலோபம், காலலோபம் நியம லோபம் முதலிய தோஷங்கள் இருந்தாலும் அவை அகன்று ச்ராத்தம் ஸம்பூர்ணமாகும் என்று உரைத்து மறைந்தனர். அந்தியிலிருந்து ப்ரம்லோசா என்ற அப்ஸரஸ் தோன்றி மாலினி எனும் தனது கன்னிகையை ஏற்கும்படிவேண்டி னள். அங்ஙனமே மஹர்ஷி விதிப்படி அவளை மணந்து ரௌச்யனெனும் மகனைப் பெற்றார். அவரே ரௌச்ய மன்வந் தரத்திற்குக் காரணராயிருந்தவர்.

பௌத்ய மந்வந்தரம்.

ஆங்கிரஸர் என்ற மஹர்ஷியினது சிஷ்யர் பூதி என்ற பெயருடைய பெரியார். இவர் மிகக் கோபமுள்ளவர். சிறிய குற்றத்திற்கும் பெரும் சாபம் கொடுப்பார். இவரது சாபத் திற்கஞ்சி ஸூர்யனும் கொஞ்சமாகத் தபிப்பர். வாயுவும் மந்தமாக வீசும். ருதுக்களும் அவர் சொற்படி நடக்கும். அவரது ஸஹோதரர் ஸுவர்ச்சஸர் என்ற பெயருடையவர். தனது யாகத்திற்கு பூதி வரவேண்டுமென்று அவரை அழைத்தார். பூதியும் அங்குசெல்லும்போது ப்ரசாந்தனை னும் தனது சிஷ்யனை யழைத்து யான் வருமளவும் ஆச்ர மத்தை ஜாக்ரதையாகக் காப்பாற்று. அக்னியை ரக்ஷித்து வா. அதிதி பூஜை தவறாதே என்று கட்டளையிட்டுச் சென் றார். ப்ரசாந்தன் குருவினது கோபத்தை உணர்ந்து மிக ஜாக்ரதையாக அவரிட்ட கட்டளையைத் தவறாது அனுஷ்டி த்து வந்தான். ஒருநாள் அக்னி அணைந்துவிட்டது. சிஷ்யன் என்ன செய்வதென தெரியாமல் வருந்தினான். வேறு அக் னியை எடுத்து மூட்டி ரக்ஷித்தால் இது இருமடங்கு குற்ற மாகுமாதலால் குருவின் கோபம் இரட்டிக்கும். ஆதலின் என் செய்வது? எங்கு செல்வது? குருவின் சாபத்தைவிட அவருக்கு யான் செய்த அபராதத்தை எண்ணியே அஞ்சுகி றேன் என சிஷ்யன் நிராத்துயர மடைந்தான்.

அந்த அக்னி பகவானையே ஆராதித்து அவரருளால் ஆசார்யனுக்கிழைத்த அபசாரத்தை அகற்றுவேனென, பரி சுத்தனாய் அக்னிசரணம் சென்று ஏகாக்ர சித்தனாய் மன முருக அக்னியைத் துதித்தான். ஏழு நாக்குகளுடன் எதிரில் தோன்றிய வன்ஹிதேவர் ப்ரசாந்தனை நோக்கி யாதுவரம் வேண்டுமென்றார். சிஷ்யன் அவரடி பணிந்து எழுந்து இங்கு அவிந்த அக்னிதானே தோன்றவேண்டும். புத்ரபாக்ய மில்

லாத குருவிற்கு ஓர் புதல்வன் பிறக்கவேண்டும். இயற்கை யாக என் குருவுக்குள்ள கோபமகன்று எல்லோரிடமும் அவ ருக்கு அன்பு ததும்பவேண்டும். என மூவ்வரங்களை வேண் டினான். அக்னியும் அங்ஙனமே ஆகட்டுமென்று கூறி தனக் கென ஓர் வரமும் கேளாத சிஷ்யனது குருபக்தியைக்கொண் டாடி பூதியினது புதல்வன் பௌத்ய மங்வந்தரத்திற்குக் காரணமாயிருப்பான். நீ என்னைத் துதித்த ஸ்தோத்திரங் களை ஜபிப்பவர் பாபமகன்று பல நன்மைகளைப் பெறுவர் எனக்கூறி அக்னி அந்தர்த்தானமானார்.

பூதி தனது ஆச்ரமம் சென்று, சிஷ்யனால் வரவேற்கப் பட்டு ஆஸனத்திலமர்ந்தவுடன் ப்ரசாந்தனைப் பார்த்து என் மனம் உன்னிடம் மட்டிலும் அல்லாமல் எல்லோரிடமும் பேரன்பு பூண்டிருக்கிறது. ஸ்வபாவமான எனது கோபம் எங்கோ சென்றது. இதற்கு யாது காரணம்? என்று கேட்க அவரும், நடந்தவற்றை விரிவாகக் கூறினார். சிஷ்யனது குணத்தைக் கண்டு மிக மகிழ்ச்சிகொண்ட பூதி அந்தக்ஷணத் திலேயே அஷ்டாதச வித்யைகளும் உனக்குத் தோன்றட்டு மென்று அனுக்ரஹம் புரிந்தார். அக்னியின் அருளால் பூதிக் கோர் புதல்வன்தோன்றி பௌத்ய மன்வந்தரத்திற்கு அவன் காரணமானான்.

மந்வந்தர ச்ரவணபலம்

பதினான்கு மன்வந்தரங்களையும் படிப்பவர் அல்லது கேட்பவர் பலவித பயனைப் பெறுவர். ஸ்வாரோசிஷ மனு வின் சரிதத்தை ச்ரவணம் செய்தோர்களது விருப்பம் பூர்த் தியாகும். ஔத்தமரது சரிதத்தால் உத்தம தனத்தைப் பெறலாம். தாமஸ சரிதத்தைக் கேட்டு தமோகுணத்தை அகற்றி ஜ்ஞானத்தைப் பெறலாம். ரைவத மன்வந்த ரத்தைக் கேட்போர் புத்தியையும் மனதிற்கிசைந்த மனை

வியையும் பெறுவார். சாக்ஷுஷ மங்வந்தரத்தால் ஆரோக்ய முண்டாம். வைவஸ்வத மங்வந்தரம் பலத்தை யளிக்கும். ஸூர்யஸாவர்ணி சரிதம் குணமுள்ள புத்திர பௌத்ரர்களைக் கொடுக்கும். ப்ரம்மஸாவர்ணி பெருமையை யளிக்கும். தர்மஸாவர்ணியால் சுபமுண்டாகும். ருத்ர ஸாவர்ணி புத்தியையும் ஜயத்தையும் அளிக்கும். தக்ஷஸாவர்ணி, கேட்டவனை உத்தமனாகச் செய்யும். ரௌச்ய மங்வந்தரம் சத்ருவைக் கொல்லும். பௌத்ய மங்வந்தரம் தேவ ப்ரஸாதத்தைத் தேடித்தரும். அக்னிஹோத்ரஸாவர்ணி ஸகல ஸௌபாக்கியத்தை அளிக்கும்.

மார்த்தாண்டன்.

உலகைப் படைக்கக் கருதிய பத்மாஸனன் தனது வலதுகை விரலிலிருந்து தக்ஷனையும் இடதுகை விரலிலிருந்து அவரது பத்னியையும் படைத்தார். தக்ஷனது புதல்வியான அதிதி என்பவள் கச்யபரை மணந்து பல் வகையான ப்ராணிகளைப் படைத்தாள். இவர்கள் ஸ்ருஷ்டித்த ப்ராணிகளை ரிக், யஜுஸ், ஸாமமென்ற மூன்று வேதஸ்வரூபியான விவஸ்வான் தனது உக்ரகிரணத்தால் கொளுத்த, ப்ரம்மா அவரைத்துதித்து தாபத்தையடக்கி உலகைக்காக்கும்படிவேண்டினர். அங்ஙனமே ஸூர்யன் தனது ஒளியைக்குறைத்து பிராணிகளுக்கு அறிவையளித்து உலகை வளர்த்துவந்தார். தேவர்களும் அஸுரர்களும் ஸஹோதர பான்மைகொள்ளாது பங்காளி முறையில் பகைமைகொண்டு போர்புரிந்தனர். அஸுரரது பலத்தால் தேவரழிய தேவமாதாவான அதிதி ஸூர்யனை நியமத்துடன் உபாஸித்துத் துதித்துவந்தாள். தேஜோராசியாக எதிரில் தோன்றிய பாஸ்கரனைப்பார்த்து அதிதி தங்களது உருவத்தை யான் காணமுடியவில்லை, யான் கண்கொண்டுகாணும் ஸௌம்ய சரீரத்தோடு என் எதிரே

தோன்ற வேண்டுமெனப் பிரார்த்தித்தாள். அங்ஙனமே திருமால் திவ்யசரீரத்துடன் தேவியைப்பார்த்து உமது உள்ளத்தை உணர்வேன். நீ கோரியபடி நானே உனக்குப் புதல்வனாகத்தோன்றி தேவசத்ருக்களை அழிப்பேன். நான் உனது கருவில் தங்கியிருக்கும்பொழுது நியமத்துடன் இருஎன்று கூறி அவர் மறைந்தார்.

இந்திரன் முதலிய தேவர்கள் ஆதித்யன் எப்போது அவதரிப்பான்? நாம், இழந்த யக்ஞபாகத்தை எப்போது பெறுவோம்? என்று ஏங்கி இருந்தனர். இச்சமயத்தில் ஸஹஸ்ர ரச்மி ஸுஷும்ன என்ற கிரணத்தை அவளது கர்ப்பத்தில் அனுப்பி குழைந்தையாகும்படி செய்தார். அதிதி கர்ப்ப காலத்தில் பெண்கள் இங்ஙனம் இருக்கவேண்டுமென சாஸ்திரங்கூறிய முறைப்படி ஆசார நியமத்துடன் இருந்தாள். அன்றியும், நற்குழந்தைபிறந்து வீர்யத்துடன் தேவசத்ருக்களை வெல்லவேண்டு மென்றெண்ணி சாந்திராயணம் முதலிய வ்ரதங்களைச் செய்துவந்தாள். இதைக்கண்ட அவள் பதியான கச்யபர் கோபம் கொண்டு கர்ப்பத்தை ஊட்டி வளர்க்காமல் உபவாஸமிருந்து கருவைக் கொல்வது நியாயமோ? என்றார். அதிதியும் நாத! இறந்த குழந்தை பகைவனை எப்படிக்கொல்லும்? பகைவனை அழிக்க அல்லவோ யான் பல தவம் புரிவதுஎன்றாள். இதைக்கேட்டு ஆகாசவாணி ம்ருதம் என்று நீர் சொன்னபடியால் இக்குழந்தைக்கு மார்த்தாண்டன் எனப்பெயர் இடு. இவன் நீங்கள் கோரிய பலனைத் தருவான் என்று காச்யபரைப் பார்த்துக் கூறிற்று.

அங்ஙனமே ஆதித்யன் அம்சத்தால் பிறந்த குழந்தைக்கு மார்த்தாண்டனெனப் பெயரிட்டார்கள். தேவர் இட்ட ஆணையின்படி சூர்யாதிகாரத்தையும் இவன் பெற்றான். இவனது பலத்தைக்கொண்டு தேவர்கள் அஸுரர்களை வலுவிலே போருக்கிழுத்தனர். தேவாஸுரயுத்தத்தில் மார்த்

தான்டன் தனது தேஜஸ்ஸால் அஸுரர்களை எரித்துச் சாம்ப லாக்கினர். இச்சூர்யனது பராக்ரமத்தைக் கண்டுவியந்து விச்வகர்மா என்பவர் ஸம்ஜ்ஞை எனும் தனது கன்னிகையை இவருக்கு அளித்து விதிப்படி விவாஹம் செய்து வைத்தார்.

ஆதித்ய மஹிமை.

தமன் என்ற அரசனுக்கு ராஜ்யவர்த்தனன் என ஓர் புதல்வன் பிறந்தான். அவன் இளமையிலேயே மிக தீரனுய் இருந்ததைக்கண்டு விதூரதன் என்ற தக்ஷிண தேசத்தரசன் மாநிநீ எனும் தன் பெண்ணான மாதரசியைக் கொடுத்து மணம் புரிந்துவைத்தான். ஏழாயிரமாண்டு இத்தம்பதிகள் இணைபிரியாது சிற்றின்பத்தை யனுபவித்து ஒருவகைக் குறையுமின்றி வாழ்ந்து வந்தனர். இவன் தர்மம் தவறாது ப்ரஜைகளைப் பரிபாலித்துவந்தான். எல்லோரும் இவனைத் தெய்வமாக நினைத்துப் போற்றிவந்தனர். ஒரு நாள் மானினி யுடன் ராஜ்யவர்த்தனன் ராஜ்ய கார்யத்தை முடித்து அந்தப் புரத்தில் ஏகாந்தமாக ஹம்ஸ தூலிகா சயனத்தில் வீற்றிருந் தான். அச்சமயம் மஹிஷியினது கமலக் கண்களிலிருந்து முத்து முத்தாகக் கண்ணீர் பெருகி கணவனது மார்பில் பாய்ந்தது.

திடுக்கிட்டு எழுந்த அரசன், ஹா! தேவி! உனக்கு யாது குறை? அகண்ட பூமண்டலத்தையும் ஒற்றைக்குடையின்கீழ் ஆளும் ஓர் சக்ரவர்த்தியின் மனைவியன்றோ நீ? யான் அறிந்த மட்டும் உனக்கு யாதொரு குறையுமிருக்க நியாயமில்லையே! நமது ஆணைக்கு அஞ்சி அமரரும் நம் சொற்படி நடக்கின்ற னர் எனில் மானிடரில் எவரே உனக்கு எதிராக இருக்க முடியும்? ஸர்வேச்வரனது அருளால் ஸத்ஸந்ததியும் பெற் றிருக்கிறய். தைவிகமாகவோ பௌதிகமாகவோ யாதொரு

துன்பமும் உனக்குத் தோன்றுதன்றே? ஒருநாளுமில்லாது இன்று உன் கண்ணீர்வடியக் காரணம் யாது? என்று பல முறை மன்னன் வினவினுன். மஹிஷி யாதொரு பதிலும் கூறுது ஒன்றுமில்லை ஒன்றுமில்லை என்றே கூறி வந்தாள். அரசன் வற்புறுத்திக்கேட்க மானினி அரசனது தலையில் ஓர் மயிர் வெளுப்பாய் நிரைத்து இருப்பதைக்காட்டி முன்னிலும் பன்மடங்கு கண்ணீர் சொறிந்தாள். இதைவிட வேறு துக்கம் உளதோ? என விம்மி விம்மி அழுதாள்.

ராஜவர்த்தனன் புன்னகையுடன் மானினியைப்பார்த்து மாதே! மானிடப்பிறவிக்கு இது இயல்பன்றே? நமது இளமையில் செய்யவேண்டிய தர்மங்களையும் நாம் அனுஷ்டித்தோமன்றே? மானிடருக்குக் கிட்டாத தேவஸுகத்தையும் மாநிலத்தில் பெற்றேம். அன்றன்றும் தவருது அந்தணேத்தமரை யழைத்து அபரிமிதமாக ஸகல தானங்களும் செய்தோம். க்ரஹஸ்தனுக்குரிய யஞ்ஞங்களை எண்ணிறந்த தக்ஷிணையுடன் எவரும் வியக்கும்படி பல செய்தோம். பித்ரு ரிணத்தை அகற்ற உயர்குணம் வாய்ந்த புத்திரர் பலர் உளர்! மயிர்தான் நிரைக்கட்டும். சதைதான் சுருங்கட்டும்! முடிவில் யமன்தான் வரட்டும்! இதைக்கண்டு அஞ்சலாமோ? இவ்வயதில் புதல்வனிடம் ராஜ்யத்தை அர்ப்பணம் செய்து நமது முன்னேரைப்போல் நாமும் வனவாஸம் செய்து தவம்புரிவோம் வா என்றுர். இதைக் கேட்ட மானினி, நாதா! ஏழாயிரமாண்டு இங்கு செய்த தர்மத்தில் லவலேசமேனும் வனப்ரதேசத்தில் செய்யக் கிடைக்குமோ? என்றுள். அம்மன்னர், வானப்ரஸ்தத்திலுள்ள மஹிமையையும் தவத்தின் சிறப்பையும் நீ அறியாய்போலும்! இங்கு ஏழாயிரமாண்டில் செய்த தர்மம் ஏழுநாள் தபஸ்ஸினுல் கைகூடுமன்றே? அன்றியும் நாம் ஆய்ந்தோய்ந்து வனம் செல்லும்வரை தென்தேயத்தவன் பொருத்திருப்பானே? இன்

றைக்கோ நாளைக்கோ யமன்வந்தால் எவரே அவனை வேண்டாமென மறுக்கக்கூடும்? எதைக்கண்டு நீ கதறினையோ? அந்நரை அவனது தூதனென அறியாயோ?

ஆதலின் நமது புதல்வன் பட்டாபிஷேகத்திற்கு புரோஹிதரைக்கொண்டு நல்ல தினத்தைப் பார்க்கப்போகிறேன். யான் வனம் செல்லுவது உண்மை. விருப்பமிருந்தால் வா; இல்லையேல் நீ இங்கே இரு! என்று அரசன் கூறினன். மானினி, ஹா! நாமொன்று நினைக்க தெய்வம் ஒன்று எண்ணியதே! நரையைக்கண்டு யான் துக்கமடைய நாட்டையே விட்டு வெளிக்கிளம்ப நாதன் நாள் பார்க்கிறாரே! இனி என் சொல் முன்னே நிற்காது! அரசனாணைப்படி நடப்பதே நமது தர்மம் என்று ஒருவாறு தானே தேறுதல் அடைந்தாள். பூபதி புரோஹிதரையும் பௌரஜனங்களையும் அமாத்யர்களையும் அழைத்தான். தனது விருப்பைக்கூறி தபோவனம் செல்ல உத்திரவு கேட்டான். அவர்கள் இங்கிருந்தே ராஜரிஷியாக தவம் செய்யலாம். தங்களையே நம்பி தனயர்களைப் போலுள்ள எங்களை விட்டு வனம் செல்வது தர்மமல்ல என்று பலவகையாலும் பார்த்திபனை இங்கே தங்கும்படி பிரார்த்தித்தனர். அரசன் உங்களது சொல்லை மதித்து யான் இங்கு தங்குவேன். யமதர்மராஜன் எவரை மதிப்பான்? அவரவர் விதி முடிந்தவுடன் வந்து விடுவானன்றோ? இதற்கு யாது வழி? என்றான். இதைக்கேட்டு அவர்கள் பதில் கூற முடியாமல் ஒன்று கூடி பல நாள் யோசித்துப் பாஸ்கரனை ஆராதித்து அரசன் ஆயுளை வ்ருத்தி செய்யவேண்டுமென தீர்மானித்தனர். அங்ஙனமே அவரவர்களும் பலவகையாகத் தவம் புரிந்து ஆதித்யனை ஆராதித்தனர். பரோபகாரமாக இவர்கள் செய்யும் தவத்தைக் கண்டு மனமிரங்கி ஸுதாமா என்னும் கந்தர்வன் அவர்களிடம் வந்து விசாலாவனம் சென்று மஹா சைலமென்ற மலையில்

தவம் புரியுங்கள்! விரைவில் விவஸ்வான் வேண்டிய வா மளிப்பான் எனக் கூறினன்.

அவர்களும் அங்ஙனமே நாட்டைவிட்டுக் காட்டுக்குச் சென்று கதிரவனை நாடிக் கடும்தவம் புரிந்துத் துதித்தனர். பாஸ்கரனும் ப்ரஸன்னமாகி நீங்கள் கோரியபடி உங்களரசன் பத்தாயிரமாண்டு ஜீவித்திருப்பான் என வரமளித்து வான்சென்றார். ப்ரகிருதிகள் பரம ஸந்தோஷம் கொண்டு ராஜவர்த்தனனைப்போற்றி ராஜ்யத்திலேயே தங்கும்படிசெய்தனர். அரசனும் அவர்கள் கொண்ட அன்பைக் கண்டு வியந்து தக்கபடி அவர்களைப் பூஜித்து அனுப்பினன். ஒரு ஸமயம் மன்னனும் மஹிஷியும் ஸந்திக்க, மஹிஷி மஹாராஜனைப் பார்த்து, நாத! பத்தாயிரமாண்டு ஜீவித்திருக்க வரம் பெற்ற தங்கள் வதனம் வாடியிருக்கக் காரணம் யாதோ? ஸந்தோஷத்திற்குரியகாலத்தில் துக்கபபடும் தங்கள் உள்ளத்தை யான் அறிய முடியவில்லை என்று கேட்க, பத்தாயிரமாண்டு யான் ஜீவிப்பது எனக்கு வரமல்ல; துன்பமேயாகும். என்பால் பேரன்புபூண்ட ப்ரகிருதிகளும் பத்தாயிரமாண்டு பிழைத்திருந்தாலல்லவோ யான் இன்பமுறுவேன். அன்றியும் அவர்கள் செய்த உதவிக்கு ஏற்ற கைம்மாறு செய்யாதவரை யான் கடனாளியன்றோ? நீயும் நமது மக்களும் நமது பரிவாரமும் இல்லாது செல்ல, யான்மட்டிலும் ஜீவித்திருத்தல் என்ன நியாயம்? என்றான்.

மானினி, அரசன் சொல்வது நியாயமே! அதற்கு யார் எவ்வகையான பரிஹாரம் தேட முடியும்? என்று ஒன்றும் சொல்லாது மௌனியாய் இருந்தாள். அரசனும் அந்த ஆதித்யனை ஆராதித்து, எல்லோரும் பத்தாயிரமாண்டு பிழைத்திருக்க வரம் பெற்றாலன்றி ஊர் திரும்புவதில்லையென வனம் சென்றான். அரசனது கடுமையான தவத்தைக் கண்டு கதிரவன் ஓராண்டுக்குள் எதிரிற்தோன்றி அவ்வரத்

தையளித்தார். குடிகளும் கோனும் உயர் குணம் வாய்ந்தமையால் ஒருவருக்கொருவர் அன்யோன்யமாகப் பல்லாண்டு வாழ்ந்து வந்தனர். இச்சரிதத்தைக் கேட்போரின் எழுநாள் பாபத்தை ஆதித்யன் அகற்றுகிறான். இதை மும்முறைப் படிப்போர் ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும், கோரிய பலனையும் பெறுவர்.

மனு வம்சம்.

ஸூர்யனிடமிருந்து மனு தோன்றினார். அவருக்கு எழு புதல்வர்கள் இருந்தனர். மிகபராக்ரமசாலியான அவர்களுக்கு தனித்தனி எழு இடத்தை அளித்து எட்டாவது புதல்வன் இவர்களைவிட சிறப்பாகப் பிறக்கவேண்டுமென்று ஆவல்கொண்டார். அதற்காக மித்ராவருண தேவரைநாடி ஓர் இஷ்டி செய்தார். ஆங்கு ஹோதாவினது குற்றத்தால் புத்ரன் பிறப்பதற்குபதிலாக இளை எனும் புத்திரிதோன்றினாள். இக்ஷ்வாகு மைத்ராவருணரைத் துதித்தார். அவர்கள் விரைவில் தேவர்கள் அருளால் இவள் புருஷனாவாள் என்று கூறினர். அங்ஙனமே இளை ஸூத்யும்நன் என்ற அரசனாக ஆனாள். வேட்டையாட ஸூத்யும்நன் ஓர் வனம் சென்று தானும் தனது பரிவாரமும் பெண்ணாக மாறியதைக்கண்டு வியந்தான். அவ்வனம் பார்வதியோடு பரமசிவன் ஏகாந்தமாக இருந்த இடம். அங்கு புருஷர்கள் வந்தபடியால் தேவிக்கு வெட்கமுண்டாக தேவியினது விருப்பத்திற் கிணங்க சங்கரன் ஆங்குவரும் ஆண்மக்கள் பெண்ணாக மாறுவர் எனக்கூறினர். ஆதலின் அங்குசென்ற ஸூத்யும்நன் மறுபடியும் இளையென்ற பெண்ணாகவே மாறினான். புதனைமணந்து புரூரவஸ் என்ற புதல்வனைப்பெற்று சந்திரவம்சத்தை விருத்திசெய்தாள்.

ப்ருஷத்ரான்

இக்ஷ்வாகு, நாபகன், ரீஷ்டன், நரிஷ்யந்தன், நாபாகன், ப்ருஷத்ரான், த்ருஷ்டன், என்ற ஏழ்வரும் மனுவின் புதல்வர்கள். ப்ருஷத்ரான் என்பான் வேட்டையாட வனம் சென்று ஓர் மிருகமுமகப்படாமல் பசிதாகத்தால் வாடி மெலிந்து நின்றான். அவனருகிலுள்ள புதரின் இடையில் ஓர் தேனு நின்றது. அதைக் கவயம் எனும் மிருகம் என்றெண்ணிக் கொன்றான். மௌலி எனும் பிராமணரது அக்நிஹோத்ர தேனு அது. அவரது புதல்வரான பாப்ரவ்யர் அதைமேய்த்து வந்தார். அரசன் அம்பெய்திட உடன் பசு கதறிக் கீழே விழுந்தது. அதைக்கண்ட பாப்ரவ்யன் மிகபரிதபித்து கோபம்கொண்டு அரசனை நிந்தித்தான். ப்ருஷத்ரான், கடிந்து பேசும் நீர் முனிகுமாரரோ? பொருமையன்றோ பிராமணரது பூஷணம்! ஏன் சூத்ரனைப்போல் கோபிக்கிறீர்? என்றான். முனிகுமாரர் கோஹத்திசெய்ததுமன்றி என்னையும் சூத்ரனென்றாய்! ஆதலால் நீ சூத்ரனாவாய் என்று சபித்தார்.

அரசன் அந்தணனைச்சபிக்க ஆரம்பிக்கும்போது முனிகுமாரன் அரசனைச் சபித்துச் சாம்பலாக்கத் தீர்மானித்தான். இதனிடையில் மௌலியெனும் இவரது தந்தை ஓடிவந்து மைந்தனையடக்கி அறியாமல் அரசன் செய்தகுற்றத்தை க்ஷமிப்பதன்றோ நம்கடமை! கோபத்தினால் நமது தவம் பாழாவதைப் பார்த்தாயா? பொறுமையன்றோ பெரும்தவம்? என்று கூறி அரசனிடம் விடைபெற்று மைந்தனுடன் வீடுசென்றார். அவ்வரசனும் அவனது ஸந்ததியும் க்ருஷன்என்ற குலப்பெயரால் வீரர்களாக உலகில் விளங்கினார்கள்.

நாபாகன்.

நாபாகன் ஓர் வைச்யக் கன்யயைக்கண்டு அவள் பால் அன்புகொண்டான். அவளைத் தனக்குத்தரும்படி அவள்

தந்தையைக் கேட்டான். வைச்யனே, நீ ராஜபுதல்வன். நாங்களோ? வைச்யர்கள். இருவருக்கும் ஸம்மந்தம் எங்ஙனம் பொருந்து மென்றான். நாபாகன் காமவிஷயமான இதில் மற்றவை குறுக்கிடல் நியாயமில்லை. யான் அவளை விரும்பு கிறேன். அவளும் என்னை விரும்புகிறாள், ஆதலால் அவளை எனக்களிக்க யாது ஆக்ஷேபம்? என்றான். வைச்யனே, ராஜகுமார! நீ சொல்வது நியாயமே! ஆயினும் உனது தந்தை யைக்கேளாமல் நீ இங்ஙனம் செய்யத்தகுமோ? என்றான், நாபாகன்,பெரியோர்சொற்படி நடக்கவேண்டுவது தர்மமே! இச்சிறு விஷயத்தில் அவர்களைக் கேட்பது அவச்யமில்லை என்று எண்ணுகிறேன்? எனக்கூறினன். எவ்வகையிலும் இளவரசனது விருப்பிற்குமாறாக நடக்க முடியாதென்றறிந்த வைச்யன், மஹாராஜனிடம்சென்று இதை அறிவித்தான். மன்னனும் ரிசிகர் முதலிய மாமுனிகளை அழைத்து க்ஷத்ரியன் வைச்யப்பெண்ணை மணப்பது நியாயமோ? என வினவினன். தபஸ்விகளும் யோசித்து மஹிஷியாக வருபவள் மன்னன் குலத்தில் பிறந்திருக்கவேண்டும். பின்னர் போகத்திற்காக வைச்யையை மணப்பது விதிக்கு மாறானது அல்ல என்ற னர். நாபாகன் இதையும் ஏற்காது அவ்வைச்யப்பெண்ணைப் பலாத்காரமாகத் தூக்கி வந்து ராக்ஷஸ விவாஹ முறையில் மணப்பேன். இதை எதிர்க்க எவருக்கேனும் தைர்யமிருந் தால் எதிரில் வரட்டுமென்றான்.

அரசன் தன் புதல்வனென்று அபிமானம் கொள்ளாமல் தர்மத்தையே முக்யமாகக்கருதி தன் புத்திரரோடு போர்புரிய நால்வகைச் சேனையையும் அனுப்பினன். நாபாகன் க்ஷணப் பொழுதில் வீறுகொண்டு அரசன் சேனை புறங்காட்டி ஓடும் படி அடித்து வெற்றிமாலை சூட்டி வைச்யப்பெண் இருப் பிடம் சென்றான். அரசன் கோபம்கொண்டு மைந்தனோடு கடும்போர்புரிய ஆரம்பித்தான். யுத்த தர்மத்தைத் தழுவி

தந்தை மைந்தனென்ற உறவைமறந்து இருவரும் எவரும் நடுங்கும்படி ஸமர்புரிந்தனர். இதனிடையில் ஆகாசத்தி லிருந்து நற்செயலாக ஓர் ஸன்யாஸி, இருவர் எதிரிலும் நின்று இவன் வைச்ய தர்மத்தைத் தழுவியவன். ஆதலால் க்ஷத்திரியனுன நீ அவனேடு யுத்தம் செய்வது தர்மமல்ல என்ருர். அரசனும் அவர் சொற்படி போரைநிறுத்தி அரண் மனைக்குச்சென்ருன். நாபாகன் அக்கன்னிகையை மணந்து, அன்புடன் அரசன் அடிபணிந்து தநயனுன எனக்குத் தாங் கள் இடும் கட்டளை யாதென்ருன். அரசனும் அவனை ஆமோதித்து வியாபாரமும், பசுபாலனமும் உனக்குரிய தர்ம மென்ருன். அங்ஙனமே அவன் ஸ்வதர்மத்தைச் செய்து வர பலந்தன் என்று ஓர் புதல்வன் அவனுக்குப் பிறந்தான்.

அவன் வியாபாரநிமித்தம் பனிமலையின் அருகே செல்ல ஆங்கு நீபர் என்ற ஓர் ராஜர்ஷியைக் கண்டான். அவரைப் பணிந்து எனது தந்தைக்குரிய ராஜ்யத்தைப் பிரித்து அவ ருக்கு அளிக்காமல் தாயாதிகளே ஆண்டு வருகின்றனர். அவர்களை ஜபித்து அந்த ராஜ்யத்தை அடியேன் அனுபவிக் கும்படியாக அருள்புரிய வேண்டும் என்று வேண்டினுன். அவர் பலந்தனுக்கு ஸகல அஸ்த்ரசஸ்த்ர மந்திரங்களையும் உபதேசித்து அருள் புரிந்தார். பலந்தன் அஸ்திரபலத்தைக் கொண்டு தன்னந் தனியே சென்று தனது சத்ருக்களை வென்று தந்தை ராஜ்யத்தைத் தனக்குச் சொந்தமாக்கினுன். தந்தையினருகே சென்று வணங்கி தாங்கள் மகுடம் தரித்து இந்த ராஜ்யத்தை ஆளவேண்டுமென்று ப்ரார்த்தித்தான். நாபாகன், நான் வைச்யவகுப்பைச் சார்ந்தவனென்று தந்தை கூறியதால் நீ தேடிய ராஜ்யத்தை நீயே ஆள்வதுதான் உசிதம் என்ருர். இதைக் கேட்டிருந்த ப்ரபை எனும் வைச்யப்பெண் ணுன நாபாகன் மனைவி, கணவனைப் பணிந்து கீழ்க்கண்ட கதையைக் கூறினுள்.

முன் ஒரு ஸமயம் ஸுதேவன் என்று ஓர் அரசன் இருந்தான். அவனது ஆப்த நண்பன் நலன் எனும் நாதிபன். இருவரும் இணைபிரியாதிருப்பர். ஒருநாள் இருவரும் கூடி வேட்டையாட வனம் சென்றனர். ஆங்கு தனித்து நின்ற நலன், ப்ரமதி எனும் மஹர்ஷியினது மனைவியைக் கண்டு ஆசை கொண்டான். அப்பெண்மணி பாதிவ்ரத்ய தர்மத்தைக்கூறி, உமது மனைவியை மற்றோர் புருஷன் விரும்பினுல் உமது நிலை என்னுகும்? என்பதை யோசித்துப் பார்த்து மஹர்ஷியின் மனைவியான என்னை மாதாவாக எண்ணித் தூரே செல் என்றுரைத்தாள். நலன் தனது போராத காலத்தினுல் அவ்வரிய சொல்லுக்குச் செவிமடுக்கவில்லை. மஹர்ஷியினது மஹிமையையும் மதிக்கவில்லை. பலாத்காரமாக அவளை அபஹரித்தான். அவள் அபயம் அபயமென்று அலரி அழுதாள். ஸுதேவனும் ப்ரமதியும் அங்கு ஓடி வந்தனர். ப்ரமதி நலனது செயலைக்கண்டு ஆக்ரஹம் கொண்டார். ஸுதேவன் நண்பனுன நலனது வேலையைக்கண்டு பேசாமலிருந்தான். ப்ரமதி இக்குற்றவாளியைச் சிக்ஷிப்பது க்ஷத்ரியனது தர்மமன்றோ? கையில் வில்லேந்திய நீ காணுதுபோல் இக் குற்றவாளியை மறந்து பேசாமலிருக்க யாது காரணம் என்று வினவினுர். ஸுதேவன், ஒருபுறம் அந்தணர் சொற்படி நடந்து குற்றவாளியைச் சிக்ஷிப்பது தர்மம். மற்றோர் புறம் எப்பாடுபட்டாவது நண்பனுன நலனைக் காப்பது ஸ்நேஹ தர்மம். இத்தர்ம ஸங்கட நிலையில் யாது செய்வதென யோசித்து, நான் ஒரு வைச்யன். க்ஷத்ரியனிடம் உமது கார்யத்தை ஸாதித்துக்கொள்ளும்என்று ப்ரமதியைக் கூறினுன்.

ஞானதிருஷ்டியால் உண்மையை உணர்ந்த முனிவர், பொய்யாக வைச்யன் என்று கூறிய ஸுதேவனை வைச்யனுகவே ஆவாய் என்று சபித்தார். அன்றியும் துஷ்டர்களைச்

சிக்ஷிக்க முனிவர்களுக்கு க்ஷத்ரியனைவிட உயர்ந்த தபோ பலம் இல்லாமலில்லை. ஆயினும், தவத்தைச் செலவு செய்ய லாகாது. க்ஷத்ரியனும் ஸ்வதர்மத்தை இழக்கலாகாது என எண்ணி உன்னை அழைத்தேன். இதோ எனது வீர்யத்தைப் பார்! பதிவ்ரதையைத் தொட்ட பாபியினது உடல் பற்றி எறியட்டும் என்றார். முனிவரது சாபாக்னியால் நலன் சாம்பலானான். ஸுதேவன் முனிவரடி பணிந்து தன் குற்றத்தைமன்னித்துச் சாபத்தையகற்றும்படிவேண்டினான். மஹர்ஷி, ஒரு நாளும் நமது சொல் பொய்க்காது. ஆதலின் சிறிது காலம் வைச்யனாக இருந்து உனது பெண்ணை ஓர் அரச குமாரன் பலாத்காரமாகத் தூக்கிச் சென்றபொழுது சாபமகன்று அரசனாவாய்! என்றார். அங்ஙனமே வைச்யனாய்ப் பிறந்த என் தந்தையினிடமிருந்து பலாத்காரமாகத் தாங்கள் என்னை அபஹரித்ததால் என்தந்தை க்ஷத்ரியரானார். முன்னும் பின்னும் க்ஷத்ரியனான ஒருவன் இடையில் சாபத்தினால் வைச்யனானதால் ஜாதி வைச்யனாகமாட்டானன்றோ? அவன் புதல்வியான யானும் வைச்யப் பெண்ணல்ல. எனது சரிதத்தையும் சொல்லுகிறேன் கேளுங்கள்.

கந்தமாதனமலையில் ஸுரதர் என்று ஓர் ராஜர்ஷி தவம் செய்து வந்தார். ஒரு ஸமயம் அனுஷ்டானம் செய்ய அவர் நதிக்கரைக்குச் சென்றார். ஆங்கு ஓர் கழுகின் முகத்தி லிருந்து கீழே விழுந்து மூர்ச்சையடைந்த கிளியைப் பார்த் தார். கருணாமூர்த்தியான அவர் உடல் துடித்தது. கண்ணி லிருந்து மாலைமாலையாகக் கண்ணீர் வடிந்தது. மெய் மறந்து கீழே விழுந்தார். அச்சமயம் அவரது உடலிலிருந்து ஓர் கன்னிகை உண்டானாள். மூர்ச்சைதெளிந்தெழுந்த முனி அப் பெண்ணைப்பார்த்து, கிருபையால் கீழேவிழுந்த என்னிட மிருந்து நீ தோன்றினமையால் உனக்குக் கிருபாவதி எனப் பெயர் என்று கூறி அவளை வளர்த்து வந்தார். அழகான

சரீரமுடைய அப் பெண் தந்தையினருகே இருந்து விருந்தினரைப் பூஜித்து வந்தாள். ஒருநாள் அகஸ்த்யாது ஸஹோதரரான அகஸ்தியரைக் கண்டு,காலகதியால் தகுந்தபடி பூஜிக்காததோடு இல்லாமல், வைச்யரைப்போல் இருக்கிறீர் என அவரைப் பரிஹஸித்தாள். உடனே அம்மஹர்ஷி,என்னை வைச்யனெனச் சொன்னமையால் நீ வைச்யப்பெண்ணாவாய் என சாபமளித்தார்.

பின்னர் தன் குற்றத்தை நினைத்து வருந்திய கிருபாவதி தன்னிடம் கிருபை செய்யும்படி அகஸ்த்யரடி பணிந்து வேண்டினாள். இயற்கையாக சாந்தகுணம் வாய்ந்த அம்மஹாமுனி என்னைப்பார்த்து, நீ ஓர் புதல்வனைப்பெற்று அவன் ராஜ்யத்தைத் தேடிவந்து உன்னிட மறிவிக்கும்பொழுது உனது வைச்யத்தன்மை நீங்கும். பூர்வஜன்ம விருத்தாந்தத்தையும் அறிவாய் என்று அருள்புரிந்தார்.

இவ்வளவு ஜன்மாந்திர கதையைக் கூறியும் நாபாகன் "தந்தை சொல்மிக்க மந்திரமில்லை" என்று ஒரே பிடிவாதமாக இராஜ்யத்தை ஏற்க மறுத்து நீயே அரசனாக இரு! உனக்கு யான் கப்பம் கட்டுகிறேன் என்றான். தந்தை உத்திரவுபடி பலந்தன் நல்லதோர் நாள் பார்த்து விதிப்படி பட்டாபிஷேகம் செய்துகொண்டான். சிற்றரசனும் மற்றவர்களும் முறைப்படி காணிக்கை செலுத்தினர். அரசனுக்குரிய ஸகல தர்மங்களையும் அனுஷ்டித்து எண்ணிறந்த யாகங்களையும் செய்தான். அன்றன்றும் அந்தணோத்தமரை யழைத்து ஸகல தானங்களையும் செய்துவந்தான். அவனுக்கோர் புதல்வன் தோன்ற, வத்ஸப்ரீதன் என்று நாமம் சூட்டினான். அவன் யௌவனப் பருவத்தில் யுவராஜனாய் இருந்து எவராலும் முடியாத கார்யங்களை ஸாதித்தான். குஜ்ரும்பன் எனும் அரக்கனைக்கொன்று ஓர் கன்னிகையை மணந்தான்.

ஸௌநந்தா

குஜ்ரும்பன் எனும் அஸுரன் பாதாளத்திலிருந்து பாரினுக்கு வர ஓர் த்வாரத்தை ஏற்படுத்திக்கொண்டான். அதன் வழியாக தினந்தோறும் பூமிக்கு வந்து பூஸுரர்களை யும் ஏனையோரையும் ஹிம்ஸித்து வந்தான். இது இங்ஙன மிருக்க, விதூரதன் என்ற அரசன் தற்செயலாக வேட்டை யாட வனம் சென்றான். அங்கு ஓர் பூத்வாரத்திலிருந்து புகை வரக்கண்டு ஆச்சர்யம் கொண்டான். அதனருகே ஓர் ஆச்ரமத்தைப் பார்த்து ஆங்குள்ள ஸுவ்ரதர் எனும் முனி வரைப் பணிந்து இஃதென்ன ஆச்சரியம்? என வினவினான். அரசே! இதையறியாமல் எங்ஙனம் நீ அரசுபுரிகிறாய்? சாரர் களைக் கண்ணாகக்கொண்டு ஆங்காங்கு நடைபெறும் அகில விஷயங்களையும் அரசன் அறிவது ராஜதர்மமன்றோ? இவ் வழியாகக் கிளம்பி ஓரரக்கன் வெளிவருகிறான். எண்ணிறந்த ஸாதுக்களை ஹிம்ஸிக்கிறான். த்வஷ்டாவினது ஸுநந்தா எனும் முஸலாயுதத்தை அபஹரித்துச் சென்றான். அதைக் கொண்டே அமரர்களை அடித்துப் பீடிக்கிறான். தேவலோ கத்திலுள்ளோருக்கே இக்கதியென்றால் அவனுக்கு மானிலத் து மனிதர் மசக மாத்திர மன்றோ? ஓர் தேவரஹஸ்யத்தை யும் உனக்குக் கூறுகிறேன், இதைக்கொண்டு அவ்வரக்கனைக் கொன்று அனைவருக்கும் நன்மை புரிவாயாக!

ஸுநந்தை எனும் ஆயுதமே இவனுக்கு இவ்வளவு பலத்தை யளிப்பது. அவ்வாயுதம் அபலைகளால் தொடப் பட்ட தினத்தில் சக்தியற்றதாய்விடும். மறுதினத்தில்தான் அதன் இயற்கையான மஹிமை தோன்றும். ஆதலின் இவ்வுபா யத்தைக்கொண்டு எங்ஙனமேனும் அவனை வென்று லோகோ பகாரம் செய்! என்றார். விதூரதன் முனிவரை வணங்கி விடைபெற்றுக்கொண்டு தன் நாடு சென்று, அமைச்சர்களை

அழைத்து ஏகாந்தத்தில் உட்கார்ந்து மந்த்ராலோசனை செய்தான். அம்முனிவர் கூறியதை மந்திரிகளுக்கு விரித்துரைத்தான். இவ்விருத்தாந்தத்தை விதூரதனது பெண்ணான முதாவதி கேட்டுக் கொண்டிருந்தாள். அதை இவர்கள் கவனிக்கவில்லை. மந்திரிகளும் அரசனும் சேர்ந்து தக்க ஸமயத்தில் அரக்கனைக் கொல்லவேண்டும் என்று தீர்மானித்துக் காலத்தை எதிர்பார்த்திருந்தனர். இதனிடையில் முதாவதி தோழிகளுடன் ஒருநாள் உத்யானத்தில் உலவி வந்தாள். குஜ்ரும்பன் இவ்வழகிய கன்யாரத்னத்தைத் தூக்கிச் சென்று அவன் அரண்மனையில் ரஹஸ்யமாக வைத்திருந்தான். விதூரதன் கன்னிகையைக் காணாது மனங்கலங்கி இவ்வரக்கன் கொண்டுசென்றதாக அறிந்து மந்திரிகளுடன் கூடி மந்திராலோசனை செய்தான். எண்ணிறந்த ஸேனையையும் ஸேனாதிபதிகளையும் ஸுநீதி ஸுமதி என்ற தன் இரு புதல்வர்களையும் அழைத்து நிர்விந்த்யை என்ற இடத்திலுள்ள பூத்வார வழியாக பாதாளம் சென்று குஜ்ரும்பனைக் கொன்று முதாவதியைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டான். அவர்களும் அங்ஙனமே பாதாளம் சென்று அரக்கனுடன் போர்புரிந்தனர். மிக பராக்ரமம்வாய்ந்த குஜ்ரும்பன் ஒரு முகூர்த்தத்திற்குள்ளாக அரசனது நால்வகைச் சேனையையும் நாசம் செய்தான். அன்றியும் பலிஷ்டர்களான ராஜகுமாரர்களோடு போர்புரிந்து அவ்விருவர்களையும் சிறைப்படுத்தினான். விதூரதன் பலநாட்களாகியும் புதல்வனும் ஸேனையும் போனவழி தெரியாமல் துக்கமடைந்து, உண்மையை அறிந்து வரும்படி சாரர்களை அனுப்பினான். அவர்கள் அங்குள்ள நிலையை அறிந்து வந்து அரசனிடம் கூறினார்கள். பார்த்திபனோ பல முறை நன்கு யோசித்துத் தான் அங்கு செல்வது தர்மமல்ல என்றுணர்ந்து, புத்ரியை மீட்டுப் புதல்வர்களை விடுவித்துவர வேறொரு வழியைத் தேடினான்.

பாதாளத்திலுள்ள குஜ்ரும்பனைக்கொன்று எனது புதல்வர்களை விடுவித்து பெண்ணை மீட்டு வரும் வீரனுக்கு முதாவதியைப் பாரிதோஷிகமாக அளிப்போம் என்று பாரெல்லாம் பறைசாற்றினன். இதைக்கேட்டு இவனது நண்பனுன பலந்தன் விதூரதனை வணங்கி யான் சென்று வருகிறேன். குஜ்ரும்பன் எத்தகையவன்? எங்குளான்? எங்ஙனம் தூக்கிச் சென்றான்? என்பதைக் கூறுமெல அரசனைக் கேட்டான். விதூரதன் வேண்டிய தகவலை அறிவிக்க பலந்தன் பாதாளம் சென்றான். ஆங்கு சென்று அஸுரர்களை நடுங்கும்படி பாதாளத்தைத் தாக்கிப் பகைவரை வென்றான். தனது ஸேனைகளை இழந்த குஜ்ரும்பன் தானே போருக்குவந்து இராப்பகலாக இராஜகுமாரனுடன் மூன்றுநாள் கடும்போர் புரிந்தான். முடிவாக ராக்ஷஸன் அபஜயமடையவே ஸுநந்தை எனும் முஸலம் அவனது நினைவுக்கு வந்தது. உடனே சுசிருசியாக அவ்விடம் சென்று அதைக் கந்த மால்யாதிகளால் அர்ச்சித்துப் பணிந்துத் துதித்து அதைக் கையிலெடுக்க ஆரம்பித்தான்.

இதனிடையில் தங்களை விடுவிக்க அரச குமாரன் ஒருவன் வந்து இராக்ஷஸனுடன் போர்புரிவதை முதாவதி அறிந்தாள். முன்னமே தான் பெண்களால் தொடப்பட்டால் அம்முஸலம் பயனற்றதாகுமெனக் கேட்டிருப்பதால், அம்முஸலத்தைத்தொழும் வ்யாஜமாக அவள் அதைத்தன் கரத்தால் பலமுறை தொட்டாள். அதனுல் அம்முஸலம் அபூர்வமான தனது சக்தியை இழந்து ஸாதாரணமான தடியைப்போல் ஆயிற்று. இதைக் கண்ட அரக்கன் மற்ற ஆயுதங்களைக்கொண்டு அரச குமாரனேடு போர்புரிந்தான். முடிவில் அரக்கனது பலம் அழிய ஆக்னேயாஸ்திரத்தால் அரச குமாரன் அரக்கனைக் கொன்றான். இக்கொடிய ராக்ஷஸனைக் கொன்றதால் தேவர்கள் 'ஆனந்தம்கொண்டு புஷ்ப

மாரி பொழிந்து ஜயவிஜயீபவ எனப் பலந்தனைப் போற்றினார்கள்.

முதாவதியையும் அவளது ஸஹோதரர்களையும் விடுவித்து வந்து, விதூரதன் அரண்மனையில் கொண்டு விட்டானவன். அவ்வரசனும் பலந்தன் செய்த பேருபகாரத்திற்குக் கைம்மாறாக முதாவதியை அவனுக்குக்கொடுத்து மணம் செய்வித்தான். இதனிடையில் பாதாளத்திலிருந்து ஆதிசேஷன் வந்து அம்முஸலத்தைப் பெற்று, ஸௌநந்தமெனும் முஸலத்தை முதாவதி தொட்டதனால் உனக்கு ஜயம் உண்டானது. ஆதலின் இம்முஸலத்தின் பெயர் என்றும் மறவாதிருக்க, முதாவதியை ஸௌநந்தை என்று அழையுங்கள் என்று கூறி தம்பதிகளை ஆசிர்வதித்து மறைந்தான். பலந்தன் பாராளும்பொழுது தர்மம் தவறாதிருந்ததால் எல்லோரும் இவனைப் போற்றினார்கள். அரசனுக்குரிய அச்வமேதம் முதலிய யாகங்களைச் செய்தான். இவனது தந்தைதாய்கள் இவன் பெருமையைக் கண்டு மகிழ்ந்து தவம் செய்ய வனம் சென்றனர்.

கனித்ரன்.

பலந்தனுக்குப் பனிரண்டு புதல்வர்கள்தோன்ற மூத்தவனான ப்ராம்சு தந்தைக்குப் பிறகு தரணியை ஆண்டான். அவனது புதல்வன் ப்ரஜாதி என்பான் ப்ரஜைகளை ஆண்டுவந்தான். யஜ்ஞம் முதலிய பற்பல தர்மங்களைச் செய்துவந்தான். பலன் ஜம்பன் எனும் இரு அஸுரர்கள் படை எடுத்து வர தனது பராக்ரமத்தினால் அந்த அரக்கர்களைக் கொன்று வெற்றிமாலை சூட்டிக்கொண்டான். ப்ரஜாதிக்குக் கனித்ரன் முதலிய ஐந்து புதல்வர்கள் தோன்றினார்கள். மூத்தவன் வயதில்மட்டிலுமல்லாது குணத்திலும் முதிர்ந்தவனாகவே இருந்தான். எல்லோரும் இன்புறவேண்டுமென்பதே அவன் கொள்

கை. எவனும் துக்கமடைய கண்ணால் பாரான். வலிந்து சென்று வேண்டிய உதவி புரிவான். ராஜ்யத்தை ஆண்டுவந்தாலும், முற்றும் துறந்த முனிவர்களது உயர் குணத்தைக் கைப் பற்றினன். தனது நான்கு ஸஹோதரர்களுக்கும் நான்கு திக்கிலும் நான்கு ராஜ்யத்தைச் கல்பித்தான்.

பிறரிடமே பேரன்பு பூண்டவன் எனில் ப்ராதாக்களிடத்தில் அன்புகொண்டவன் எனச்சொல்லவும் வேண்டுமோ? இவனது இளையோரில் ஒருவன் சௌரி என்பவன். இவனுக்கு விச்வவேதி என்று ஓர் மந்திரி இருந்தான். அவன் ஒருநாள் ஏகாந்தமாக அரசனைக்கண்டு, மன்ன!மாநிலமனைத்தையும் ஆள்வது மன்னருக்குறிய தர்மமன்றோ? நீர் உமது ஸஹோதரனிடம் அடங்கிக் கிடப்பதும், அகண்ட பூமண்டலத்தை ஓர் குடையின்கீழ் ஆளாததும் ஓர் பெருங் குறையாகும். உமது தந்தை ஒன்றாக ஆண்ட பூமண்டலத்தை ஐவரும் பிரித்துக் கொண்டீர்கள். இதனால் உமது வருவாய் குறைந்து கீர்த்தியும் குன்றி உமது பெயருக்கேற்ற சௌர்யத்தை வெளியிட அவகாசமே இல்லாமல் போகிறது. ஆதலால் எவ்வகையினாலாவது மூத்தவரான கனிஷ்ட்ரனை ஜயித்தால் உமக்கு நன்மையுண்டு எனக் கூறினன்.

மூத்த ஸஹோதரனைத் தந்தைபோல் கருதவேண்டுமென சாஸ்திரத்திற்குட்பட்டு குணமற்றவனாயினும் அவனைப்போற்றக் கடமைப்பட்டிருக்கிறேன். எனது ஸஹோதரனைப்போல் உலகெலாம் அலைந்து திரிந்தாலும் ஓர் உத்தம புருஷன் கிடைப்பது அரிது. எவருக்கும் எவ்வகையாலும் தீங்கு செய்யாப்பரோபகாரியான எனது தமயனிடம் உமக்குஎன்ன வருத்தம்? உயர்குணம் வாய்ந்த உத்தமனைப் பூஜிக்கவேண்டுமேயல்லாது அவனது ராஜ்யத்தை அபஹரிப்பதென்பது அடாத செயல் என்றான் சௌர்யன். அமைச்சன், எடுத்த கார்யத்தை முடிக்க எண்ணி அவனது சுத்த மனதை மெது

வாகக் கலந்து மாத்ஸர்யத்தை ஊட்டினுன். எனவே சௌர்ய னுமிசைந்து வர, மற்ற மூன்று ஸஹோதரர்களையும் கலந்து கனித்ரனைக் கொல்ல விச்வவேதி சதியாலோசனை செய்தான். நான்கு ஸஹோதரர்களின் புரோஹிதர்களையும் தனத்தால்வசப் படுத்தி ஓர் ஆபிசாரப்ரயோகம் செய்ய ஆரம்பித்தான். அவர் கள் செய்த ஹோமத்திலிருந்து நான்கு பூதங்கள் தோன்றி கனித்ரனிடம் கனவேகமாகச் சென்றன. கனித்ரனது சாந்த குணத்தையும் புண்யத்தையும் கண்டு அவனை அண்டமுடி யாமல் திரும்பிவந்து இக்கார்யத்திற்குக் காரணமாயிருந்த விச்வவேதியையும் அந் நான்கு புரோஹிதர்களையும் கொன்று தின்று சென்றன. ஏககாலத்தில் அம் மந்திரியும் நான்கு புரோஹிதர்களும் இறந்ததைக்கேட்டு எல்லோரும் ஆச்சர்ய மடைந்தனர். கருணைக்கடலான கனித்ரன் இவர்கள் இறந்த காரணத்தை விசாரித்து அறிந்து தன் நிமித்தமாகவே அவர் கள் இறக்க நேர்ந்ததெனக் கேட்டு ஆராத் துயரமடைந்தான். தானே பாபம் செய்ததாகக் கருதி புழுவாய்த் துடித்தான். இப்பாபத்தையகற்ற வேறுவழி காணுது தபோவனம்சென்று தவம் செய்யத் தீர்மானித்தான். தனயனை யழைத்துத் தரணி யைத் தந்து தவக்கோலம்கொண்டு தபஸ்விகள் இருப்பிடம் சேர்ந்தான். மூன்றுயாண்டு மூன்று மனைவிகளுடன் முனி வரைப்போல் மௌனியாய் இருந்து தவம் புரிந்தான். முடி வில் யாகம் செய்தோர் அடையும் உயர்லோகங்களைப் பெற் ருன். இவனது சரிதத்தைக்கேட்போர் பாபமகலும்.

கனித்ர சரித்ரம்

அக் கனித்ரனது புதல்வனுன க்ஷுபன் என்ற அரசனை அவனது துதிபாடகர்கள், நீ குணத்தில்உனது முன்னேனுன க்ஷுபனை ஒத்திருக்கிருய் என்று பாட, அவர்கள் மூலமாக அந்த க்ஷுபனது சரிதத்தை யுணர்ந்து, அவனைப்போல் பசு

வுக்கும் அந்தணனுக்கும் வரி வாங்காது தர்மபரிபாலனம் செய்துவந்தான். ஏனைய ஸாதுக்கள் எவ்வளவு தருவார்களோ அதைப்போல் இருமடங்கு உத்தம பாத்ரத்தைத் தேடித் தருவான். அவனது புதல்வன் விவிம்சன் என்பவன். தந்தையைப்போலவே தாணியைத் தர்மமாக ஆண்டு வீரஸ்வர்க்கம் சென்றான். அவனது புதல்வனே கனித்ரன் என்பவன். முன் கனித்ரனைப்போலவே இவனும் ஸகல தர்மங்களுக்கும் இருப்பிடமாய் இருந்தான். எண்ணிறந்த யாகங்களைச் செய்தான். பூமியைப் பிரித்து பூஸுரர்களுக்கு தக்ஷிணையாக அளித்தான். பின்னர் தவம் செய்து குபேரனை ஒத்த தனம் பெற்றான். அதைக்கொண்டு மறுபடியும் எண்ணிறந்த யாகங்களைச் செய்தான். இப் புண்யசீலனுக்கு புத்ர பாக்யமின்மையால் அக்னியை ஆராதித்துக் குழந்தையைப்பெற முயற்சித்தான். சுத்தமான மாம்ஸத்தைக்கொண்டு வர வனம் சென்று ஓர் மானை அடிக்க ஆரம்பித்தான். ஆங்கு மற்றோர் மான் வந்து அரசே! என்னைக்கொன்று என் மாம்ஸத்தை ஹோமம் செய்து புதல்வனைப் பெறுவீராக என்றது. அரசன், மிருகமே! நீயே உன் உடலை யளிக்கமுன் வந்த காரணம் யாது? என்று வினவ, அம் மான் கூறிற்று. வேந்தே! மைந்தனில்லாப் பாதகன் யான். பாரினில் பெறத்தக்க பாக்யத்தில் புத்ர பாக்யத்திற்கு ஈடு மற்றொன்றுண்டோ? ஆதலின் அழிந்தே தீரும் இவ்வுடலைப் புத்ரனை உண்டுபண்ணும் ஓர் யாகத்தில் வினியோகம் செய்தால் மறுபிறப்பிலேனும் மக்களைப் பெறுவனே என்று இவ்வுடலை அளிக்க முன்வந்தேன் என்றது.

இதைக்கேட்டிருந்த மற்றோர் மான் ஓடிவந்து, பார்த்திவ! அம்மானை அகற்றி என்னுடலை ஏற்றுக்கொள்ளும் என்றது. அரசன் அதையும் காரணம் வினவ, நான் பெரும் குடும்பி. நான் தனித்திருந்தபொழுது ஒரே துக்கமிருந்தது. மனைவியை மணந்தவுடன் துன்பமிரண்டாகப் பிரிந்தது. மக்க

ளைப் பெற்றவுடன் துன்பம் பலவாகப் பெருகிற்று. ஆதலின் துக்கக்கடலான இல்லறத்தை விட்டு விரைவில் நன்றுடு செல்ல, இந் நாட்டை இழக்கத் துணிந்தேன் என்றது. இவ் விரண்டும் கூறிய சொற்கள் மன்னனது மனதை மயக்கியது. இன்பத்திற்குக் காரணம் ஸந்ததி யென்ற வாதமும் சிறந்ததே. மக்களே துன்பத்திற்குக் காரணம் என்ற கூற்றும் நியாயமே. இவ்விரண்டும் முறையே இல்லறம் துறவறம் எனும் இரண்டு சிறந்த தர்மங்களைக் கற்பிக்கின்றன. இல்லறத்தில் ஈடுபட்டு வைராக்யம் பெற்றவன் எளிதில் துறவறம் சென்றுப் பேரின்பம் பெறலாம். ஆதலின் இவ்விரண்டு மானையும் கொல்லாது கொல்லாவிரதம் கொண்டே பித்ருக் கடனை அகற்றும் புத்ரனைப் பெறுவேன் என்று நிச்சயித்து, இந்திரனை நாடித் தவம்புரிந்தான். இவனது தவத்திற்கு ஈடுபட்டு இந்திரன், எனது அம்சத்தினுல் உனக்கு ஓர் குழந்தை தோன்றும் எனக் கூறி மறைந்தான்.

பலாச்வன்

இந்திரன் அருளால் பெற்ற புத்ரனுக்குத் தந்தை பலாச்வனெனப் பெயரிட்டான். குழந்தை வளர்ந்து உரிய காலத்தில் அரசனுக்கேற்ற கார்யங்களைச் செய்து வந்தான். இளமைப்பருவத்திலேயே இவனது வீர்யத்தைக் கண்டு ஸந்தோஷங்கொண்ட தந்தை இவனிடம் ராஜ்யத்தை ஒப்படைத்தான். இவனும் தர்மநீதி தவறுது ராஜ்ய பரிபாலனம்செய்து திக்விஜயம்செய்ய ஒவ்வோர் திக்காகக் கிளம்பினுன். எல்லோரும் இவனது பராக்ரமத்தைக் கண்டு பயந்து காலில் விழுந்துக்கப்பமளித்து தங்கள் ராஜ்யத்தைக் காத்துக்கொண்டனர். எல்லோரையும் ஜயித்து ஏக சக்ராதிபதியாய் பலாச்வன் பாரினைப் பரிபாலித்து வந்தான். இங்ஙனம் பலகாலம் செல்ல இவனிடம் தோல்வியடைந்து கப்பம்கட்டும் சிற்ற

ரசர்கள அனைவரும் ஒன்று கூடினர். எங்ஙனமேனும் இவனைக் கொன்றாலல்லது தங்களது அரசு நிலைத்து நிற்காதென நிர்மானித்து இவன் எதிர்பாராத ஸமயத்தில் எல்லோரும் ஒன்றுகூடி இவனைத் தாக்கினர். பலாச்வன் தனது படையைக்கொண்டு பகைவர்களைக் கொன்றான். என்றாலும் இவனது சேனைகள் அழிந்ததால் தன்னந்தனியே நின்று முகத்தில் இரு கரங்களையும் வைத்து என் செய்வதென யோசித்துப் பெருமூச்சு விட்டான். அக்காற்றிலிருந்து கைவிரல் வழியாக ரதகஜதுரகபதாதிகள் எனும் நால்வகைச் சேனைகள் வந்தவண்ணமாகவே இருந்தன. அரசன் இப்படைகளைக் கொண்டு பகைவர்களைக்கொன்று வெற்றி பெற்றான். இவனது கையிலிருந்து ஸேனைகள் உண்டானதால் இவனுக்குக் காந்தமன் எனக் காரணப் பெயர் வழங்கியது.

ஒரு ஸமயம் வீர்ய சந்திரன் எனும் அரசன் தனது புத்ரிக்கு ஸ்வயம்வரம் என்று செய்தியனுப்ப ஏனைய அரசர்களைப்போல் காந்தமனும் அங்கு சென்றான். இவனது வீர்யத்தையும் ஸௌந்தர்யத்தையும் கண்டு,வீரா என்ற ராஜகுமாரி இவனையே மாலையிட்டாள். மற்ற அரசர்கள் மாத்ஸர்யம் கொண்டு இவனோடு போர் புரிந்தனர். காந்தமன் இந்திரனது அம்சமாதலால் இச்சத்ருக்களை முறித்துப் புறங்காட்டி ஓடும்படி அடித்து, வெற்றியுடன் விவாஹமாலையும் சூட்டப்பெற்றான். இப்புதிய தம்பதிகள் தர்மவிரோதமில்லாமல் ஸகல போகங்களையனுபவித்து ஓர் ஆண் குழந்தையைப்பெற்றனர்.

அவிக்ஷிதன்

இக்குழந்தை பிறந்தவுடன் அரசன் இவனது ஜாதக பாவங்களை விளக்கும்படி ஜோதிஷர்களைக் கேட்டான். அவர்கள் சுக்ரனும் குருவும், பிறந்த லக்னத்தைப் பார்ப்பதால் சக்ரவர்த்தியாயிருப்பதுடன்கூட ஸகல தர்மங்களையும் பரிபா

ஸிப்பான் இவன் என்று கூறினர்கள். அதற்கு தந்தை அவிக்ஷிதன் என பெயரிட்டார். அங்ஙனமே வயது முதிர்ந்ததும் அதி தீரனுகவும் சாந்தனுகவும் இருந்த அவிக்ஷிதனைக் கண்டு பெற்றோரும் மற்றோரும் ஸந்தோஷித்தனர். இவனுக்கு இளமையிலேயே இல்லற தர்மத்தில் வெறுப்பு தோன்றியது என்ருலும் ஸ்வதர்மமென க்ஷத்ரியப் பெண்கள் ஸ்வயம்வரத்திற்குச் சென்று மற்ற அரசர்களுடன் போர் புரிந்து பெண்ணைத் தூக்கிவருவான். அப்பெண் யாரை விரும்பினுளோ ? அவனுக்கு அவளைக்கொடுத்து விவாஹம் செய்து வைப்பான். இங்ஙனம் பல ஸ்வயம் வரத்திற்குச் சென்று அளவற்ற அரசர்களை முதுகுகாட்டி ஓடும்படி செய்தான்.

ஒரு ஸமயம் விசால தேசத்து அரசனுடைய பெண்ணுன வைசாலினீ என்பவளுக்கு ஸ்வயம் வரம் நடந்தது. பலதேசத்தாசர்கள் அங்குவந்து குவிந்தனர். அவிக்ஷிதனும் அங்கு சென்று வழக்கப்படியே அப்பெண்ணைத் தூக்கிச் சென்ருன். அச்சமயம் ஆங்கு வந்திருந்த அரசர் அனைவரும் ஒன்று கூடி பல முறைத்தங்களைப் பரிபவப்படுத்திய அவிக்ஷிதனை தோல்வியடையும்படி செய்ய வேண்டுமென்று பெரு முயற்சி செய்தனர். பல தேசங்களிலிருந்தும் நால்வகைச் சேனையும் திரட்டி ஒன்றுகச் சேர்த்து இவனைச் சண்டைக்கிழுத்தனர். இவன் தனியாயும் பால்யமாயும் இருந்தும் கூட எவரையும் மதிக்காமல் தைர்யமாய் அனைவருடனும் போர்புரிந்தான். ஒருவனேடு பலர் போர்புரிவது யுத்த தர்மமல்ல என்ருலும் அவனிடமுள்ள த்வேஷத்தினுல் அனைவரும் ஒன்றுசேர்ந்து இவனை எதிர்த்தனர். நான்குபுறத்திலும் சூழ்ந்துகொண்டு ஒன்றன் பின் ஒன்றுக பல்லாயிரம் பாணங்களை வர்ஷித்தனர். ஒருவனுக இருந்து எவ்வளவுகாலம் எதிர்க்கமுடியும்? முன்னும் பின்னும் பாணம் வந்து எதிர்க்க

அரசகுமாரன் மூர்ச்சித்துக் கீழேவிழுந்தான். இதுதான் தக்க ஸமய மென்றெண்ணி நீதியையும் காருண்யத்தையும் மறந்து அவ்வரசர்கள் அவிக்ஷிதனைக்கட்டி காராக்ரஹத்தில் அடைத்தனர்.

வைசாலினியோ, மற்ற அரசர்களை மதியாது அவிக்ஷிதனிடமே ஆசைகொண்டு அவனையே மணப்பேன் என்றாள். வத்ஸே! பல அரசர்களது கோபத்திற்குக் காரணமான அவிக்ஷிதனை நீ விரும்புவது நியாயமோ? சீரிலும் செல்வத்திலும் அவனைவிட ஆயிரம் மடங்கு அதிகமான அரசகுமாரன் அவனியில் இல்லையோ! தோல்வியுற்ற இவனை விரும்புவது நீதியோ? என்று பலவாருக பெண்மனதைத் திருப்ப விசாலராஜன் வேண்டிய முயற்சிசெய்தான். அவையெல்லாம் அக்கன்னிகையின் காதிலேறவில்லை. விசாலராஜன் ஜோதிஷர்களை அழைத்து இன்றையதினம் விவாஹத்திற்குரிய சுபதினமா? என பார்த்துக்கூறுங்கள். வைசாலினியை வேறுவரனுக்களித்து விவாஹத்தை முடிப்பேன் என்றான். அவர்களோ இத்தினத்தில் பல விக்னங்கள் நேர்ந்ததால் இன்று விவாஹத்தை நிறுத்தி வேறுநாளில் செய்வதே விசேஷமென்றார்கள். இதனிடையில் கரந்தமனும், வீர்யையும் தமது வீரபுத்ரனுன அவிக்ஷிதன் சத்ருக்களால் கட்டப்பட்டுக் கிடக்கிறான் எனக்கேட்டு ஆராத்துயரமடைந்தனர். ஆயினும் வீரத்தாயான வீர்யை பலருடன் எதிர்த்துநின்ற வீரசிம்மனுன தன் புதல்வனைப்போற்றி, மற்ற அரசர்களை ஜயித்து புத்ரனை மீட்கவேண்டியது தமது கடமையென தன் பதியினிடம் விஜ்ஞாபநம் செய்தாள்.

அங்ஙனமே கரந்தமன் பெரும்சேனையுடன் புறப்பட்டு விசாலநகரம்சென்று அந்த க்ஷத்ரியர்களோடு போர்புரிந்தான். மூன்று தினத்தில் அம்மன்னவர்களை ஜயித்து விசால ராஜனுல் வரவேற்கப்பட்டான். உடனே அவிக்ஷிதனை விடுவித்து

விசாலன் தன் பெண்ணின் விருப்பப்படி அவனை மணந்து கொள்ளும்படி வேண்டினான். அரசகுமாரனோ? விவாஹத்தில் விருப்பமிருந்தால் முன்னர் ஜயித்துவந்த பெண்களை மணந்துகொண்டிருக்க மாட்டேனா? இவளையும் மற்ற எவளையும் நான் மணம் புரிந்துக்கொள்ளப் போவதில்லை என்றுக் கூறினான். இதைக் கேட்ட விசாலாதிபதி வைசாலினியைப் பார்த்து, குழந்தாய்! அரசகுமாரனது சொல்லைக் கேட்டாயா? இப்போதாவது வேறொரு ராஜகுமாரனைத்தேடி மணம் புரிந்துக்கொள் என்றான். வைசாலினி, தந்தையே! தான் தோல்வியடைந்ததால், இங்ஙனம் இளவரசன் கூறியிருப்பர். பலருடன் எதிர்த்துநின்ற அவரது வீர்யத்தை யான் கண்ணாரக்கண்டேன். பல அரசர்கூடி அதர்மயுத்தம் செய்தனர். அதில் அடைந்த தோல்வி தோல்வியாகாது. ஆதலின், என்னை மணந்துகொள்ளும்படி மற்றோர் முறை அவரை பிரார்த்தியுங்கள் என்றாள். அங்ஙனமே விசாலன் வேண்டினான். இப்பெண்ணின் பிடிவாதத்தைக்கண்ட காந்தமனும் புதல்வனைப்பார்த்து அக்கன்னியின் காமனையைப் பூர்த்திசெய் என்றார்.

அவிக்ஷிதன் அருமைத் தந்தையே! உமது புதல்வனாகப் பிறந்து இதுவரை யான் மறந்தும் உமது ஆணையை மீறியதில்லை. இனியும் தங்களது ஆக்ஞையை மீறப்போவதில்லை. ஆதலால் அக்கன்னிகையை மணக்கும்படி எனக்கு ஆக்ஞை இடவேண்டாமென்று பன்முறை பணிந்து வேண்டினான். அக் காந்தமனோ, கன்னிகையை நோக்கி அன்ய புருஷனை நீ வரித்துக்கொள் எனக்கூறி புத்ரருடன் தன் ஊருக்குத் திரும்பினார். வைசாலினி ஒரேபிடிவாதமாக அவனை மணப்பது அல்லது இறப்பது என்ற முடிவுக்குவந்தாள். தந்தையிடம் விடைபெற்று தபோவனம் சென்று அடுத்த பிறவியிலாவது அவிக்ஷிதனே எனக்குப் பதியாகவரக்கடவன் என்று

கூறிக் கடுந்தவம் புரிந்தாள். மூன்று மாதம் உணவின்றி வெயிலில் வாடி மழையில் நனைந்து காயக்லேசம் செய்தாள். உடல் மெலிந்து உயிர் வாடி இனி ஜீவித்திருக்க வேண்டாமென எண்ணி உயிரைவிட ஆரம்பித்தாள். அச்சமயம் தேவர்கள் ஒன்று கூடி இவளது மன உறுதியைக் கண்டு மகிழ்ந்து ஓர் தூதனை அனுப்பினார்கள். அவன் இவள் எதிரில் தோன்றி, வைசாலினீ! ஸாஹஸம் செய்யாதே! ஆத்மஹத்தி மிகப்பாபகாமான தென்பதை யறியாயோ? உனது வயிற்றில் சக்ரவர்த்தி தோன்றப் போகிறான்! அயச்சங்கு எனும் அஸுரச்ரேஷ்டனைக் கொல்லப்போகிறான். தர்ம பரிபாலனம் செய்து யாகத்தினால் தேவர்களை ஸந்தோஷப்படுத்துவான், என்று கூறினார். அவள் நீர் சொல்வது உண்மையோ? தேவ வாக்கு வீணாகாதென கேட்டிருக்கிறேன். யான் இப்பிறவியில் அவிக்ஷிதனையின்றி வேறு எவரையும் மணப்பதில்லை என்று சபதம் செய்தேன். அவரோ என்னையும் வேறு எப்பெண்ணையும் மணப்பதில்லை யென்று வீரவ்ரதம் கொண்டிருக்கிறார். இஃதிங்ஙனமிருக்க எங்ஙனம் என்னிடம் சக்ரவர்த்தி தோன்றுவது? என்றாள். தேவதூதன் உனது தவத்தால் நாடிய பொருள் கைகூடும். அஞ்சாதே! தேகத்யாகம் செய்யாதே என்று கூறி மறைந்தான்.

அவிக்ஷிதனது தாயான வீரைபுதல்வனைப்பார்த்து உன் தந்தையின் ஆணையைப்பெற்று கோசத்திலுள்ள பாதிதனத்தைத் தக்ஷிணையாக அளித்து ஓர் வ்ரதம்செய்யப்போகிறேன். நீயும் அதற்கு உன்னால் ஆன உதவிபுரிய வேண்டுமென்றாள். பித்ருபக்தனான புதல்வன் தாயின் அடிபணிந்து பெற்றோரது ஆணையை என்றைக்கேனும் யான் மீறியதுண்டோ? தந்தையோ தனமளித்தார். நீயோ உபவாஸம் செய்யப்போகிறாய்! இதுஸமயம் சரீர உதவிபுரியாத புதல்வன் இருந்தென்ன? இறந்தென்ன? என்னால் ஸாத்யமான கார்ய

மாயின் ஸத்யமாகச் செய்து முடிப்பேன் என்று பிரதிக்ஞைசெய்தான். இதைக்கேட்டு போானந்தம்பெற்ற தாய் அங்ஙனமே புரோஹிதர்களை அழைத்து இவ்விரதத்தின் முடிவில் யார் எதைக்கேட்டாலும் இல்லை என்று சொல்லாது கேட்டதைக் கொடுப்பதென்ற ஸங்கல்பத்துடன் உபவாஸத்தை ஆரம்பித்தாள். குபேரனையும் நவநிதிகளையும் மகாலக்ஷ்மியையும் முறைப்படி பூஜித்தாள்.

காந்தமனது மந்திரி ஏகாந்தமாக அரண்மனையில் வீற்றிருக்கும் அரசனைக்கண்டு அடிபணிந்து விஜ்ஞாபனம் செய்துக்கொண்டான். வேந்தே! உங்களது மைந்தன் விவாஹத்தில் வெறுப்புகொண்டு ப்ரஹ்மசாரியாய் இருக்கிறான். தங்களுக்கோ அதிகவயதாய் விட்டது. நமது பலஹீனமான நிலையைக்கண்டு பகைவர்கள் நமது ராஜ்யத்தைக் கொள்ளை கொள்வர். ஆதலின் எங்ஙனமேனும் உமது புதல்வன் மணம்புரியும் வழியைத்தேடவேண்டும் என்றான். அதற்கு யாதுபதில் கூறுவதென்று அரசன் யோசித்துக் கொண்டிருக்கையில் வீரையின் விரதம் முடிந்து அவளது புரோஹிதர் அரண்மனை வாசலில் வந்துநின்று யார் எதை வேண்டுமானாலும் கேட்கலாம் என்று உத்கோஷம்செய்தார். அதைத் தழுவி அரச குமாரனும் அன்னையின் வ்ருதத்தில் யார் எதைக் கேட்டாலும் தருகிறேன் என்று உத்கோஷம் செய்தான்.

இதுதான் தக்க ஸமய மென்றெண்ணி அரசன் அமாத்யனுடன் அரண்மனை வாயிலை அடைந்து "எனக்கு ஒன்று வேண்டும்" என்றான். இதைக்கேட்டு ஆச்சர்யமடைந்த அரச குமாரன், தந்தையே! இது என்ன விந்தை! தாங்கள் கேட்பது! யான் தருவது என்பது என் பாக்யமே! கூசாமல் கேளுங்கள். தந்தேன்! தந்தேன்! என்றான். அரசன் உனது புதல்வன் முகத்தை எனக்குக்காட்டு. அதை யான்

காணவேண்டுமென்றான். இதைக்கேட்டு திடுக்கிட்ட அரச குமாரன் பிரம்மசாரிக்குப் புதல்வன் பிறப்பதும் உண்டோ ? அன்னையின் பொருட்டு செய்த பிரதிஜ்ஞையை மீறுவதும் நியாயமல்ல. யான் வெறுத்த விவாஹத்தை ஏற்பதும் தர்மமல்ல. இச்சங்கடநிலையில் என்செய்வேன் ? எங்குசெல்வேன்! யாரைக்கேட்பேன் ! என்று தனக்குத் தானே யோசித்து வருந்தினான். தனது விருப்பைவிட தாயிக்களித்த சொல்லே மேலானதென்ற முடிவுக்கு வந்தான். விரைவில் ஈசனருளால் அங்ஙனமே செய்கிறேன் என்று தந்தைக்கு வாக்களித்தான்.

ஒரு ஸமயம் அவிக்ஷிதன் வேட்டைக்காக காட்டை யடைந்தான். ஆங்கே அபயம்! அபயம் ! என்ற அபலையின் தீனநாதத்தைக்கேட்டான். அஞ்சேல் ! அஞ்சேல் ! என அருகில் ஓடினான். அதிரூபலாவண்யம் வாய்ந்த ஓர் கட்டழகியைக்கண்டான். நீயார்? உனக்கு என்ன ஆபத்து? என கேட்டான். அவள் யான் விசாலனது பெண்ணான வைசாலினீ. எனது கணவன் அவிக்ஷிதன் எனும் அரசகுமாரன். அவனை மணந்துகொள்ள யான் தவம்புரிகிறேன். இச்சமயத்தில் தனுவின் புதல்வனான த்ருடகேசன் என்பவன் அனாதையைப்போல் என்னை ஹிம்சிக்கிறான். அக்கரந்தம புதல்வன் எங்குசென்றானோ ? இதை அவன் கண்டால் க்ஷணமேனும் பொறுத்திரான் என்றாள். அவிக்ஷிதன், இதென்ன மாயையோ ? கனவோ ? எனது மனைவி என்று கூறுகிறாள். நான் எவளையும் மணக்கவில்லை. என்னையே மணப்பதாக தீர்மானித்த வைசாலினியும் தபோவனம்சென்று உயிரை இழந்தாள் என அறிகிறேன்.

யாராயினுமாகட்டும், ஆபத்திலுள்ளோரைக் காப்பதே நமது கடமை, என்று அவ்வஸுரனோடு கடும்போர்புரிந்து அவனைக்கொன்றான். பூமாரிபொழிந்து தேவர்கள் இவனருகே வந்து அவனது வீரச்செயலைக்கொண்டாடி உனக்கு யாது

வரம்வேண்டும் என வினவினர். என் தந்தையிடம், என் புதல்வன் முகத்தைக் காட்டுவதாகக் கூறினேன். அச் சொல்லை நிறைவேற்றவேண்டும். இதுவரை எவளையும் விவாஹம் புரியாதிருந்தேன். இனி எங்ஙனம்? எவளிடம்? குழந்தை உண்டாகும்? எனக்கேட்டான். தேவர்கள் இவளே வைசாலினீ. இவள் மூலமாக உனது இஷ்டம் நிறைவேறும் என்று கூறி மறைந்தனர். அருகிலுள்ள வைசாலினி, அவிக்ஷிதனது அடியைப்பணிந்து, ஆர்ய? அடியாள் தங்களையே பதியாக வேண்டி தவம்புரியும் ஸமயத்தில் ஒருநாள் கங்காஸ்நாநம் செய்யச்சென்றேன். ஆங்கோர் கிழப்பாம்பு என்னைப்பாதாளத்திற்கு எடுத்துச் சென்றது. ஆங்குள்ளோர் உலகம் போற்றும் உமக்கு யான் பத்நியாகப்போவதை உணர்ந்து தக்கமரியாதையுடன் எனக்கு அன்ன வஸ்திரமளித்து அத்புதமான நாகரத்னங்களைப் பூஷணமாகப் பூட்டினர். என்னை இவ்விடத்திற்குக் கொண்டு வரும்பொழுது எங்களது குமாரர்களுக்கு எப்பொழுதேனும் ஆபத்து நேரிட்டால் நீ அபயம் அளித்துக் காக்கவேண்டுமென பிரார்த்தித்தனர்.

அங்ஙனமே ஆகட்டுமெனக்கூறி யான் மறுபடியும் இங்கு தவம்புரிந்தேன். தெய்வச் செயலாக என்னைக் கொல்ல வந்த அரக்கனை அழித்து அடியாளையும் ஏற்றுக்கொண்டு நீர் விதிப்படி காந்தர்வ விவாஹம் செய்துகொள்ள இதுவே தருணம் என்றாள். இதைக்கேட்ட அரசன் தந்தை தாய் உத்திரவின்றி தானேமணப்பது தர்மமோ என சங்கிக்க ஆங்கு ஓர் அபூர்வமான கந்தர்வன் வந்து சேர்ந்தான். அரசே! இவள் பாமிநி எனும் எனது மகள், இவளது இளமையில் விளையாட்டுத் தன்மையால் அகஸ்த்யரை அவமதித்தாள். அவர் மானிடப் பிறவியைப் பெறுவாய் என சபித்தார். அவளே இவள். ஆதலின் என் பெண்ணை நீர் மணந்துக் கொள்ளும் என்றுகூறி விதிப்படியே விவாஹத்தைப் முடித்தான்.

பெண்ணையும் மருமகனையும் கந்தர்வ லோகத்திற் கழைத்துச் சென்றானவன். ஆங்கு அத்புதமான ஆடல் பாடல்களையும் ஏனைய ஸுகங்களையும் அனுபவித்து வந்தார்களிவர்கள். இத் தம்பதிகளுக்கு ஓர் ஆண் குழந்தையும் பிறந்தது, கந்தர்வன் நினைத்தவுடன் தும்புரு ரிஷி வந்து அக்குழந்தைக்கு ஜாதகர்மம், நாமகரணம், முதலியவற்றைச் செய்துவைத்தார்.

அக்குழந்தை பிறந்தபொழுது மந்தமாருதம் வீசியதால் மருத்தன் என்றே அதற்கு பெயர்வைத்தனர். பிறகு அக்கந்தர்வனது உத்திரவுபெற்று மைந்தனுடனும் மனைவியுடனும் தன் நாட்டுக்குவந்தான். அவிக்ஷிதன் தந்தையை வணங்கித் தங்கள் விருப்பப்படியே புத்திரனைத் தங்கள் மடியில் அளித்தேன் என்றான். இவனது வரவைக்கண்டு பௌரஜனங்கள் பரம ஸந்தோஷமடைந்து அந்நாளைத் திருநாளாகக் கொண்டாடினர். விவாஹத்தில் வெறுப்புகொண்ட தன் மகனும் மனைவியை மணந்து மகனையும் பெற்றான் எனக்கேட்டு மன்னன் மட்டில்லா மகிழ்ச்சி கொண்டான்.

மருத்தன்.

இளமையிலேயே இவ்வரச குமாரன் வீரருக்கேற்றபடி விளையாடிவந்தான். இவனது க்ரீடை பெற்றோருக்கும் மற்றோருக்கும் பேரானந்தம் விளைவித்தது. பெரியோரை யடுத்துப் பல கலைகளைப்பயின்று வந்தான். இவனது பாட்டனான கரந்தமன் தவம்செய்ய வனம் செல்லக்கருதி புத்ரனை அழைத்து ராஜ்யத்தை ஏற்றுக்கொள் என்றான். அவன் பல அரசர்கள் என்னை ஜயித்து சிறைகொண்டபொழுது தாங்களே என்னை மீட்டுவந்தீர்கள். தாங்கள் ஜயித்த ராஜ்யத்தை நான் ஆளுவது பேடித்தனமாகும். ஆதலின் ராஜ்யத்தை விரும்பேனென்றான்.

கரந்தமன், தந்தையே தநயனுவதாக ச்ருதி சொல்கிறது.

எனது ஜயம் உனது ஜயமே ஆகும். ஆதலின் அரசனுக்குரியதான அரசாங்கத்தை ஏற்று அவனியை ஆண்டுவா என்றார். அவிக்ஷிதன், தாங்கள் என்ன கூறினாலும் அவமானமடைந்த நான் ராஜ்யத்தை விரும்பேன் என்றுகூறி மறுத்தான். தக்கவயது வந்தவுடன் இருவருமாகக்கூடி மருத்தனுக்கு மகுடாபிஷேகம்செய்து வைத்தனர். ஆயிரமாண்டு தவம்புரிந்து கரந்தமன் இந்திரலோகம் சென்றான். அவனுக்குப் பிறகு அவன் மனைவி நூறாண்டு தவம் புரிந்து பதிலோகம் சென்றாள்.

மருத்தன் பிருஹஸ்பதியின் ஸஹோதரரான ஸம்வர்த்தரைப் புரோஹிதராகக்கொண்டு எண்ணிறந்த யாகங்களைச் செய்தான். இவனது ராஜ்யமெல்லாம் தக்ஷிணையாகக் கொடுக்கப்பட்டது. இதைக்கண்ட ஸம்வர்த்தர் ஸுவர்ணமுஞ்சமெனும்மலையின் கொடிமுடியைத் தவவலியால்கொண்டுவந்து கொடுத்தார். அதைக்கொண்டுமவன் பல யாகம் செய்துவந்தான். ஒருநாள் இவனது பிதாமஹி அனுப்பியதாக ஒரு மஹர்ஷி இவனருகே வந்தார். மருத்த! நீ முன்னோரது வழியைப் பின்பற்றி ராஜ்யத்தைப் பரிபாலிக்கவேண்டும். உனது ஆளுகையில் பாதாளத்திலிருந்து கொடிய ஸர்ப்பங்கள் வந்து எழு முனிகுமாரர்களைக் கொன்றன! தீர்த்தங்களை விஷமயமாக்குகின்றன? யக்ஞத்திற்காக பாவனமாய் வைக்கப்பட்டிருக்கும் ஹோமத்ரவ்யத்தில் மலஜலம் கழிக்கின்றன! எப்பாடு பட்டாவது இவர்களைக்கொன்று முனிவர்களைக்காப்பது உன் தர்மம். ராஜ்யம் ஸுகத்திற்காக ஏற்பட்டதல்ல. இங்கு மிகக்லேசங்களை யனுபவித்து மறுமையில் பேரின்பம் பெறவேண்டும். தக்கபடி ஸாதுக்களை ரக்ஷிக்காவிடில் நரகத்தை யடைவாய்! இது உன் மூதாதையின் ஆணை. ஆதலின் அவ்வாக்ஞையை நிறைவேற்று எனக்கூறி முனி வனம் சென்றார்.

மருத்தன் அம்முனி குமாரர்களைப் பிழைப்பிக்கவும்

கொடிய ஸர்ப்பங்களைக் கொல்லவும் பிரதிஜ்ஞை செய்துகொண்டான். மிக பயங்கரமான யமாஸ்திரத்தைப் பாதாளத்தை நோக்கி ப்ரயோகம் செய்தான். ப்ரளயகால அக்னியைப்போல் மிக பயங்கரமாய் வரும் அக்னி ஜ்வாலையைக் கண்டு நாகர்கள் பயந்து பாதாளத்தைவிட்டு மூலைக்கு ஒருவராய் ஓடினார்கள். மருத்தனுடைய தாய், முன்னம் தங்களுக்கு அபயப்ரதானம் செய்தது அவர்கள் நினைவுக்கு வந்தது. உடனே அங்கு சென்று அவளைச் சரணமடைந்தனர். அவள் தன் கணவனைப் பார்த்து, நாத! யான் பாதாளம் சென்றபோது எனக்கு அவர்கள் செய்த பேருதவியைக் கண்டு பெருமகிழ்ச்சி பெற்று ஆபத்து வந்தபோது அவர்களைக் காப்பதாக வாக்களித்தேன். ஆதலின் இது ஸமயம் தாங்கள் அவர்களைக் காக்கவேண்டும் என்று பிரார்த்தித்தாள். இதைக் கேட்ட அரசன் மற்றவராயின் நாம் போர் புரிந்து ஸர்ப்பங்களைக் காக்கலாம். நமது புதல்வனன்றோ முனி குமாரர்களைக் காக்க எண்ணி இக்கொடிய ஸர்ப்பங்களைச் சிக்ஷிக்கக் கிளம்பியிருக்கிறான். அவன் செய்வதும் தர்ம மாதலால் அதை எங்ஙனம் தடுப்பது? என்றார். நாம் சொன்ன சொல்லை நிறைவேற்றுவதும், உயிர்களைக் காப்பதும் பெரிய தர்மமன்றோ? நம் புதல்வனையும் ரக்ஷிக்கவேண்டும். சரணமடைந்த ஸர்ப்பங்களையும் காக்கவேண்டும் என்றனவள். அவிக்ஷிதன் தனயனான மருத்தனிடம் வந்து நீ போட்ட அஸ்திரத்தை உபஸம்ஹாரம் செய் என்றார். மருத்தன் தந்தை தாய்களைப் பணிந்து இவ்வேழு முனிகுமாரர்களைப் பிழைப்பிக்கவே ஸர்ப்பங்களோடு போர் புரிகிறேன். தந்தையாயினும் தருமத்தைத் தடுப்பது நியாயமோ? என்றான். அவிக்ஷிதன், மைந்த! சரணாகதரை ரக்ஷிப்பதென்பது பெரும் தர்மமன்றோ? ஆதலின் என் தர்மத்தை நான் செய்வேன். நீயும் தர்மமென்றெண்ணினால் அங்ஙனமே செய்.

நீ எனது புதல்வனே யானாலும் இவ்விஷயத்தில் சத்ருவாய் விட்டாய்.

சத்ருவைக்கொன்று சரணாகதனைக்காக்க சாஸ்த்ரப்படி சஸ்திரத்தைக் கையிலெடுத்தேன். நீயும் அங்ஙனமே தந்தை யென்பதை மறந்து தர்மத்தை நினைத்து என்னைக்கொன்று முனிகுமாரர்களை எழுப்பு! அல்லது முடியுமானால் மகன் என்பதை மறந்து உன்னைக்கொன்று ஸர்ப்பங்களை யான் மீட்கிறேன் என்றான். அப்படியே தந்தை புதல்வனைக் கொல்ல, யமாஸ்திரத்தை எய்தினர். மிக கோரமாய் எதிரில் வரும்அஸ்திரத்தைக்கண்டு மருத்தன், அருமைத்தந்தையே! ஆரகக்கேற்றபடி விரவ்ரதம் கொண்டீர்! குற்றமற்ற என்னைக் கொல்லத் துணிந்ததுதான் விந்தை! என்று கூறி, யானும் அஸ்திர சஸ்திரங்களை அறிவேன். எனது கைவரிசையையும் வீர உலகம் காணட்டும் என்று கூறி, கடுமையாக சரவர்ஷம் செய்தான். பயங்கரமாக இருவருக்கும் போர்நடக்க, பார்க்கவர் முதலிய மஹர்ஷிகள் இவ்விருவர் எதிரிலும் தோன்றி, போதும்; போரை நிறுத்துங்கள். அவிக்ஷிதா! காலாஸ்திரத்தை உபஸம்ஹாரம் செய்! என்ன ஸாஹஸம் செய்தாய்? க்ஷத்ரிய தர்மம் கடுமையானதெனினும் புதல்வனைக் கொல்வது நியாயமோ? முனிகுமாரர்களை எழுப்பவன்றோ இப்போர் நிகழ்ந்தது. எங்களது தவ வலிமையால் அவர்களை எழுப்புகிறோம். மருத்தா! நீயும் ஸர்ப்பங்களைநாடி எய்தபாணத்தை உபஸம்ஹாரம் செய், என்று கூறி முனிகுமாரர்களை எழுப்பினார்கள். தந்தையும் தனயனும் தத்தம் அஸ்திரங்களை உபஸம்ஹாரம் செய்தனர். கரந்தமனது மனைவியான பாமினி எனும் மருத்தனது பிதாமஹி அங்குவந்து தனயனையும் பேரனையும் கொண்டாடி யானே மருத்தனைத் தூண்டினேன். இருவருடைய கார்யமும் செவ்வனே முடிந்தது. யான் சென்று வருகிறேன். தர்மம் தவராது தரணியைப் பல்லாண்டு

ஆளுங்கள் என்று கூறி தபோவனம் சென்றாள். மருத்தன், வைதர்ப்பி, ப்ரபாவதி, ஸுகேசி, கைகேயி, ஸைரந்திரி, வபுஷ்மதீ, முதலிய பெண்களை மணந்தான். அவனுக்கு அவர்களிடம் பதினெட்டுப் புதல்வர்கள் பிறந்தனர். அவர்களில் மூத்தவன் நரிஷ்யந்தன் என்பவன்.

நரிஷ்யந்தன்.

இவ்வரசன் தன் முன்னோர்களது சரிதத்தைப் பல முறைக்கேட்பான். அவர்கள் ஆண்டுவந்த முறையை அறிந்து அதை அனுஸரிக்க ஆவல் கொள்வான். பற்பல யாகங்களைச் செய்துவந்தான். ஆதலால் இவனது நாட்டில் ஏழையெனத் தக்கவர் எவருமில்லை. அரசனளித்த தனத்தைக் கொண்டு ஒவ்வொருவரும் யாகமும் தானமும் செய்து வந்தனர். ஆதலின் நரிஷ்யந்தனுக்கு யாகம் செய்துவைக்கவோ தானத்தைப்பெறவோ தக்க மஹர்ஷிகள் கிடைக்கவில்லை. எப்போது இவன் அவர்களை யாகம் செய்துவைக்க அழைத்தாலும் அவர்கள் யஜ்ஞதீக்ஷிதர்களாகவே இருந்து மற்றவரை அழைத்துச் செல்லுங்கள் எனக் கூறி வந்தனர். அரசன் யஜ்ஞத்திலல்லாது ஸாமான்ய காலத்தில் எவரைக்கண்டாலும் ஏதாவது தானம்செய்து வந்தான். சிலநாள் சென்றபின் அந்த தானத்தையும் பெற எவரும் அகப்படவில்லை. என் செய்வதென்று ஏங்கி மயங்கி அரசன் மிகச்ரமப்பட்டு சில மஹர்ஷிகளை அழைத்து யஜ்ஞசாலை நிர்மாணம்செய்து யாகத்திற்கு ஆரம்பித்தான். ஆங்குவந்த மஹர்ஷிகள்,மற்றும் பலரைக்கொண்டு தாங்களே யஜமானர்களாக தீக்ஷைசெய்துகொண்டு யாகத்தை முடித்தனர். இவனது ஆளுகையில் எண்ணிறந்த யாகங்கள் நடைபெற்றன. எங்குசென்றாலும் வேதத்வனியும் ச்ரௌஷட்கார வஷட்காரங்களுமே நிரைந்திருந்தன. எங்கும் ஸுபிக்ஷமாகவே இருந்தது. யஜ்ஞத்தினால் பரமசந்தோஷ

மடைந்த தேவர்கள் மாதம்மும்மாரி மழை பொழிந்து மாநிலத்தைப் பொன்னிலமாகச் செய்தனர். இவனுக்கு ஸமமாக எதையும் சொல்ல முடியாதென எல்லோரும் இவனைப் போற்றிவந்தனர்.

தமன்

நரிஷ்யந்தனுக்கு இந்திர சேனையினிடம் ஓர் குழந்தை தோன்றியது. அது ஏனைய குழந்தைகளைப் போலல்லாது தாயின் கருவில் ஒன்பதாண்டு தங்கியிருந்தது. அக்குழந்தை பிறந்தவுடன் எல்லோரையும் அடக்கி ஆள்வான் என்பதை ஜாதகக்குறியால் அறிந்த புரோஹிதர் தமன் என இவனுக்குப் பெயரிட்டார். அவன் விருஷபர்வாவினிடம் அஸ்திர வித்யையையும் சக்தியினிடம் வேதத்தையும் ரிஷ்டிஷேணன் என்ற அரசனிடம் இருந்து யோக கலைகளையும் கற்றுணர்ந்தான். இவனது வீர்யத்தைக்கண்ட தசார்ணதேசத்தரசனான சாருவர்மன் தனது பெண்ணான ஸுமனை என்பவளை இவனுக்குக் கொடுக்க நிச்சயித்தான். ஆயினும் க்ஷத்திரிய தர்மத்தைக் கொண்டு ஸ்வயம்வர விதிப்படி அவளுக்கு விவாஹத்தை நடத்த எண்ணி, எல்லா அரசர்களுக்கும் கடிதம் அனுப்பினான். மற்றவர்களைப்போல் தமனும் அங்கு சென்றான். ஸுமனையும் தமனையே வரிக்க, அவன் அங்ஙனமே ஏற்றுக்கொண்டான்.

அப்பெண்ணினிடம் ஆசை கொண்ட வபுஷ்மான் மஹாநந்தனென்ற இருவரும் அவளை இரவில் ஒருவருமறியாமல் தூக்கிச் சென்றனர். ஸ்வயம்வரத்திற்கு வந்த ஏனைய அரசரில் சிலர், இவ்விருவர்கள் செய்தது ந்யாயம் எனக் கூறி அவனை ஆதரித்தனர். மற்றும் சிலர், இது அநியாயமெனக் கூறி அதைக்கண்டித்தனர். தமன், என்னிடத்தில் காமனை கொண்ட ; அக்கன்னிகையை யான் ஏற்றது ந்யாயமே.

சக்தியிருந்தால் மற்றவர் என்னைப் போரில் ஜயித்து அக்கன்னிகையை அடைவது நியாயமேயல்லாது திருடனைப்போல் இரவில் தூக்கிச்சென்றது நியாயமோ? அத்திருடர்களைத் தக்கபடி சிக்ஷிப்பது என் கடமையாகும். ஆதலால் நியாயத்தை நீங்கள் எடுத்துரையுங்கள் என்று ஸபையில் கேட்டான்.

ஸபையில் இதற்கு எவரும் எந்தபதிலும் சொல்லாமலிருக்கக் கன்னியின் பிதா கோபங்கொண்டு ஏன் பேசாமல் இருக்கிறீர்கள்? தெரிந்த தர்மத்தை எடுத்துக்கூருவிடில் நரகத்தை அடைவீர்கள் என்றுரைத்தான். இதைக்கேட்டு சிலர் நீ அவர்களை வென்று அவளை காந்தர்வ விதிப்படி மணந்துகொள்வது நியாயமே என்றனர். மற்றும் சிலர் அப்பெண்ணை ராக்ஷஸ விவாஹப்படி அவர்கள் தூக்கிச்சென்றது நியாயமென்றனர். தமன் என்னை ஜயித்த பிறகு அப்பெண்ணைத் தூக்கிச்செல்லலாமென்று மஹாநந்தன் வபுஷ்மான் என்ற இருவர்களுடன் கடும் போர் புரிந்தான். அவர்களும் தங்களுக் கனுகூலமான அரசர் படையைக் கொண்டு இவனிடம் பயங்கரமாக யுத்தம் செய்தனர்.

முடிவில் தமராஜன் மஹாநந்தனைக் கொன்று வபுஷ்மானை மூர்ச்சையாகும்படி அடித்தான். மூர்ச்சித்து விழுந்தவனை மறுபடி அடிப்பது தர்மமில்லை எனக் கருதி அவனைக் கொல்லாது விட்டுவந்தான். பிறகு தமன் விதிப்படி ஸுமனையை மணந்து ஆங்கு சிலநாள் தங்கி ஊர்வந்து தந்தை தாய்களைப் பணிந்தான். தந்தை இவனது ஸாமர்த்தியத்தையும் பலத்தையும் கண்டு மகிழ்ந்து, இவனுக்கு மகுடாபிஷேகம் செய்து தன் மனைவியுடன் தபோவனம்சென்றான்.

வபுஷ்'மத் வதம்

தமனது வைரியான வபுஷ்மான் ஒரு ஸமயம் வேட்டையாட வனம் சென்றான். ஆங்கு தவம் புரியும் நரிஷ்யந் தனைக் கண்டு தான் விரும்பிய மனைவியைக் கைக்கொண்டு தன்னை மூர்ச்சித்து விழும்படி அடித்த தமனது தந்தையென அறிந்து அவரிடம் கோபம் கொண்டான். உடனே ஆயுத மின்றி தவம்புரியும் அவர் தலை மயிரைப் பிடித்திழுத்து இதோ உன்னைக் கொல்லுகிறேன்! வீரனாய் விளங்கிய தமன் வந்து உன்னைக் காக்கட்டும் என அவர் தலையைக் கத்தியினால் வெட்டினான். இந்திரஸேனை எவ்வளவு கெஞ்சியும் அவனை இவன் லக்ஷியம் செய்யவில்லை. ஆதலால் ஓர் சூத்ரமுனியை அழைத்து இவ்விருத்தாந்தத்தைச் சொல்லி தபஸ்விகளைக் காப்பது அரசர் கடமை. அதிலும் தபம்செய்யும் தந்தையைக் கொன்ற தனது சத்ருவைக் கொன்று அதற்குப் பரிஹாரம் தேடவேண்டும். இல்லையேல் நீ அரசுபுரிவதின் பயன் என்ன? என்று செய்தி யனுப்பினாள். இதைக் கேட்ட தமன் ஆராத்துயரமடைந்து தந்தையைக் கொன்ற பாபியான வபுஷ் மானது ரக்தத்தினால் அவருக்குத் தர்ப்பணம் செய்வேன். அவனது மாம்ஸத்தைக் கொண்டு பிண்டமளிப்பேன் என்று பிரதிஜ்ஞை செய்தான்.

மந்திரிகளை அழைத்து மந்திராலோசனை செய்தான். நால்வகைச் சேனையுடன் சென்று வபுஷ்மானது நகரத்தைத் தாக்கினான். அவனும் எண்ணிறந்த சேனைகளுடன் போர் களம் புகுந்து மிகக் கடுமையாக ஸமர்செய்தான். வபுஷ்மானது புதல்வர்களான ஏழு வீரர்களையும், சேனாதிபதிகளையும் கொன்று குவித்தான். தன்னந்தனியே நின்ற வபுஷ்மானோடு கைகலந்து கடும்போர் புரிந்தான். எவர் ஜயிப்பர், எவர் தோர்ப்பர் என எவருமறியாது மிகப் பயங்கரமாகப்

பலநாள் யுத்தம் நடந்தது. ஆகாயமெல்லாம் பாணவர்ஷத்தி ஞல் நிரைய சந்திர ஸூர்யர்களது கிரணம் பூமியில் படாது நின்றது. முடிவில் தமன் வபுஷ்மானது தலை மயி ரைப் பிடித்துக் காலால் உதைத்து ரிஷியைக் கொன்ற பாபி! பிதாவைக் கொன்ற பாதக! யான் இல்லாதபொழுது என்ன வீரவாதம் செய்தாய்? தமன் வந்து காக்கட்டுமென்ருயே இதோ உனக்கு தமனல் யமன் வருகிருன். உன்னைக் காத் துக்கொள்! என்று கூறி அவன் சிரத்தை அறுத்தான். சப தம் செய்தபடியே ரக்தத்தால் தர்ப்பணமும் மாம்ஸத்தால் பிண்டப்ரதானமும் செய்தான். இவனது வீர்யத்தைக் கண்டு பித்ருக்களும், தேவர்களும் மகிழ்ந்து பூமாரி பொழிந்து ஜயவிஜயீ பவ என ஆசீர்வதித்துக் கொண்டாடினர். இங்ஙன ம் ஸூர்ய வம்சத்துதித்த சூரர்கள் தன்னலமற்று லோ கோபகாரமான கார்யத்தி லீடுபட்டு தர்மபரிபாலனம்செய்து வந்தனர். அத்தகையோரது சரிதத்தைக் கேட்டால் பாப மகலும்; புண்யமுண்டாம். அவர்களா தரித்துவந்த அரிய தர்மத்தில் அன்பு பெருகும்.

புராண ச்ரவண பலம்.

இக்கதைகளை மஹர்ஷி மார்க்கண்டேயர் க்ரௌஷ்டிக் குக் கூறியதாக முனி புதல்வர்களான பக்ஷிகள் ஜைமினிக்கு எடுத்துரைத்தன. நைமிசாரண்ய வாஸிகள் ஸூதபுராணி கர் மூலமாக இதைக் கேட்டறிந்தனர். ஸூத புராணிகர் புராணங்களது எண்ணிக்கையும், ஆங்குள்ள விஷயங்களது சிறப்பையும், அதைக் கேட்பதனலுண்டாகும் பெருமையை யையும் விளக்கிக் கூறினர். பதினெண் புராணங்களுடைய பெயரை ப்ரதிதினம் சொன்னலே பாபமகலும், இம்மார்க் கண்டேய புராணத்தைப் படித்தாலும், படிக்கக் கேட்டா லும், ப்ரஹ்மஹத்தி முதலிய பாபமகலும். இதைச் சொல்

பவரை வேதவ்யாஸராக எண்ணிப் பூஜிக்கவேண்டும். இப்புராணமுடிவில், கோ, ஸ்வர்ணம், வஸ்திரம் முதலியவைகளை அவருக்கு அளிக்கவேண்டும். இல்லையேல் ச்ரவண பலனுண்டாகாததோடு தேவர்களும் பித்ருக்களும் தானம் செய்யாதவர்களைச் சபிப்பார்கள். ப்ரத்யுபகாரம் செய்யாமல் புராணத்தைக் கேட்பது ஞானத்தைத் திருடியது போலாம். அன்றியும் எழுபிறப்பில் ஊமையாகப் பிறக்க நேரிடும். ஆதலின் பக்தி ச்ரத்தையுடன் ச்ரவணம்செய்து, வேதவ்யாஸ பூஜையும்செய்து, அறிவு, சாந்தி, புஷ்டி, ஸம்ருத்தி, செல்வம் முதலிய பலன்களை அடையவேண்டும் என்று உரைத்த ஸூத புராணிகரை நைமிச முனிகள் நன்கு பூஜித்து நலம் பெற்றனர்.

ஸ்ரீ மார்க்கண்டேய புராணச் சுருக்கம் முற்றிற்று.

கார்லண்டு கம்பெனியாரால் அச்சியற்றப்பெற்றது.

அமரகலா விலாஸினீ ஸபை

அன்பர்காள் !

நமது ஸநாதன தர்மத்திற்கு வேராயிருப்பது வேதமும் புராணமுமாம். வேதத்திலுள்ள தத்துவத்தைக் கதை மூலமாகக் கூறுவது புராணம். வ்யாஸர் வகுத்த பதினெண் புராணங்களைப் பண்டிதபாமரர் படித்தறியும் பொருட்டு எளிய தமிழில் எல்லாவற்றையும் வெளியிட நாங்கள் பேரவா கொண்டோம். இம்மா பெரும் பணியில் எங்களைத் தூண்டிவிட்ட இறைவன் உங்களுள்ளக்கோயிலிலும் குடியிருப்பதால் உங்களால் ஆக வேண்டிய உதவியை அவர் செய்விப்பரென்பது திண்ணம். நன்கொடையளித்தோ, பல ப்ரதிகளை வாங்கியோ, பலரை வாங்கும்படி செய்தோ, உதவிபுரிவீர் என உமது அடிபணியும்,

ல. ராமசந்திர சாஸ்திரி
K. கங்காதரய்யர்
பிரசுரகர்த்தர்கள்.

எமது பிரசுரங்கள்.

1.	ஸ்ரீ சங்கரோபதேச ரத்னம்	2—0—0
2.	ஸ்ரீ மார்க்கண்டேய புராணம்	0—6—0
3.	நித்யோபாஸனம்	0—2—0
4.	ஸ்ரீ சங்கர குரு சரிதம்	0—1—0
5.	ஸ்ரீமத்வ ராமாநுஜ சரிதம்	0—1—0
6.	ஹிந்து சாஸ்திராசயம்	0—1—0
7.	மாணவர் கடமை	0—1—0
8.	குமாரஸம்பவ கதா (வடமொழி வசனம்)	0—2—0

பாத்மம் விரைவில் வெளி வரும்.